# மேற்கில் உதித்த கதிரவன் கவிதைகள்

இணுவிலான்
சிகாகோ பாஸ்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கில் உதித்த கதிரவன்
## கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கில் உதித்த கதிரவன் கவிதைகள்

இணுவிலான்
சிகாகோ பாஸ்கர்

பூவரசி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Meatkil Uthiththa Kathiravan Kavithaigal

(collection of poems)

By Chicago Baskar ©

First Edition : Jan 2020

Poovarashi : 216

ISBN No: 978-93-81-322-09-3

Layout : poovarashi

Pages : 164

Price : .....

Printed & Published by

**Poovarashi Publications**

No 2, 2nd Floor, 1st Cross Street, Pushpa Colony,

Saligramam, Chennai - 600 093.

Ph : +91 44 48604455 / +919600131346

Poovarashimedia@gmail.com www.Poovarashi.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையல்



"உதிரத்தில் தமிழூட்டி, பிறந்தபின் பாலூட்டி, தமிழாலே தாலாட்டி, வாழ்வின் அர்த்தத்தை எனக்கூட்டி, பண்பாட்டால் மெருகூட்டி அன்றும், இன்றும், என்றும் எனது கவசமாக, என்னைக் காக்கும் தெய்வமாக, இணுவை "இரத்தினபதி" ஆலயத்தின் தெய்வமாகக் குடியிருந்த என் அம்மாவிற்கு இந்நூலைக் காணிக்கையாக்குகின்றேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

## இலக்கை நோக்கிய கவிஞன்

**ஓர்** இலக்கை நோக்கி இயம்பப்படுவதே இலக்கியம் என்பது பேராசிரியர் செல்வநாயகம் போன்ற அறிஞர்களின் கருத்து, அந்த இலக்கிய இலக்கு இரு வகைப்படும். ஒன்று காலதேச வர்த்த மானங்களைக் கடந்து யாவர்க்குமே பொதுவில் நன்மை பயப்பதாய் அமைவது. மற்றையது ஒரு சமூகத்துக்கு தானெழுங் காலத்தில் அச்சமூகத்தை உலுக்கிக் கொண்டிருக்கும் முதன்மைப் பிரச்சனைகளை அலசும்-செல்நெறிவழிகாட்டுவதாய் அமைவது.

இந்த இருவகை இலக்குகளுள் தானெழுங்காலத்து மக்களை ஆளும் அல்லது அலைக்கும் பிரச்சினைகளை மையப்படுத்தி படைக்கப்படும் இலக்கியங்களே சமகால வாசகர்களால் முன்னுரிமை - முதன்மை கொடுத்துப் படிக்கப்பட்டு, கூடுதல் செல்வாக்குப் பெறுவதோடு, அச்சமூகத்தின் அக்கால கட்ட வரலாற்றாவணமாகவும் நின்று பயன்தரும்.

விடுதலைக்குப் பின் இலங்கையிலும் இந்தியாவிலும் தமிழினம் ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழை, தமிழ்ப் பண்பாட்டு தனித்துவங்களை, நிலப்பரப்புகளை பாதுகாத்துக் கொள்வதை இலக்காகக் கொண்ட இலக்கியங்கள் எழுச்சி பெறத்தொடங்கின. வெற்றியிலக்கை நோக்கி முன்நகர்த்தும் இலக்கியங்களே இக்காலத்தின் உண்மையான - முதன்மையான வரலாற்றைப் படைப்பதோடு, அதனைப் பிற்சந்ததிகளுக்கெனப் பதிவுசெய்து பேணிவைக்கும் இலக்கியங்களாகவும் அமைகின்றன. அத்தகைய ஒரு கனதி வாய்ந்த இலக்கியப் படைப்பே கவிஞர் சண்முக பாஸ்கரனின் “மேற்கில் உதித்த கதிரவன் கவிதைகள்” நூலாகும்.

சுதந்திரத்தை அனுபவிக்கும் ஒழுக்கநடை, மனப்பக்குவம், அதைக்கட்டிக் காக்கும் பொறுப்புணர்ச்சியுள்ளவர்களாக தமிழர் அனைவரும் மாறும்பொழுதே சுதந்திரம் நமக்கு கிடைக்கவும், அது தொடர்ந்து பேணப்படுவதன் மூலம் நம் சந்ததிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தரமாக, நிம்மதியாக வாழவும் முடியும். அத்தகுதிகளைத் தமிழர்களிடையே ஏற்படுத்த வல்ல சீர்திருத்தத்தக்க கருத்துக் களை கவிஞர் இக்கவிதைகளில் நிறைய விதைத்துள்ளார்.

மண்ணின் உறவுகள் அங்கு அன்றாடம்பட்டுவரும் அவலங்கள் பற்றி அதிகம் அறியும் வாய்ப்பற்றவர்களாக வாழும் உறவுகளுக் கெல்லாம் அந்த அவல நிலைமைகளையெல்லாம் உணர்வு பூர்வமாக எடுத்து விளக்குகிறார் கவிஞர்.

தமிழ்க்கவிதைகள் பல, சொல்லின்பம், எதுகை, மோனை, அழகு என்பவற்றால் பல நெஞ்சங்களில் அழியா இடம் பெற்றுள்ளன. உவமை, உருவக, அங்கத அணி போன்ற அணிநயங்களால் பல கவிதைகள் பிரபல்யம் பெற்றுள்ளன. புதுக் கவிதைகள் பல படிமம், குறியீடு, சொற்களின் புதிய அர்த்தங்களிலான பயன்பாடு கள் மூலம் வாசகர்கள் மீண்டும் மீண்டும் படித்துச் சுவைக்கும் பெருமையைப் பெற்றுள்ளன. இந்நிலையில்,

"சொல்புதிது/ பொருள் புதிது / சுவை புதிது,
சோதிமிக்க நவகவிதை"

என்று நவீன கவிதை இலக்கியத்திற்கு இலக்கணஞ் சொன்ன பாரதியாரின் கவிதைகளே அந்த இலக்கணத்திற்கு முதன்மை உதாரணங்களாகவிளங்குகின்றன. கவிஞர் சண்முகபாஸ்கரனின் கவிதைகளும், எதுகை மோனைகளாகவோ, அணியலங்காரங் களாகவோ கவர்ச்சி பெறுவதற்குப் பதிலாக சொல்ல வந்த கருத்துகளை நேரடியாக நெஞ்சைத் தைக்கும்படியாக - மக்கள் வாய்களில் நடமாடும் எளிமையான பழகு தமிழ்ச் சொற்களில் பாடப்பட்டும் தன் மூலம் கவர்ச்சி பெற்றிருப்பது அவற்றின் தனித்துவச் சிறப்பு எனலாம்.

ஆயினும் மரபுக்கவிதையின் உயிர்நாடியான ஓசை, ஒழுங்கு முழுமையாகவும், அதற்கு அழகு சேர்க்கும் எதுகை, மோனைகள் பெருமளவிலும் அமைந்து விளங்கும் "மேற்கில் உதித்த கதிரவன் கவிதைகள்" தொகுப்பாக்கள் மரபுக்கவிதை வகையிலேயே அடங்கும் என்பதில் ஐயமில்லை. இத் தொகுதிக் கவிதைகள் பல அமெரிக்காவின் தமிழ்ச்சங்க கவியரங்குகளில் கவிஞர் பாடியவை. இவரின் இத்தொகுதிக் கவிதைகள் தனிமனித உணர்ச்சிகள், மனஉளைச்சல்கள், உந்தல்களையும், தர்ம ஆ-வேசங்கள், ஏக்கங்களையும் தாங்கியும் அமைந்திருப்பதோடு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவப் போக்கில் சுயதரிசன அலசல்களையும், வாழ்வின் நிலையாமை பற்றிய நினைவூட்டல்களையும் ஆங்காங்கே நிகழ்த்தியிருப்பதை அவதானிக்கலாம்.

70களில் இவர் என்னூரான இணுவிலில் வளர்ந்து கொண்டிருந்த காலத்தில், யாழிந்துக் கல்லூரியில் கற்றுக்கொண்டிருந்த நாட்களில் வ.க.பரமநாதன், நந்தகுமார், சண்முகப் பிரபு, ஆனந்தவரதன் முதலிய நண்பர்களுடன் வந்து, எங்கள் தோட்ட வரம்பில் நின்று, அங்கு பயிர்களுக்கு நீர்பாய்ச்சிக் கொண்டிருந்த என்னிடம் வாய்மொழியாகக் கற்றுக்கொண்ட கவிதை யாப்பறிவோடு கவிதை பாடத்தொடங்கியவர் இவர்.

1975மாசியில் இணுவைக்கந்தன் ஆலயமுன்றலில் மக்கள் சமுத்திரத்தின் மத்தியில் நடைபெற்ற சிவராத்திரி நவரசக்கலை நாடக விழாவில் இடம்பெற்ற கவியரங்கில் மேடையேறிக்கவிதை பாடிய கலை இலக்கியக் கழக இளங்கவிஞர்களில் பாஸகரனும் ஒருவர். என் தலைமையில் நிகழ்ந்த அக்கவியரங்கில் இவர் “வட்டுக்குள் போன வயதில் நான் பாடுவதற்கு கட்டி வந்துள்ளேன் கவிதை” என்று பாடியது 44 வருடங்கள் தாண்டியும் என் நினைவிலுள்ளது. அந்தக் கவிஞர் குழுவும் தொடர்ந்து யாழ்ப்பாணத் தின் நகரங்கள், ஊர்கள் பலவற்றிலும் கவியரங்கங்கள் நடத்தியதை இந்தியச் சஞ்சிகை தீபமும் பாராட்டியது.

இணுவைமண் கலைகளுக்கும், கடவுள் நம்பிக்கைக்கும், தமிழ் மரபு பேணும் வாழ்வியல் ஒழுக்கங்களுக்குமாக உலகத் தமிழ்ச் சமுதாயத்தினால் நன்கறியப்பட்ட தொல்பதி, அந்த மண்ணின் வாசனைகள் இனிதே ஊறிய எழில்கொண்ட கவிஞர் சண்முக பாஸ்கரன் தாயக மக்களின் நல்வாழ்விற்கு உந்துசக்தியெனப் போற்றப்படவும், நமது மண்ணின் மைந்தன் எனக் கொண்டாடப் படவும் “மேற்கில் உதித்த கதிரவன் கவிதைகள்” காலாக வேண்டுமென இணுவைக் கந்தன் இணையடி ஏந்தி வாழ்த்துகிறேன்.

அன்புடன்

**ச. வே. பஞ்சாட்சரம்**

**கனடா. 01.01.2020**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிகாட்டியான சண்முகபாஸ்கரன் எனும் இணுவையூர் கவிஞர்!

**அமெரிக்க** மண்ணில் தமிழ்ப் பணியாற்றி வருபவரும் மண்ணின் நினைவோடு வாழ்பவரும் எழுத்தாளரும் ஆகிய கவிஞர் இணுவையூர் செல்வத்துரை சண்முகபாஸ்கரன் அவர்களின் கவிதை நூல் வெளியிடப் படுவதையிட்டு இவ்வாழ்த்துச் செய்தியை எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். உண்மையில் இது எனக்குக் கிடைத்த மிகப் பெரிய வாய்ப்பு, என்னைக் கேட்காதிருந்தால் பெரிதும் கவலைப் பட்டிருப்பேன். ஏனெனில் எனக்கும் கவிஞர் பாஸ்கரனுக்கும் இடையிலான நெருக்கம் வெறுமனே உறவு சார்ந்ததல்ல.

என் சிறிய வயதில் இருந்தே பாஸ்கரன் அண்ணையின் நகைச்சுவை உணர்வையும் பேச்சுகளையும் அவர் வீட்டில் இருந்தபடியே நேரில் அறிந்து ரசித்தவன் நான்.

1970 காலப்பகுதியில் நான் ஒன்பதாம் வகுப்புப் படிக்கையில் எனது வழிகாட்டியானார் பாஸ்கரன் அண்ணை. ஆம், சுவாமி விவேகானந்தரையும் அவரின் ஆன்மீக வாழ்க்கையையும் எனக்கு அறிமுகம் செய்தவர் அவர் தான்.

இணுவிலில் இருந்து "கலகலப்பு" எனும் நகைச்சுவை மாத இதழ் ஒன்று வெளிவந்தது. அதன் காலம் 1969/1970 ஆக இருக்கலாம், தீசனும் பாஸ்கரும் அதன் ஆசிரியர்கள்.. அதனைத் தொடர்ந்து இணுவிலில் இருந்து "குயில்" எனும் மாத இதழ் வெளியாகியது. காங்கேசந்துறை வீதியில் எமது வீட்டு வளவின் முன்பகுதியில் ஒரு மாடிக்கட்டிடம் கட்டிய போது அதன் கீழ் தளத்தில் சுரபி அச்சகம் ஒன்று செயற்பட்டது. அதன் உரிமையாளரும் பாஸ்கரன் அண்ணையும் நண்பர்கள். அங்கிருந்து தான் குயில் வெளியாகியது. குயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களாக பாஸ்கரன் அண்ணையும் அச்சக உரிமையாளரும் இருந்தனர். இளம் எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் ஓவியர்களையும், அறிமுகம் செய்தது குயில். கோகிலா மகேந்திரன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் போன்றோர் அப்போது குயிலில் எழுதியுள்ளனர்.

அச்சகத்துக்கு அருகில் அதே கட்டிடத்தில் வளரும் பயிர் எனும் பெயரில் விவசாய சேவை நிலையம் ஒன்றை ஆரம்பித்தார். அபோது அங்கே வருகைதருபவரே கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள். அது *1973* காலப்பகுதியாக இருக்கலாம். வளரும் பயிரில் பாஸ்கரன் அண்ணையும் பஞ்சாட்சரம் வாத்தியாரும் உரையாடுவதைக் கேட்பதே சுவாரசியாமனது. இனிய கவிதைகளை இருவரும் சிலாகிப்பர்.

இந்தத் தொடர்பினால் *1975* இல் இணுவிலில் நடைபெற்ற மாபெரும் நாடகவிழாவில் ச.வே. பஞ்சாட்சரம் தலைமையில் அவரால் பயிற்றுவிக்கப்பட்ட இருபதுக்கும் மேற்பட்ட இளைஞர் களின் கவியரங்கேற்றம் நடந்தது. அதில் முதல் கவிஞர் சண்முகபாஸ்கரன் அவர்கள் தான். அந்தக் குழுவில் நானும் இருந்தேன்.

எங்கள் மண்ணினதும் மக்களினதும் மாண்பை மேன்மையுறச் செய்யும் பாஸ்கரன் அண்ணையின் கவிதை நூல் வாசகரை மகிழ்வித்து புலம்பெயர் இலக்கியத்துக்கு அணிகலனான விளங்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.

வாயுரைக்க வருகுதில்லை, வாழி!
நிந்தன் மேன்மை எல்லாம்

**தி. திருநந்தகுமார்**
*அவுஸ்திரேலியா*
*நிறுவனத் தலைவர், அகில இலங்கைக் கம்பன் கழகம்*
*முன்னாள் ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி தமிழ் ஆசிரியர்,*
*ஹோம்புஸ் தமிழ்க் கல்வி நிலையம், சிட்னி*
*22-12-2019*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி

### கவிஞன் பிறக்கிறான்

**கவிஞன்** பிறக்கிறான். கவிஞன் கருத்தினைக் கற்பனையைத் தினமும் பிரசவிப்பவன் எனப் புகழ் பூத்த எழுத்தாளர் "சிற்பி" அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே நல்ல கவிஞன் பிறப்பிலேயே ஆற்றலோடு வருகிறான் என்பது உண்மை. பயிற்சிப் பட்டறைகளால் கவிஞனை உருவாக்க முடியாது. இணுவில் மண்ணில் புலவர்கள் உருவாவது இயற்கை. மிகச் சிறிய வயதிலேயே இலக்கிய படைப் பாளியாக சமூக அந்தஸ்தைப் பெற்றவர் இணுவையூர் பாஸ்கர். கவிதை, சிறுகதை, நாடகம், நகைச்சுவை எனப் பல கலை இலக்கிய நெறிகளில் சிறப்போடு செயற்பட்டவர். கவியரங்க மேடை ஏறி ஆற்றலை வெளிப்படுத்தியவர்.

“கலகலப்பு” சஞ்சிகையின் உதவி ஆசிரியராகவும், “குயில்” சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும் ஈழத்து இலக்கிய சமூகத்தில் எழுபதுகளில் நன்கு அறியப்பட்டவர். அவரது மூத்த சகோதரர் புவியியற் பேராசான் கலாநிதி செ. மனோகரன் அவர்களின் அழைப்பில் அமெரிக்காவில் குடியேறிய போது, தன் தமிழ் ஆர்வத்தைத் தொலைக்காது அமெரிக்காவில் தமிழர் கூடும் மேடைகளில் இவரது குரல் ஒலிக்கும். ஒரு சமயம் “டெக்ஸாஸ்” மாநிலத்தில் நடை பெற்ற தமிழ் விழாவில் இந்தியக் கவிஞர்களோடு இவரது கவியரங்க நிகழ்வை யான் நேரில் கண்டு மகிழ்ந்தேன்.

கலையின்பமே நிலையின்பமாகக் கொண்ட இனிய சகோதரன், கவிஞர் பாஸ்கரன் அவர்கள், தான் எழுதிய கவிதைகள் சிலவற்றைத் தொகுத்து நூலாக வெளியிடுவது அறிந்து மிகவும் ஆனந்தம் அடைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் மீது கவிதொடுத்து, எம்மைக்காக்க காலம் ஏன் தாமதம் என வினா எழுப்பும் இக் கவிஞரின் படைப்புக்கள் நூல் வடிவில் ஆவணமாவது மிகவும் பாராட்டுக்குரிய விடயம். இந்நூல் சிறக்க எங்கள் இணுவில் குல தெய்வங்களையும், தெல்லிப்பளைத் துர்க்கா தேவியையும் வேண்டி எனது நல்லாசிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

"பாட்டுத் திறத்தாலே, இவ்வையகத்தைப் பாலித்திட வேண்டும்"
- பாரதியார்.


**செஞ்சொற் செல்வர்**

**கலாநிதி ஆறு திருமுருகன்**

**(தலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பளை)**
**(தலைவர் - சிவபூமி அறக்கடடளை - இலங்கை)**
**(பேரவை உறுப்பினர் - யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்)**
**(இளைப்பாறிய அதிபர் - ஸ்கந்தவரோதையா கல்லூரி - சுன்னாகம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைப் பரிதி பாஸ்கரன்

**மிகச்** சிறுவயதுதொட்டு கூடிக்குலவி வளர்ந்து, வாலிபத்தின் அழகை ஒன்றாகவே நாம் இருவரும் இரசித்தோம்... வாய்க்கால் வரம்புவரை ஓடி விளையாடினோம்... வரம்பை மீறவில்லை.
சின்னம் சிறு மரங்களில் ஏறிக்குதித்தோம். பெற்றோரை மதித்தோம். சிறு சிறு சம்பவங்களை எல்லாம் மனதில் பதித்தோம்.
அது ஓர் பொற்காலம்.. எமது நாடு அப்போதெல்லாம் ஓர் அமைதிப் பூங்கா. துப்பாக்கியைப் பார்த்ததேயில்லை. வீடுகள் எல்லாம் கூக்குரல் இல்லை. சிறு பிள்ளைகள் அழுதாலும் கூட அயலவர் ஓடிவருவர். இப்போதுபோல வீடுகள் வெறிச்சோடிக் காணப்பட வில்லை. நட்டநடுநிசியிலும் தெருவில் பாடிச்செல்வோரின் குரல்கள் மங்களமாகக் கேட்கும். தெருவில் சாமத்தில் போகின்ற வண்டில் மாடுகள்கூட ஒருவித தாளலயத்துடனே செல்லும் ஓசை கேட்கும். இரவு பன்னிரண்டு மணிக்கு, கதவைத்தட்டினாலும் துணிந்து பார்க்கலாம். இப்போது பகலில்கூட கதவு தட்டுமோசை கேட்டாலும் கதவும் திறக்கமாட்டாது. திறப்பதற்கு யாருமே அங்கில்லையே. இப்படியான சூழலில் வளர்ந்தோம். பகலில் பள்ளிக்கூடம், மாலையில் வீட்டில் கூடிப்பாடுவோம்.

பிள்ளைப் பிராயம் தாண்டி, இளமைப்பருவம். அந்த சுதந்திரம் அப்போதைய இளைஞராகிய எங்களுக்குக் கிடைத்தது. அந்த வயதில் மாயாவியின் மர்ம நாவல் தொடக்கம் ஜெயகாந்தனின் நாவலையும், கல்கியையும், விகடன், கலைமகளையும் வாசிப்போம். எம்.ஜி.ஆர், சிவாஜி படங்களையும் பார்த்து, விமர்சனமும் செய்துகொள்வோம்.

இத்தகைய சூழலில் வளர்ந்த பாஸ்கரனுக்கு யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மேலும் எழுத்துச்சிந்தனையைத் தூண்டியது. பாடசாலையில் படிக்கும்போதே கையெழுத்துச் சஞ்சிகையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்தார். இவரது எழுதுகோலுக்கு, இவர்பெற்ற மிகப்பெரிய பாக்கியமாக இவரின் பள்ளி ஆசிரியர், பிரபல எழுத்தாளர் தேவன்-யாழ்ப்பாணம் அமைந்தார். வழிகாட்டுதல் அத்திவாரமாக இருந்தது.

தனது வீட்டிலே தன் அன்னையார் வாசிக்கும் இலக்கியச் சஞ்சிகைகள், இவரின் வாசிப்புக்குச் சாமரம் வீசியது. தாயாரின் தொடர் வாசிப்புத்தான் இவரது கருவில் மரபணியாக (genes) ஒட்டிக் கொண்டதெனக்கொள்ளலாம். அதனால்தான் பிராயம் இருபதில் இவர் தனது நண்பனாகிய தீசனுடன் இணைந்து, "கலகலப்பு" என்ற நகைச்சுவைப் பத்திரிகையை ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தில் அப்போது செங்கோலோச்சிய நகைச்சுவைப் பத்திரிகையாகிய "சிரித்திரன்" பத்திரிகையோடு கலகலப்பு வீரநடைபோட்டது. கலகலப்பு பத்திரிகையைப் பயன்படுத்தி, ஓர் கூட்டம் பெரிய சலசலப்பை இலங்கை அரசியலில் ஏற்படுத்திவிட, அதனைக் கைவிடும் துர்பாக்கியம் இவர்களுக்கேற்பட்டது. கலகலப்பில் ஏற்பட்ட சித்திரம் வரையும் பயிற்சிதான் இப்போதும் கணனியூடாக இவர் வரைவதை ஊக்கப்படுத்தி வருகிறது. இவர் படம் வரைந்து, எழுதும் துணுக்குகள் அன்றுபோல, இன்றும் எம்மைச் சிரிக்கவைத்து, சிந்திக்கவும் வைக்கின்றன. அதில் இவர் வரையும் சித்திரங்கள் பிரபல கலைஞர் கோபுலுவை சிலவேளைகளில் நினைவூட்டுகின்றன.

கவிதைப்பயிற்சியை இவர் இலங்கையின் பிரபல எழுத்தாளர் "ச. வே.பஞ்சாட்சரம்" அவர்களிடம் கற்று, அவர் தலைமையிலேயே கவியரங்கத்தில் பங்குபற்றினார். இவ்வாறு திரு பாஸ்கர் அவர்கள் பல திறமைகளைத் தன்னிடம் பொக்கிசமாகக் கொண்டுள்ளார். கவி புனைதல்,கதை,கட்டுரை படைத்தல், ஓவியம் கீறுதல் ஆகிய பல ஆளுமைகளைத் தன்னகத்தே இவர் கொண்டு விளங்குகின்றார்.

பல்கலை வேந்தராகப் பரிணாமம் பெற்றுள்ள இவர் சிறுமைகளைக் கண்டும், அடக்குமுறைகளைக் கண்டும் துள்ளியெழுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியமைப்பைச் சாடுகின்றார். வறுமையில் வாடும் பலருக்கு, அமுதசுரபியாக தன்னாலான உதவிகளைச்செய்கிறார். தனது பிள்ளைகளையும் செய்யத்தூண்டுகின்றார். இவரது படைப்புகள் பல சங்கதிகளைச் சொல்லும். அதற்காக எனது வாழ்த்துப்பூக்களை இவருக்குச் சொரிகின்றேன்.

"ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி ஆதியனைய கலைகளில் உள்ளம் ஈடுபட்டென்றும் நடப்பவர், பிறர் ஈன நிலைகண்டு துள்ளுவார்" என்ற மகாகவி பாரதியின் கவிதைக்கு இவர் இலக்கணமாக விளங்குகின்றார்.

இணுவை ச. சிறீ ரங்கன்
(இலண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி

**தமிழ்** வளர்த்த சான்றோர் பலருண்டு
தமிழ் எங்கள் வாழ்வென்றே சிலருண்டு!
தரணியிலே தமிழ் சொல்லும் நாடெல்லாம்
தந்தது பார் கவிஞர் பலர் பெயர் சொல்ல!

அமெரிக்க வாழ் தமிழர் என்றே வாழ்கின்றோம்
அருமைத் தமிழுக்கு விழா எடுப்போம்
தமிழர்தம் ஆதங்கம் பொங்கிடுமே!
ஆரவாரக் கவியரங்கம் புகழ் பாடும்!

செல்வதுரை பாசுகரனின் உணர்ச்சி வெள்ளம்
கரை புரண்டு ஓடிடுமே இதயந் தொட்டே!
ஈழத்துக் கதையெல்லாம் உணர்வாகி
புலிப் பெருமை பாடியதில் பெருமையுண்டு!

இனப்படுகொலையைக் கண்டித்த முழக்கமெல்லாம்
இருண்டு விட்ட காலத்தின் இதய வலி
கண்களில் நீர் வந்தும் கலங்குகின்ற
நெஞ்சத்தில் கரை சேர வழி தேடும்!

கவிதைகளைப் படைத்து விட்டுக் கைகட்டி
நிற்க வேண்டாம் வழியுண்டு புறப்படுவோம்
தமிழர் இல்லா நாடு இல்லை தமிழர்க்கு
நாடு காண்போம் காலத்தின் கட்டளை!

கவிஞர் பாசுகரன் கவிதை போன்றே
தமிழ் வாழ தமிழர் வளர
தமிழ் மக்கள் உழைத்திடுவோம்
எதிர்காலம் வழி வகுக்கும் கவலை வேண்டாம்!

அன்புடன்
சோம. இளங்கோவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

**தேமதுரத்** தமிழோசை உலகெல்லாம் பரவிச்செல்ல வேண்டும் என்று ஆவல் கொண்டவன் மகாகவி பாரதி. அவனது கனவு நனவாகி விட்டது. எனது வாலிப பருவத்து நண்பன் இணுவையூர் பாஸ்கர் பிறவிக் கலைஞன். கடந்த 40 ஆண்டுகளாக அமெரிக்காவில் வாழ்ந்தாலும் தமிழ் உணர்வோடு வாழ்பவர். தாய்மொழி மீது அவர் கொண்ட காதலை யான் நன்கு அறிவேன். அவரது சகபாடிகளிலொருவராக யான் ஊர்வலம் வந்த அந்த நாட்களிலேயே அவரது கவித்துவம், கலைவெளிப்படுத்தல் சக்தியைக் கண்டு வியந்துள்ளேன். கவிதை வடிவத்திலேயே கடிதம் எழுதும் வழக்கம் அவருக்குரிய தனித்துவம். இத்தகைய ஆற்றலாளன் தெய்வீகத் திருத்தலங்கள் மீது தான் யாத்த கவிதைகளைத் தொகுத்து நூல்வடிவமாக வெளியிடுவது கண்டு மிக மகிழ்ச்சியடைகிறேன். பாஸ்கரன் அவர்களின் கவிதைகள் மட்டுமல்ல, அவரது நகைச்சுவைத் துணுக்குகளும் நூல் வடிவம் பெறவேண்டும் என்பது எனது பேரவா. தமிழின் அழகை மெருகூட்டும் பாஸ்கரனின் கவிவரிகள் என்றும் சிறக்க எனது இதயபூர்வமான வாழ்த்துகளைச் சமர்ப்பித்துக் கொள்கின்றேன்.

ஆ.குகமூர்த்தி
தலைவர்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம்.
(இலங்கை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத்தின் கண்களும் திறக்கும்

**பாஸ்கரன்** அவர்கள் தமிழ் மீதும் தமிழர் நலன் மீதும் மிகவும் பற்றுள்ளவர். சிகாகோ தமிழ்ச்சங்கத்தில் மிகத் தீவிரமாக உழைப்பவர். சிகாகோ பெரு நகரில் ஆங்காங்கு உள்ள ஈழத் தமிழர்களை உணர்வால் ஒன்றிணைத்து மொழி, பண்பாடு, கலை ஆகியவற்றைப் போற்றுதல் மட்டுமின்றி ஒருவருக்கொருவர் பாதுகாப்பாக வாழ உறுதியோடு செயல்படுபவர். உரிமைகளை இழந்து, வாழ்வாதாரங் களை இழந்து அவதியுற்றுக்கொண்டிருக்கும், ஈழத்தில் உள்ள தமிழர்களுக்கும் தன்னால் இயன்ற உதவிகளைத் தொடர்ந்து செய்து வருபவர்.

சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் பொன்விழா, வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 32 ஆம் தமிழ் விழா மற்றும் 10 ஆம் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஆகிய முப்பெரும் விழாவிற்கு அவரின் அளப்பரிய உழைப்பு, பாராட்டத்தக்கதாகும். விழா மலரக் குழுவில் சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் சார்பாக முழு நேரமாகப் பணியாற்றினார். நம் சங்க முன்னோடிகளுடன் அயராது தொடர்புகொண்டு, கட்டுரைகள் சிறப்பாக அமைய உதவியாக இருந்தார். அவரும் "முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்" என்ற கட்டுரையை, ஈழத் தமிழர்களின் நிலைமை பற்றி உலக மக்கள் அனைவரும் அறிந்து கொள்ளட்டும் என்று விழா மலருக்காக எழுதினார். விழா மலர்க் குழு உறுப்பினர்கள் எழுதும் கட்டுரை விழா மலரில் இடம் பெறாது. அப்படி இடம் பெற்றால், மலர்க் குழுவுக்காக உழைத்தாலும், குழு உறுப்பினர் பட்டியலில் அவர் பெயர் இடம் பெறாது என்று விழா மலர்க் குழு முடிவெடுத்த நிலையில், மலர்க் குழு பட்டியலில் தன் பெயரா அல்லது ஈழத்துத் தமிழர்கள் பற்றி உலகறிய வேண்டும் என்று தான் எழுதிய கட்டுரையா என்ற நிலையில், பட்டியலில் தன் பெயர் போடவேண்டாம், விழா மலரில் தான் எழுதிய கட்டுரையைப் போடுங்கள் என்றார். தமிழர் மீதான அவரின் உணர்வு மெய்சிலிர்க்க வைத்தது.

தன்னுடைய சமூக உணர்வுகளைக் கொட்டி எழுதுவது அவருக்குப் புதிதல்ல. தன்னுடைய கருத்துக்களும் உணர்வுகளும் பிறரிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றடைய வேண்டும் என்றால் அது எழுதுவது மூலமாகத்தான் முடியும். அதுவும் கவிதையாக வெளிப்படுத்தும் போது படிப்போர் மனதைக் கவ்வும். சமுதாயப் பிரச்சினைகளானால் நம்மை விழிப்புற செய்யும். அந்தப் பணியைத்தான் கவிஞர் தற்போது சிறப்பாகச் செய்துள்ளார்.

இக் கவிதை நூலில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கவிதையும் சிறப்பான கருத்துகளை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டுக்காக ஒரு சில கவிதைகளைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"உலகத்தின் கண்களும் திறக்கும் - நாளை உண்மை உணர்ந்திடும் காலம் பிறக்கும்!" - என்ன அருமையான தலைப்பு. நம்பிக்கை ஊட்டும் தலைப்பு . கவிதையைப் படிக்கும் ஒவ்வொரு தமிழனும், தன் நெஞ்சு, முட்களால் கீறப்படுவதாகவே உணர்வான். விடியும் நாளை எதிர் நோக்கி காத்திருப்பான். நம் வாழ்க்கையில் முன்னேற, நம் நாடு நலம் பெற அதற்கான முன்னோடிகளைப் பற்றி தெரிந்து கொள்ளவேண்டும். கலமும் கலாமும் பற்றிய கவிதை நமக்கு ஊக்கத்தைத் தருகிறது. நரகாசுரனை வதை செய்ததால் கொண்டாடப் படும் தீபாவளி பண்டிகை, எவ்வாறு குடும்பத்தலைவனை வதை செய்கிறது என்பதான கவிதை நம் மனைவி மக்களை நன்றாகச் சிந்திக்கவைக்கும். இவ்வாறு ஒவ்வொரு கவிதையைப் பற்றியும் கூறிக்கொண்டே போகலாம் . கருத்துக்களை அனைவரும் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் சொல் நயம், பொருள் நயம் கொண்டு எழுதியுள்ளார் என்பது சிறப்பு.

அவரின் உயர்வான சிந்தனைகள், மேலும் பல கவிதை நூல்களில் வெளிப்பட்டு நம் சமூக நலனுக்கு வித்திட வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். கவிஞர் பாஸ்கரனின் பணி மேலும் சிறப்படைய என்னுடைய அன்பான வாழ்த்துக்கள்.

**மணி குணசேகரன்**

**தலைவர்**
**சிகாகோ தமிழ்ச்சங்கம்**
**(அமெரிக்கா)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிது அரிது

**அரிது** அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்பது போல பேரன்புக்குரிய உயர்திரு பாஸ்கரன் அவர்கள் ஏழை பணக்காரன் சாதி மத பேதமின்றி அனைவரோடும் அன்பால் அரவணைத்து பண்போடு தானும் வாழ்ந்து, பிறரையும் பண்போடு வாழவைக்க, இனிய சொல்லோடு பேசியும், இன்முகம் காட்டியும், உயர்வு தாழ்வு மனப்பாங்கு என்பது என்னவென்றே தெரியாமல் வாழும் மனிதர்களில் இவரும் ஒருவர்.

நாடுகடந்து போனவர்கள் பலர் நாட்டையும், நாட்டு மக்களையும் மறந்திடுவார்கள் ஆனால் இவரோ நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் தமிழையும் தமிழ் உறவுகளைப் பற்றியுமே தினமும் சிந்திப்பவராக வாழ்பவர்.

பொதுவாகச் சொல்லப் போனால், என்னையும் கூட எனது உணவுப் பணிகளை இந்த உலகறியச் செய்து, நல்லோர்களிடம் என்னை, எனது பணிகளை வாழ்த்துவதோடும் எல்லாப் புலம்பெயர் உறவு களையும் என்னை, எனது பணிகளை உற்று நோக்கிடச் செய்த உத்தமர் இவர். இவரை போன்ற நல் உள்ளங் கொண்ட நட்புகளிடம் ஏழைகளுக்கு உதவிட முன் வாருங்கள், வாருங்கள் என்றபடியேதான் எப்போதும் இருப்பார்.

இவரது கவிதைத் துளிகள் இவரது நகைசுவைத் துணுக்குகள் எல்லாம் தன் சுயசிந்தனையில் மிகநுட்பமாக துல்லியமாகச் செதுக்கி வடிவமைந்திருக்கும் இந்த புத்தகம் பலரின் வெற்றிப் படிகளை வெளிஉலகிற்க்கு புத்தக வடிவில் வலம் வருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைவதோடு இவரை வாழ்த்திட, எனக்கு வயது இல்லை, படிப்பு இல்லை, பட்டம் இல்லை, அந்தஸ்தும் இல்லை, ஆனாலும் சிவருசியை அனைவரிடத்திலும் ருசிக்கவும் அனைவரையும் என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடி வந்து சந்தித்து வாழ்திடவும் நல்வழிகாட்டிய உத்தமரை நான் வாழ்த்தி வணங்குவது எனக்கு இறைவன் தந்த வரமே.

வாழ்த்துகிறோம
அன்போடு உங்களால் உருவாக்கப்பட்ட சிவனின் பிரதிநிதி

**இணுவையூர் சிவருசி சுப்பிரமணியம் சசிகுமார்**

**ஈழத்திலிருந்து** வந்த இந்த தமிழர்
ஆழமான சமூக சித்தனை உடையவர்
பிறந்த நாட்டிற்கு நிறைய செய்ய ஆர்வம் கொண்டவர்
புகுந்த நாட்டில் புலம் பெயர் தமிழருக்கு உதவியவர்
முக நூலில் தனது அக எண்ணங்களை தயங்காது பதிவு செய்பவர்
ஈழத்தில் பத்திரிகை ஆரம்பித்து அமெரிக்காவில் மாத இதழும் வானொலியும் தொடர்ந்தவர்
வில்லுப் பாட்டிலும் அமெரிக்க தமிழ்ச் சங்கங்களில் கவிதை, பட்டி மன்றங்களிலும் ஈழத் தமிழனின் பெருமையையும் அன்றைய நிலைமையையும் பறை சாற்றியவர்
எல்லாவற்றிற்கும் மேலாக வெளிப்படையான இயல்பும் எப்போதும் உதவும் மனமும் உறவையும் மற்றவரையும் மதிக்கும் குணமும் நிறைந்த ஒரு மனிதர்!
தமிழ் மொழிமேல் ஒரு மோகம் கொண்ட இவரின் கவிதைகளை வாசிக்க
இந்த கவிதைத் தொகுப்பின் மூலம் நம் கனவும் நிறைவேறுகிறது!
பாஸ்கருக்கு நம் வாழ்த்துக்கள்!

- பாலா
(அமெரிக்கா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நம்** கவிஞரின் சொற்களிலே தீப்பொறி பறந்துள்ளதைப் பலமுறை கண்டிருக்கிறேன். கவிதை என்னும் திரி கொண்டு, நல்ல கருத்துக்களை வெடித்துக் காட்டுவதில் வல்லவர் அவர்.

அமைதியான மனதினில்தான் ஆழமான சிந்தனைகள் சுரக்கும் என்ற சூட்சுமம் தெரிந்திட்ட நம் கவிஞர், எளிய சொற்களைக் கொண்டு தன் மனதுக்கு ஒத்தடம் கொடுக்கும் "இதைவிட என்ன வேண்டும் மனமே?" மூலம் தனது சுபாவத்தை அவரே விளம்பிவிட்டார். ஆண்டவனுக்காக எழுதப்படும் கவிதை என்பதாலோ என்னவோ, "அரோரா பதி வாழும் ஆண்டவனுக்கு" குறையேதுமில்லாத கவிதையாகவே அதனைப் படைத்துவிட்டார்.

நடுத்தரவர்க்க, அதுவும் புலம்பெயர்ந்து பிழைப்பு நடத்துகிறவர்களுக்கு தீபாவளி போன்ற பண்டிகைகள் எப்படி துயரமாய்ப் போகின்றன என்ற உண்மையை நகையாக விளக்கியிருப்பது அவரது மற்றொரு இயல்பு. நாட்டு நடப்புக்களைப் போலவே, சிறந்த தலைவர்களையும் இக்கால இளையருக்கு கவிதை வழி அறிமுகப்படுத்துவதில் கவிஞர் வல்லவர் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு "வான்புகழ் கலாம்" கவிதை.

நம்மை ஆளாக்கியவர்களை, வாழ்வு தந்தவர்களை, தம் உயிர் கொடுத்து நம் உயிர் காத்தவர்களை ஒருபோதும் மறவாமல், வாய்ப்புக் கிடைக்கும் மேடைகளிலெல்லாம் நமது கவிஞர் எப்படி கதறிக்கதறிக் கவி பாடியிருக்கிறாரோ அந்தத் தருணங்களையெல்லாம் என் கண் எதிரே விரித்துக் காட்டியது "உலகத்தின் கண்களும் திறக்கும்" கவிதை.

கவிஞரின் சீற்றம் வழி, மாற்றம் ஒரு நாள் இந்த மண்ணில் நிகழும் என்பதே நம் எல்லோரது மனக்கண் முன் ஓடிக்கொண்டிருக்கும் கனவுக் காட்சி. நிச்சயம் ஒரு நாள் நிறைவேறும் என்பதுதான் இந்தக் கவிஞர் காலமெல்லாம் நமக்குச் சொல்லிக்கொண்டே வரும் தொடர் செய்தி. கவிஞரின் ஆசைகள் நிறைவேற அன்பான வாழ்த்துகள்!

"அமெரிக்கன் பாப்பையா"
அகத்தியன் ஜான் பெனடிக்ட்
மேனாள் தலைவர்,

வாசிங்டன் தமிழ்ச் சங்கம்
(அமெரிக்கா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணுவிலில்** பிறந்து, அமெரிக்காவில் வாழும் என் இனிய நண்பர் பாஸ்கரன் அவர்களின் கவிதைத் தொகுப்பிற்கு வாழ்த்துரை எழுதுவதில் மிகவும் பிரமித்தம் கொள்கின்றேன்.

கவிதைகளை சுவாசிக்கத் தெரியாவிடடாலும் வாசிக்கத் தெரிந்தவர். இன்றைய வாழ்க்கை சூழ்நிலை சுமைகளிலிருந்து, மனம் விடுபட்டு உடலிலும் உள்ளத்திலும் புத்துணர்ச்சி வருவதற்கு நாம் தேடிச் செல்லும் இடம்தான் கோவில்.

இலங்கைக் கோயில்களைப் பற்றி அழகான தமிழில் அணிவகுக்கும் கவிதைகள், நம் மனதில் பக்தி மணத்தைப் பரப்புகிறது.
இலங்கைத் தமிழர்கள் பற்றிய கவிதைகள் கண்ணீரை வரவழைக்கின்றன. நெருப்பின் மேல் நின்று போராடுகிறார்கள்! அந்தி வானத்திலிருந்து விடுபட்டு சூரியோதயமாக எழுச்சியுடன் வருவார்கள். வாழ்வார்கள் என்று வாழ்த்தத் தூண்டுகிறது.

சில கஷடங்களை காது கொடுத்துக் கேட்கக் கூடத் தேவையில்லை. அன்போடு தோள் கொடுத்து சொல்வதைக் கேட்க ஒரு நல்ல உறவு இருந்தால் போதுமானது. அத்தகைய உணர்வைத் தருகின்றன சமூக அக்கறையுடன் எழுத்தப்பட்ட கவிதைகள். காயம் பட்ட மனதிற்கு மயிலிறகு வருடலாய் சாமரம் வீசுகின்றன. அழகிய மலர்களால் கோர்க்கப்பட்ட பூமாலையாக கவிதைகள் நம்மைப் பரவசப் படுத்துகின்றன. காலத்தால் அழியாத என் நண்பனின் எழுத்துப் பணி, வாழ்க, வளர்க. அனைவரும் படித்து பயன்பெறுக என்று அன்போடு வாழ்த்துகிறேன்.

அன்புடன்
பா. சாந்தாராம் (அமெரிக்கா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாசுகரன்** கவிதைதனுக்கு மாலை ஒன்று
கனிந்து காலத்தோடு கலந்திடக் காத்திருக்கும் கவிதை மாலைக்கு

பொல்லாத மனிதர்தம், சொல்லவும் இயலா கொடுமை
கண்டனுபவித்து சோர்ந்தது எம்மனம்!
சொல்லிதான் களைத்திட்டோம் எல்லா மனிதரிடமும்,
உலகு வாழ் எல்லா மனிதரிடமும்!
வாழ்வில் கயவர் பலரைக் கண்டிட்ட போதிலும்
காத்திருந்தோம், காத்திருந்தோம் காலமெல்லாம்
காத்திருந்தோம்! கனிந்து வந்த நினைவு (கனவு)கள்
கதையாகிப் போயின! கவிதை ஒன்றே, கவிதைகள் பலவே
களைத்திட்ட மனத்தை, முன்நோக்கி சென்றிடடா
என்றிட்டதுவே! முகம் கண்டிடா நாட்டவர்தாம், முகம்
வாடாது காத்திட்டார் எம்மையே! என ஆண்டு பலவாக,
இம்மண்ணில் இனமொன்றே, என்றதோர் ஒற்றுமையில்
வாழ்ந்திட்ட என் நண்பர் "கவிதை மாலை" யொன்று
தொடுத்திட்டார்! மனம் விம்மிடா நாளில்லை, விதியென்றே
தள்ளிவிட தமிழரென்றே பிறந்திட்ட "தன்மான"மும் தடை
ஒன்றை தவறாது முன்நிறுத்தியது! தமிழ் மானம், இனமானம்
காத்திடத்தான் காலமெல்லாம் களைத்திடாது களமாட,
அறவழிக் களமாடிட "உலகின் கண்களும் திறக்கும் - நாளை
உண்மை உணர்ந்திடும் காலம் பிறக்கு" மென நண்பரவர்
தம்முடனே தவறாது நின்று, இனம் இழந்த பெருமை காத்திட"

கடல் கடந்து வாழ்ந்தாலும் - எங்கள்
வியர்வைதனைக் காணிக்கை யாக்கி
சுடரேற்றிச் சிந்தையில் சுமையேற்றி - உங்களை
துதித்து உங்கள் வழி நின்றிடுவோம்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றேகூறி நம்பிக்கை நலஞ்சூழநண்பரவர்
கவிதை மாலைதனை
இனவெற்றியாகிடும் அந் நாளில் உங்களுக்கே அணிந்து
மகிழ்ந்திடுவோம், நண்பரையுமே வாழ்த்திடுவோம்!

**பாபு.வ.ச.**
**(அமெரிக்கா)**

**அன்பான பாஸ்கர் அண்ணருக்கு!**

நோர்வேயிலிருந்து நல்ஆசிகள் பற்பல!
கலகலப்பு! குயில்! என பல தமிழ்இதழ்களிலே கனமான முத்திரைகள் ஈழத்தில் பதித்திட்டீர்! பலமான நகைச்சுவை நாடகங்கள் மறப்போமா?
பலாப்பழமாய் தித்திக்கும் தங்கள் உரையாடல்!
பன்முகத்திறமைகள்! இன்சொல்!விருந்தோம்பல்! பண்பாடு!
பல்கலைக்கழகமாய் குடும்பம்! உறவுகள்! என்ன தவம் செய்தோம்!
உம் உறவாய்ஆனதற்கு!
என்றும் ஏற்றம் பெற்றீர் எங்கும் எவர்க்கும் உதவினீர்! என்றென்றும் கவிஞராய்! கலைஞராய் நீடுவாழி!

நல்லையா சண்முகப்பிரபு.
சிவன்தமிழ்ஆலயம், சிவயோகி ஆசிரமம்,
மின்னசுண்ட், நோர்வே.

Mobile/WhatsApp:+47-91784271 shanmugappirabunalliah@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஸ்கரன் என்றொரு மானுடன்

**பொருள்** மேம்பாட்டை மையப்படுத்தி கால ஓட்டத்தில் சமூக அக்கறையற்று, வரலாறு படைக்காமல், மண்ணோடு மண்ணாவதை விட தனக்கென்று ஒரு பாதையை அமைத்து வாழ்க்கையை அர்த்தமாக்கி, சமூக நோக்கத்தோடு வாழ்க்கையை நடத்தி வரலாற்றில் தடம் பதிப்பதே சிறப்பு. அந்த வகையில் பாஸ்கரன் அண்ணாவின் சமூக சிந்தனை அவரை மற்றவர்களில் இருந்து பிரித்து, இனம் காட்டி நிற்கிறது. வெளிநாடுகளில் பாஸ்கரன் அண்ணா இணுவிலின் ஒர் அடையாளமாகக் காணப்படுகிறார்.

தனது எழுத்தாற்றலால் தனித்துவமான நகைச்சுவை அணுகு முறையினூடாக எத்தனையோ வாழ்க்கைத் தத்துவங்களைத் தந்து முகநூலில் பதித்துவருகிறார். அவற்றில் என்னைக் கவர்ந்த சிலவற்றை உங்களோடு பகிர ஆசைப்படுகிறேன்.

இணுவில் சீனிப்புளிய மரத்தினூடாக தன் உணர்வுகளைப் பகிர்ந்த கட்டுரை, அண்மையில் வெளியிட்ட இசை பற்றிய வியக்கவைக்கும் தொகுப்புரை, இவரின் தனித்துவமான பொன்மொழிகள்.

“கடவுளைக் கையெடுத்து வணங்கும் போது நான் ஒரு பக்தன்
ஏழைக்கு கையெடுத்துக் கொடுக்கும்போது நான் ஒரு கடவுள்!”

“எப்படி இருக்கிறாய் என்பது பெரிதல்ல,
என்ன செய்கிறாய் என்பதே உயர்வு!”

“என்ன படித்தாய் என்பது உயர்வல்ல, அதன்மூலம் என்ன செய்தாய் என்பதே சிறப்பு!”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எத்தனை காலம் வாழ்கிறாய் என்பது வாழ்வல்ல, அதுவரை என்ன சாதித்தாய் என்பதே உனது வரலாறு!”

“ஆட்டு மந்தைகள் போல கூட்டமாக ஓடாமல் எங்கள் சிறப்பறிந்து நாம் நாமாக இருக்க முயற்சிப்போம்.”

“தேடிச் சோறுநிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ?” என்ற பாரதியின் பாட்டுக்கு அமைய தனக்கென ஒரு பாதையை வகுத்து, தான் பிறந்த மண்ணுக்கும் மொழிக்கும் மக்களுக்கும் தன்னாலான உதவிகளைச் செய்து வாழ்ந்துவரும் இவரது அர்த்தமான வாழ்க்கை என்னை வியக்க வைக்கிறது.

பாஸ்கரண்ணா இல்லாமையிலும் இருப்பது கண்டு, உடல் நலமும், மனநலமும் பெற்று, பல்லாண்டு வாழ்ந்து சமூகம் உய்யப் பாடுபட வாழ்த்துகிறேன்.

“ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்” - குறள்

**அன்புத் தம்பி**

**இணுவையூர் பதஞ்சலி நவேந்திரன்.** **[லண்டன்]**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதவன்** உலகை சுற்றிவர ஒளிபரவும்...
இடமெல்லாம் தமிழ் ஒலி கேட்கிறது....
தமிழை மூச்சாக நினைத்து...
கடல் கடந்தும் முத்தமிழ் ஆர்வலர்
தமது கடனை திறம்படச் செய்கின்றனர்...
கலகலப்பாக நகைச்சுவை மூச்சாக
கதை, கவிதை, நாடகம், கவியரங்கம்
தந்த பாஸ் எனும் பாஸ்கரன் தரும்
மேற்கில் உதிக்கவைக்கும் கதிரவன்
உலகமெங்கும் பிரகாசிக்கட்டும்.

- கலகலப்பு - தீசன் -
(ரொரன்ரோ - கனடா)
டிசம்பர் 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழை வாயிலில்...

**பிறந்த** மண்ணை விட்டு நாற்பத்து மூன்று வருடங்கள் பிரிந்தாலும் என் தாய்த் தமிழை விட்டுப் பிரியாது, எனது மண்ணும் மக்களும் மனதில் என்றும் நிறைந்திருக்க, தமிழில் தவழ்ந்து, கலையில் உறைந்து, புலமது பெயர்ந்து, கடலைக் கடந்து, அமெரிக்காவில் விழுந்து, விஸ்கான்சினில் வளர்ந்து, சிகாகோவில் சிறந்து, முடியினைத் துறந்து, வாலிபத்தை இழந்து, வயோதிபத்தை அடைந்து, நாடற்று உலகெங்கும் அகதிகளாகவும், அநாதைகளாகவும் பரந்து வாழ்கின்ற எட்டுக் கோடித் தமிழர்களில் ஒருவனாக நானும் ஒருவன்!

படிக்கப் படிக்க இனிக்கும், பேசப் பேசச் சுவைக்கும், எழுத எழுதத் தூண்டும், கேட்கக் கேட்க மயக்கும், என் தமிழ் மொழிக்கு பல அறிஞர்களும் கவிஞர்களும் எழுத்தாளர் களும் செய்த மாபெரும் பணிகளில் எனது பணி மிக மிகச் சிறியது. இருந்தும் கடல் தாண்டி, கையோடு கொண்டுவந்த தமிழை, இந்த மண்ணிலும் பதியம் வைத்துப் பாதுகாத்து வளர்த்தெடுத்ததில் பங்கு எனக்கிருக்கிறது என்ற சிறு பெருமையுடன் என் மனதில் முகிழ்க்கும் உணர்வுகளையும் எதிர்காலத்தின் பிரதிபலிப்பாகத் தோன்றும் கனவுகளையும், தூண்டுகோலாக வழிகாட்டி அரும்பும் சிந்தனைகளில் கோலமிடும் நினைவுகளையும், சின்னச் சின்ன ஆசைகளையும், மண்ணில் பதித்து வந்த சுவடுகளின் முனகல்களையும், ஏக்கங்கள், தாக்கங்கள், ஏற்றங்கள், ஏமாற்றங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னல்கள், இன்பங்கள், கோபங்கள், ஆத்திரங்கள், சிரிப்புகள் போன்றவற்றையும் தமிழால் வடிகட்டி, இக்கவிதைநூலாக உங்கள் கைகளில் தந்திருக்கிறேன். இந்நூல் வர்த்தக ரீதியில் விற்பனைக் கல்ல; உங்கள் இதயங்களில் விதைப்பதற்கே! ஒரு சிலரையாவது எனது கவிதைகள் சிந்திக்க வைக்குமென்றால் அது போதும்! மனம் தேறும்! குறையிருக்கலாம், குற்றங்கள் பல இருக்கலாம். மன்னித்து நல்லவற்றைக் களைந்தெடுத்து மனதில் விதையுங்கள்! என்னோடு பகிருங்கள்.

தமிழே என் மூச்சு, தமிழே எனது பேச்சு என்ற ஆங்காரத் தொனியும், ஈழத்துத் தமிழனென்ற இறுமாப்பும், கவித்துவத்தால் மண்ணை இலங்கவைத்த பெருமையும், ஆன்மீகத்தால் மிளிர்ந்த பிரகாசமான பார்வையும், சொல்கின்ற வார்த்தையில் கொப்பளிக்கும் எழுச்சியும், புரட்சிக் கவிஞர் பாரதியின் துடிப்பும் நக்கீரரின் மிடுக்கும் கொண்ட என் தமிழ்க் கவிதையின் ஆசான் கவிஞர் பஞ்சாட்சரம் அவர்கள் சுகயீனமுற்று இருந்தபோதும் எனது படைப்புகளைப் பார்வையிட்டு ஆலோசனை தந்து, முழு மூச்சாக எனது கவிதைகள் பிரசுரிக்க வேண்டும் என்று ஊக்கமும் உற்சாகமும் தந்த ஆதரவிற்கு எனது நன்றிகள்.

எனது தமிழ் ஆர்வத்தையும் ஆழத்தையும் ஆரம்பத்தில் இருந்தே அறிந்து, எனது படைப்புகள் யாவும் பிரசுரிக்கப்படவேண்டும் என்று தினமும் ஆதரவு தந்ததோடு, என் குறிக்கோள்களிலும், வெற்றிகளிலும் சாதனைகளிலும் என் பின்னேயிருந்து ஊக்கப் படுத்தியும் வலியும் வேதனையும் என்னை வாட்டியபோது என்னைத் தாங்கிக் கைத்தடியாகவும் விளங்கும் எனது மனைவிக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்நூலைப் படைப்பதற்கு ஊக்கமும் உந்துசக்தியாகவும் உதவியாகவும் இருந்த அனைவருக்கும், அணிந்துரை, ஆசிச் செய்திகள், வாழ்த்துரைகள் என வழங்கி என்னைக் கௌரவித்த அனைவருக்கும் ஓவியங்கள் தந்துதவிய நண்பர் சண் சுந்தரம், நண்பர் பாலா, பெறா மகள் தாட்சாயினி அவர்களுக்கும் புகைப்படங்கள் தந்துதவிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களுக்கும் இந்நூலினை அழகிய முறையில் வடிவமைத்து உருவாக்கித் தந்த ஈழவாணி அவர்களுக்கும், பூவரசி பதிப்பகத்தினர்க்கும் அன்னைத் தமிழால் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நன்றி

அன்போடு
**இணுவிலான்**
**சிகாகோ பாஸ்கர்.**

**6130 Potomac Place,**
**Racine. WI. 53406.**
**USA**
**chelvadurai@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

## பகுதி–1
## ஆன்மிக அருட்டல்கள்


பல்லப்பா உன்னை மறப்பேனோ?
கும்பவிழா காணுகின்ற குமரா- கொடுத்து
வைக்கலையே பார்ப்பதற்கு விதிதான்!
அன்னையவள் மணியோசை அயலெங்கும் கேட்கும் அன்றன்று
செய்த வினைகள் அப்பொழுதே நீங்கும்!
அரோரா பதி வாழும் ஆண்டவனே.
தும்பிக்கையான் தம்பி நம்பிக்கை தருவானாம்
மறுபடியும் பிறந்தெம்மை இரட்சிக்க மாட்டீரா?
நொச்சியொல்லைக் கந்தனே.
வரம்கொடுத்து தீர்ப்பாய் வேதனை.
வாழ்கையும் வெறுமையே நீயின்றி முருகா!
வேலவா வினை தீர்ப்பவா.
தேர் திருவிழாவை முன்னிட்டு.
இணுவைக் கந்தன் புகழ்ப் பாமாலை.


## பகுதி–2
## தாய் மண் தாகம்


நிலமென்னும் நல்லாள்!
உதை படு தமிழா உதைபடு!
உலகத்தின் கண்களும் திறக்கும் - நாளை
மனிதன் என்பவன் தெய்வம் ஆகலாம்!
உறவுகள் செழிக்க ஆர்த்தெழு நீ.
தமிழால் இணைந்தோம்.
நாளை விடியலிலே பொங்கும்.
தமிழுக்கு அடையாளம் கண்டாய்.
தமிழ்ப்பெண்.
உன்னோடு நான் வாழவேண்டும்!
என்ன வேண்டும் மனமே?
ஞானம்!
வாழ்வை நிறைவு செய்திடு!
தீராத கனவு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி 3

## வாழ்வின் வருடல்களும் வலிகளும்

வாழ்வு இசைக்கும் யாழாய்...
வாழ்வை இரசித்தல்
ஈழத்தில் பொங்கல்
வேரினைத் தேடியே ஆழத்தை ஆராய்ந்து கண்டவா!
மலர்கிறேன் நெஞ்சம்!
நீ வேண்டும்!
கடல் கடந்த (க) விதை.
உள்ளத்தால் உயர்ந்த வள்ளல்!
முதல் நோக்கு.
ஈகை தரும் உயர்வை வலி தரும் பொறுமை.
மனிதம் மலரும்.
படுக்கையில் பக்குவமாய் பேசி பல்லிளித்துக்
கேட்கிறாள் என் மனைவி!
காலப் படைப்பாளி கமலாகரன்.
ஏன் விட்டுப் பிரிந்தாயடா?
வரலாறு படைக்கும் உழுந்து வடையே!
வான்கோழி விடுமுறை!
கோழி தமிழில் கூவாதா?
விண்வெளிக் கலம்.
தமிழ் போல வாழ்க!
எங்கிருந்தாலும் வாழ்க!
அடுத்தவர் வலியை நீ தாங்கு.

எனக்கென்ன? உனக்கென்ன?
ஒன்று சேருவோம் தமிழா.
தெய்வத்தின் பிரதிநிதியாய் வாழும் ஞானி.
பக்தன்-கடவுள்!
வாழ்க்கை.

மானுடத்தின் கவிதை.
சுவடுகள்.
அலை கடல் கடந்தாலும் அடையாளம் வேண்டும்!
என் நன்றி இவர்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுதி-1
# ஆன்மிக அருட்டல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லப்பா உன்னை மறப்பேனோ?

**பிறந்த** மண்ணைப் பிரிந்தாலும்
புகுந்த மண்ணில் சிறந்தாலும்
பலரும் போற்ற வாழ்ந்தாலும்
பல்லப்பா, உன்னை மறப்பேனோ?

அதிகாலை உன் மணி ஒலிக்கையிலே
துயில் நீங்கியே நான் எழுந்திருக்க
கதிரோடு கதிரவன் ஒளி பரப்ப
விடிகின்ற வேளை மறப்பேனோ?

சந்தியில் இருந்து காத்திருப்பாய்
சஞ்சலம் தீர்த்து வைத்திருப்பாய்
வந்திடும் பக்தர் குறைதீர்ப்பாய்
வையிரவா உன்னை மறப்பேனோ?

கேட்டவை பலதைக் கொடுப்பவரே
கேளாமலும் அள்ளித் தருபவரே
பாட்டினைப் பாடவும் வைத்தாயே
பாராமல் உன்னை வாழ்வேனோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயது முதல் என் மனம் தொட்டு
குறையே வாழ்வில் என்றும் காணாது
பெருமளவு அருள் அள்ளியும் தந்த
குலதெய்வம் உன்னை மறப்பேனோ?

நல்லவனை, எங்கள் நாயகனை
வல்லவனை வாழ வைப்பவனை
உள்ளவனை என்னுள் உறைந்தவனை
பல்லவனை என்றும் மறப்பேனோ?

துன்பங்கள் தீர்க்கும் நாயகனே
துயரங்கள் வந்தால் துடைப்பவனே
இன்பத்தை அள்ளித் தருபவனே
இனியும் உன்னை மறப்பேனோ

அலை கடல் தாண்டி வந்தாலும்
ஆயிரமாய் நான் உழைத்தாலும்
மழையாய் பொழியும் உன் பக்தி!
மறந்திடுவேனோ உன் சக்தி?

தினமுனைப் பணிந்தவள் தாயன்றோ?
வணங்கிட வைத்தவள் அவளன்றோ?
மனதில் நிறைந்தவன் நீயன்றோ
கணமும் உன்னை மறப்பேனோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைக்கு வந்தங்கு போவோரும்
சாமான்கள் விற்றிட வருவோரும்
சந்தித்து வணங்கிடும் சந்நிதியை
சிந்திக்காமல் நான் இருப்பேனோ?

பெட்ரோல் வாசம் ஒரு பக்கம்
புகையிலை நாற்றம் மறு பக்கம்
சந்தைச் சந்தடி முன் பக்கம்
சகித்தங்கு அருள்வதை மறப்பேனோ?

(வேறு)

பயணம் போக வணங்கிச் சென்றதும்
பரீட்சை எழுதப் பணிந்து போனதும்
காதல் கனியக் கும்பிட்டு விரைந்ததும்
காவல் தெய்வமே உன்னை மறப்பேனோ?

பூவோடு வருவோரை அர்ச்சிப்பதும்
பூவோடை போவோரை இரட்சிப்பதும்
பாவாடைப் பெண்களை காவல் புரிவதும்
மருதனார் தெய்வமே என்றும் மறப்பேனோ?

கலவரம் வருவதும் காத்து நிற்பதும்
பலவரம் கொடுத்துப் பாது காப்பதும்
சுக பலம் தந்து நோய்கள் தீர்ப்பதும்
சந்தியின் நாதனே உன்னை மறப்பேனோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னால் துலங்கும் மருதனார் மடம்
கண்ணால் கண்டதும் அருள் வருமிடம்
துன்பங்கள் தீர்க்க வருவார் உன்னிடம்
நினைக்காத நாளில்லை நானும் இவ்விடம்

வெள்ளி என்றாலே துள்ளி வரும் கூட்டம்
அள்ளித் தருவாரே கையில் குழை சாதம்
சொல்லிக் கொடுப்பாரே பஜனைப் பாடல்கள்
புல்லரிக்குமே சேர்ந்தால் உன்பாதம்

(வேறு)

எப்போதுமே உன்வாசல் திறந்தன்றிருக்கும்
முக்காலப் பூசைக்கும் பக்தர் வரவிருக்கும்
இக்காலம் இப்போது சிறைதானே உனக்கும்
என்செய்வேன் காலத்தின் கட்டாய மாக்கும்

கயவர்கள் கள்ளர்கள் அங்கு நடமாட
அயலவர்கள் பயந்து உன்னை மன்றாட
அனுமாரும் வந்துள்ளார் உன் துணையாக
அதனாலே குவிந்திட்டார் பலர் கூட்டமாக.

பல்லியப் புலமென்ற ஓர் காணி தன்னில்
ஆசியள்ளி அருள் தந்தெம்மைப் பாலிக்க
காசிநாதர் கட்டிவைத்த சிறு கோயிலது
பல்லப்பரானதை நான் மறப்பேனோ?



மருதனார் மடம் - பல்லப்ப வைரவர் - 1970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லப்பர் அருள்கொண்ட அப்பையயர் தம்
நற்பணியால் உருவான பெரும் ஓர் கோயில்
மணியத்தார் உழைப்போடும் மெருகேறியே
சிவகுமார் தம்மால் சிறப்புற்றது உருமாறி.

கடல் கடந்து நானிங்கு வந்தாலும்
உடன் வந்து என்னோடு அருள்தந்து
விடேன் என்று மனதோடு எப்போதும்
இருக்கின்ற துணைதனை மறப்பேனோ?

பல்லப்பராய் இணுவையைச் சேர்ந்தாலும்
நல்லப்பராய் உடுவிலாய்ப் பிரித்தாலும்
வல்லப்பராய் வணங்கும் மெய்யப்பனே
அருளப்பனே உன் கருணை மறப்பேனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கும்பவிழா காணுகின்ற குமரா- கொடுத்து வைக்கவில்லையே பார்ப்பதற்கு விதிதான்!

**கும்பவிழாக்** காணுகின்ற குமரா– கொடுத்து
வைக்கவிலையே பார்ப்பதற்கு விதிதான்!
உடனிருந்து பார்க்கலையே வலிதான்– நாங்கள்
கடல் கடந்து வந்துவிட்டோம் குறைதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுமயில் ஏறிவரும் பொழுதும் – இனுவை
மக்களெல்லாம் சூழவரும் அழகும்
ஆறாது நெஞ்சமெலாம் வேகும்– அதனை
காணாது நினைவென்றும் நோகும்!

அர்ச்சகர்கள் மந்திரங்கள் ஓத– தீப
ஒளியினிலே ஆறு முகம் ஒளிர
அரோகரா என்று மக்கள் கூற– அந்த
ஒலியினிலே தீமை எல்லாம் விலக,

கோயில் மணி காற்றினிலே தவழும்– எங்கள்
வீட்டினது நினைவு வந்து மோதும்,
தாயுடனே வணங்க வந்த காலம் – எனது
சிந்தையிலே தங்கிவிடும் நாளும்

தேரினிலே ஏறிவரும் அழகும்– பின்னால்
பாடிவரும் பக்தர்களின் ஒலியும்
ஆடிவரும் காவடிகள் ஆட்டம்– எல்லாம்
காண்பதற்கு என்மனதில் நாட்டம்

கோபுரத்துக் கலசமது ஜொலிக்க – உனது
கோயில் மணி செவிதனிலே ஒலிக்க
அர்ச்சகர்கள் மந்திரங்கள் ஜெபிக்க – ஒருநாள்
வந்திடுவோம் அருள்புரிவாய் கந்தா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னையவள் மணியோசை
அயலெங்கும் கேட்கும் அன்றன்று செய்த
வினை அப்பொழுதே நீங்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலையெட்டிப் பார்க்கும் நம் யாழ்குடா நாட்டில்
விலையில்லா மண்ணில் என்றும் வரலாறு படைத்து
வருகின்ற அடியார்கள் தீவினைகள் நீக்கும்
அருளன்னை சிவகாமி பாதத்தைப் பணிவோம்

அன்னையாய் எழுந்தருளி அஞ்சேல் என்றெமக்கு
இன்னல்கள் தீர்த்து என்றும் இனிய வரம் தருவாள்
அபயக் கரம் அளித்து ஆதரிக்கும் சக்தியவள்
கூப்பிட்ட குரலுக்கு எம்மைத் தேடிவரும் தேவியவள்

வாழைக்குள் ஒளிந்தவனாம் மகுடா சூரன்தனைத் தேடி
உலா வரும் காட்சிகாண வேண்டுமே கண் கோடி
வீடுவீடாய் சாத்திரம்மா பிடியரிசி சேர்த்து
கோபுரமாய் அமைந்தாளே அன்னை சிவகாமி

சிதம்பர வளவில் சீராக வாழும் சிவகாமி அம்பாள்
அருள் தியாகராசா சுவாமிகளின் பக்திப் பஜனையோடு
பவனி வரும் தேரும் தொடர்ந்து வரும் தீர்த்தமும்
பார்த்திடவே பரவசம் பொங்கி யெங்கும் பெருகும்

அன்னையவள் மணியோசை அய லெங்கும் கேட்கும்
அன்றன்று செய்த வினை அப்பொழுதே நீங்கும்
அன்னையருள் பெற்றவர்கள் அகில மெங்கும் வாழும்
அற்புதங்கள் கண்டு அவள் புகழை என்றும் பாடும்!


இணுவையில் அமைந்துள்ள ஒரே ஒரு சக்தி பீடம்
சிவகாமி எழுந்தெமக்கு அருளுகின்ற இந்தக் கூடம்
காரைக்கால் சிவனோடு இரு பிள்ளைகள் சகிதம்
காக்கவென்று காத்திருக்கும் அன்னையே சரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரோரா பதி வாழும் ஆண்டவனே

அரோரா பதி வாழும் ஆண்டவனே – எம்மை
அனுதினம் அருள் தந்து காப்பவனே!

அலைகடல் கடந்துவந்து ஆசி வழங்கும் தெய்வமே
ஆதரித்து வாழ்வை இலங்க வைக்கும் அண்ணலே
இலினொய் மாநிலத்தில் எழுந்தருளும் இறைவனே
அரோரா பதி அமர்ந்து ஆட்சி செய்யும் கண்ணனே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்கள் குறை தீர்த்துப் பரிந்தருளும் பாலாஜி
பணிந்தோம் நாம் வந்தங்கு பாடினோம் உன் புகழே
துன்பம் வரும் பொழுதெல்லாம் தேடி தொழுதிட்டால்
இன்பம் தேடி, வந்து எம்மைச் சேர்ந்திடுமே!

வாழ்விற்கு வழிகாட்டும் தெய்வமே வெங்கடேசன்
ஆழ்மனம் புகுந்தெம்மை ஆண்டவனே சீனிவாசன்
ஊழ்வினையின் பயன் போக்கும் உத்தமனே நம்நேசன்
வீழ்ந்து விடாதெமையென்றும் காப்பவனே மலைவாசன்

விக்கினங்கள் தீர்த்தருளும் விநாயகர் ஒருபக்கம்
முக்திக்கு வித்திடும் எம் முருகனும் மறுபக்கம்
சிவனும் பார்வதியும் சேர்ந்தமர்ந்த வடபக்கம்
சக்திகள் சூழ்ந்திருக்க சடகோபா அருள்வாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்திசை பார்த்திருக்க இருப்பது அங்கே நவக்கிரகம்
உட்திசை பார்த்த வண்ணம் எழுந்துள்ளான் அனுமான்
படிகள் பதினெட்டின் மேல் அமர்ந்துள்ளான் ஐயப்பன்
அடியார் வினை தீர்க்க எழுந்துள்ளான் மணிவண்ணன்!

எங்கிருந்தோ பக்தர்கள் வந்து தொழும் கோவிலிது
பொங்கல் வடை தோசையுடன் வரவேற்கும் புதுமையிது
பஞ்சவடி கூடத்துடன் அமைந்திருக்கும் பொதுமையிடம்
அஞ்சேலென்று அருள்வழங்கும் ஐயன்தன் திருக்கோவில்!

உறவுகளைப் பிரிந்து விட்டு வந்திருப்போர் பல விதத்தோர்
குறைகளைக் கொண்டு வந்து கொட்டுவார் பல இனத்தோர்
வரமளித்து வாழ்வு தந்து காப்பவன் நம் கண்ணபிரான்
உறங்கி எழும் போதெல்லாம் ஒரு கவசம் அவனேதான்!

பார்த்ததும் எம் உள்ளத்தில் பரவசம் பரந்தோங்கும்
பெரும் தோற்றம் தனைக் கண்டு பேரின்பம் பெருகியெழும்
கேட்டதும் அவன் நாமம் பிரவகிக்கும் கண்ணீர் வெள்ளம்
வாழ்க்கையே விளங்கிடும் வந்திங்கு தரிசனம் கண்டால்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தும்பிக்கையான் தம்பி நம்பிக்கை தருவானாம்

(பல்லவி)

நல்லூர்ப்பதி வாழும் நாயகனே - என்றும்
நல்வினை தருவான் வேலவனே!
பல்லோர் துதிக்கும் பாலகனே
பாவங்கள் போக்கும் வேலவனே (நல்லூர்ப்பதி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சரணம்)

ஏறு மயில் ஏறி ஓடி வருவானாம்
ஆறு தலைத் தரவே தேடி வருவானாம்
கூடும் அடியார்கள் குறைகள் தீர்ப்பானாம்
பாடும் தமிழ் கேட்க நாடி வருவானாம்! (நல்லூர்ப்பதி)

பக்தியால் துதிப்போரின் பாவம் தீர்ப்பானாம்
பக்கத்தால் போனாலும் சஞ்சலம் குறைப்பானாம்
சக்தியின் வேலினால் வினைகள் அறுப்பானாம்
முக்தியை தந்தெங்கள் பிறவி தவிர்ப்பானாம் (நல்லூர்ப்பதி)

தேரில் வரும் காட்சி பார்க்கின் பெரும் பயனாம்
பாரில் தரும் இன்பம் அதற்கும் நிகரேதாம்
வானில் உயர்ந்தோங்கி நிற்கும் கோபுரமாம்
ஊரின் முடுக்கெல்லாம் முழங்கும் மணிதினமாம்! (நல்லூர்ப்பதி)


தும்பிக்கையான் தம்பி நம்பிக்கை தருவானாம்
துன்பங்கள் தீர்த்தென்றும் அபயத்தை அளிப்பானாம்
அம்பிகை அளித்த வேலால் பாவங்கள் அழிப்பானாம்
அன்புள்ளம் கொண்டோரின் இதயம் அமர்வானாம்!
(நல்லூர்ப்பதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுபடியும் பிறந்தெம்மை இரட்சிக்க மாட்டீரா?

பாலனவன் பிறந்ததனால் பாவங்கள் பறந்தோடும்
பைபிளது வழிகாட்ட வருடங்கள் காத்திருந்தோம்
கடல்கடந்து வந்தபின்னும் கண்கலங்கி நிற்கின்றோம்
உலகெங்கும் பாவங்கள் மலிந்திருக்கும் மாயமென்ன!

சொல்லுக் கடங்காத கொடுமைகள் தலைதூக்க
பொல்லாத பாவங்கள் பாரினில் குழி தோண்ட
தள்ளாடும் மனித இனம் தவறான வழிபோகும்
கொடுமைதனை நீக்கிடவே வந்திடுவாய் மேரிமைந்தா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவனே நீயுறையும் ஆலயத்தை அழிக்கின்றார்
மாண்டவரின் தூபியையும் மண்ணோடு புதைக்கின்றார்
நானென்ற ஆணவத்தால் நல்லவற்றை மிதிக்கின்றார்
வாழ்வினைத் தொலைத்துவிட்டு தவிக்கிறோம் வந்துபாரும்1

வடதுருவக் கிழவனுக்கும் வயதின்று போயாச்சாம்
உடைமைகளும் உரிமைகளும் அவர்பொதியில் இருக்காதாம்
சோற்றுக்கே உறவுகள் தவியாகத் தவிக்கின்றோம்
பிதாமைந்தா! மீண்டுவந்து இரட்சிக்கப் பிறக்காயோ?

பொல்லாத அரசாட்சி பாரெங்கும் கோலோச்ச
இல்லாத அரக்ககுணம் இன்றெங்கும் மேலோங்க
சொல்லிலே அடங்காத கொடுமைகளும் தலைதூக்க
பல்லைக் கடித்தபடி நாம் வாழ்வதா பிதாமைந்தா?

உரிமைகளைக் கேட்டதனால் இழந்தோம்நாம் பல உயிரை
உடைமைகளை அழித்தன்று கொலைசெய்தார் பலபேரை
நாதியில்லை எமக்கென்று சாய்த்து விட்டார் நீதிவேரை
பாதியினம் அழிந்துபோச்சே கர்த்தரே காத்தருளும்!.

பசியின் கொடுமையைத் தீர்ப்பதற்கு யாருமில்லை
நோயின் வேதனையை நீக்குதற்கும் எவருமில்லை
விதியின் பயனென்று சொல்வதெல்லாம் வேதமில்லை
பாவம் தீர்ப்பவரே பாரிதனைக் காக்கீரோ?

மாட்டுத் தொழுவத்தில் பிறந்தவரே மேரிமைந்தா
காட்டு மரத்தடியில் வாழ்கின்றார் பலரின்று
கண்திறந்து பாருமையா கண்ணீரின் வலிதெரியும்
உண்மைதனைப் பார்ப்பதற்கு இன்னும் ஒருமுறை வாரீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொச்சியொல்லைக் கந்தனே


நெஞ்சமெல்லாம் நிறைந்த நொச்சியொல்லைக் கந்தனே.
அஞ்சுகின்றோம் இன்று கூடச் சூரருக்கு ஐயனே
எந்த நேரம் என்ன நேரும் யாம் அறியோம் உண்மையே
கந்த சஷ்டி கவசம் பாடி துதிக்கின்றோம் உன்னையே!

சந்தனத்தால் பூசை செய்து துதித்த எங்கள் மண்ணிலே
சிந்துகின்ற குருதி இல்லா நாட்கள் இன்று இல்லையே
வேலெடுத்து வினைகள் தீர்க்கும் வேலவனே முருகனே
வாளெடுத்து வெட்டுவோரை துவம்சம் செய்வாய் தீரனே!

குண்டு போட்டுத் துவம்சம் செய்தார் குலமழித்து மண்ணிலே
செல்லெறிந்து கொன்றுவிட்டார் இரண்டு இலட்சம் தமிழரை
எண்ணடங்கா இழப்புகள் நாம் ஏற்றுள்ளோம் போரிலே
கண்திறந்து கவசமாகக் காத்தருள்வாய் கந்தனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரம்கொடுத்துத் தீர்ப்பாய் வேதனை

(பல்லவி)

நல்லவா நல்லூர் வாழ்பவா – நாளும்
வல்லவா அருள் பொழிபவா
வேலவா வினை தீர்ப்பவா – நம்மை
ஆள்பவா நலம் காப்பவா (வேலவா)

(சரணம்)

கூப்பியோர்க்குக் கைகொடுக்கும் வேலனே – கூடும்
பக்தருக்கு வினையறுக்கும் பாலனே
காப்பதற்கு ஓடிவரும் குமரனே – பாடும்
பாடலுக்கு ஆடி வரும் கந்தனே! (வேலவா)

ஆறு தலை கொண்டவனே அழகனே – பெரும்
ஆறுதலைத் தந்திடுவாய் ஐயனே
தேடிவரும் பக்தர்களின் மெய்யனே – மாலை
சூடிவரும் வீதிவரும்அழகனே! (வேலவா)

சஞ்சலங்கள் போக்கி வரும் சரவணா – எங்கள்
சிந்தை வாழும் சண்முகனே அரோகரா
கந்தசட்டி கவசம் போற்றும் கந்தனே – எங்கும்
பொங்கும் தமிழ் போற்றுகின்ற தெய்வமே
(வேலவா)

வேலெடுத்து வெற்றிகண்ட வீரனே – இன்று
யாழ்கிடைத்த மண்ணில் ஏனோ சோதனை
மயிலெடுத்து உலகை வலம் வந்தவா – என்று
வரம்கொடுத்து தீர்த்து வைப்பாய் வேதனை
(வேலவா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையும் வெறுமையே நீயின்றி முருகா!

வேலவா வேலவா போற்றி - நல்லூர்
வேல்கண்டு தேர்கண்டு உருகினேன் போற்றி!
பக்தர்கள் புடைசூழக் கூடி - ஏறி
தேர் வரும் காட்சியே என் வாழ்வின் மீட்சி! (வேலவா)

காவடி ஆட்டங்கள் முன்னால் - பசனை
கேட்பது இசையுடன் தேருக்குப் பின்னால்
பிரதட்டை தொடர்ந்திட அசையும் - அரோகரா
சத்தமும் முழங்கிட உலா வந்து சேரும் (வேலவா)

மயிலேறி வரும் காட்சி கண்டேன் - என்றன்
மனமெலாம் சிலிர்த்திட மாற்றமே கொண்டேன்
உயரத்தில் கோபுரம் கண்டேன் - அந்தக்
காட்சியில் அன்று நான் என்னையே மறந்தேன்
(வேலவா)

கனவிலும் நினைவிலும் முருகா - என்றன்
பாடலும் பாடுது உன்னையே அழகா
மனதெங்கும் நிறைந்தாயே எழிலா - எங்கள்
வாழ்க்கையும் வெறுமையே நீயின்றி முருகா!
(வேலவா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலவா வினை தீர்ப்பவா

(பல்லவி)

நல்லவா நல்லூர் உறைபவா - நாளும்
வல்லவா அருள் பொழிபவா
வேலவா வினை தீர்ப்பவா - நம்மை
ஆள்பவா நலம் காப்பவா.

(சரணம்)

வேலெடுத்து வெற்றிகண்ட வீரனே - இன்று
யாழ்கிடைத்த மண்ணில் ஏனோ சோதனை
மயிலெடுத்து உலகை வலம் வந்தவா - எமக்கு
வரம்கொடுத்து தீர்த்து வைப்பாய் வேதனை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூப்பியோர்க்கு கைகொடுக்கும் வேலனே – கூடும்
ஐ. நா சபை தேடி வாராய் தெய்வமே
காப்பியங்கள் பாடவேண்டும் ஐயனே – எமக்கு
நீதியங்கு கிடைக்கவேண்டும் மெய்யனே.

சாட்சியங்கள் எத்தனையோ உள்ளன – அவை
பொய்ப்பதற்கு உலகம் இன்றோ உறுதுணை
வீழ்ந்து கிடக்கும் நீதிதன்னை தூக்குவாய் – நாளை
ஐ, நா சபையில் எமது துயர் நீக்குவாய்.

ஆறு தலை கொண்டவனே அழகனே – பெரும்
ஆறுதலைத் தந்திடுவாய் ஐயனே
தேடிவரும் பக்தர்களின் மெய்யனே – வெற்றி
தந்திடுவாய் வீதி வரும் அழகனே.

தேரில் ஏறி பவனிவரும் கந்தனே – நாளை
ஊரில் பொங்கி நிலவ வேண்டும் இன்பமே
பாரில் தலை தூக்கவேண்டும் தர்மமே – வேளை
வந்ததென்று மகிழ வேண்டும் தமிழனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவைக் கந்தன் புகழ்ப் பாமாலை

மணியோசை கேட்க மங்களம் முழங்க
தேரேறி வருகிறான் முருகன்
அலங்காரத் தேரில் அசைந்தாடி அழகன்
அருள் அள்ளித்தருகிறான் அருமை!

ஊர் கூடி இன்று இழுக்கின்ற தேரைப்
பார்த்திடப் பாவங்கள் போகும்
பார் வாழும் பக்தர் பெறுவோமருளை
நினைப்பதால் சிந்தையில் குகனை!

வடவீதி தன்னில் வட மிழுக்குங்கால்
அடிக்கின்ற மேளங்கள் கேட்கும்
துடிக்கின்ற நினைவும் துளிர்க்கின்ற கண்ணும்
எங்களை வெளிநாட்டில் வாட்டும்!

அறுமுகம் கொண்டு அருளள்ளித் தருவாய்
தேறுதல் நாமிங்கு கண்டோம்
பெறுதற்கும் அரிய பேறுகள் பெற்றோம்
தேரினில் கண்டதும் கந்தா!

இணையிலா இணுவில் வாசனே மருகா
உனதடி இன்று நாம் பணிந்தோம்
துணையிலா எங்கள் உறவுகள் காக்க
தேரினில் எழுந்தாய் முருகா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசிலாப் பக்தர் தீதின்றி வாழ
முருகனே தேரினில் வருவாய்
விலையிலா அடியார் பாவங்கள் தீர்த்து
விழி மலர்ந்தெங்களைக் காப்பாய்!

மஞ்சத்தில் உலாக்கொள் முருகனைக் கண்டேன்
நெஞ்சத்தில் நிறை காட்சியும் கண்டேன்
கொஞ்சிடும் அழகினில் மெய்யும் மறந்தேன்
கணினியில் ஐயனைத் துதித்து மகிழ்ந்தேன்!

அரோகரா ஒலிக்க மின்குமிழ் ஜொலிக்க
அடியவர் கூட்டம் கடலெனத் திரள
அற்புதக் காட்சி அகத்தினில் கண்டேன்
அகமது குளிரக் கண்கள் நனைத்தேன்!

இணுவையின் இறைவா இதயத்துள் தேவா
அனுதினம் அடியவர்க்கு அருள்வோய்
கனவினில் நினைவில் சிந்தையில் இருப்போய்
தேனினும் இனிய என் செந்தமிழ்க் குரவா!

ஆண்டுகள் பற்பல கழிந்து போனாலும்
அலைகடல் தன்னை தாண்டி வந்தாலும்
கலைவளம் கொண்ட மஞ்சத்தை மறக்கோம்
விலைமிகு இணுவிலை என்றும் துறக்கோம்!

சந்நியாசியார் செய் மஞ்சத்தில் வருவோய்
சண்முகனே எமது சங்கரன் புதல்வா
மஞ்சத்தில் அமர்ந்து மனமெங்கும் நிறைந்தாய்
வதைபடும் ஈழம் என்றும் காப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுதி-2
# தாய் மண் தாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலமென்னும் நல்லாள்!

**தா**யாகத் தாங்கியென்னை வளர்த்தவளே – தூய
தமிழை யெங்கள் மண்ணில் பொங்க வைத்தவளே
ஓயாத வளங்களள்ளித் தருபவளே – என்றும்
சாயாத வளந்தாங்கும் நிலமென்னும் நல்லாளே!

தமிழுக்கு விழாவெடுக்கும் பொன்னாளே – இங்கு
தமிழர்கள் ஓடி வந்து ஒன்று கூடும் திருநாளே
தரணியெங்கும் முரசுகொட்டும் பெருநாளே – இன்று
தமிழரெல்லாம் மீளவுமே தலைநிமிரும் நன்னாளே!

விழாக்காண வந்திருக்கும் பெரியோரே – தமிழின்
விழாத்தன்னை அலங்கரிக்கும் தகைசால் அவையோரே
தமிழெடுத்துக் கவிதொடுத்து வந்துள்ளேன் – ஈழத்தாய்
மண்ணின் குடிமக்கள் கவிபாட நின்றுள்ளேன்!

(வேறு)

தரணியெங்கும் பரந்துசிறந்து வாழ்பவர்கள் – என்றும்
தமிழைப்பேசி தமிழராய் வாழ்பவர்கள்
தாய்மண்ணின் நினைவோடு இறந்தவர்கள் – இன்று
அனைவரையும் பணிந்திங்கு பாடுகிறேன்!

முதுமையது வந்து மூப்பைக் கண்டும் – கரிய
முடியது இழந்து நரையதுகொண்டும்
நாற்பது வயதைத் தள்ளியே வைத்து – எனக்கு
வாலிபம் தந்த தமிழ்மகளே வணக்கம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடம்புரண்ட கனவோடு படலை விட்டு – பெரும்
விழுதுவிட்ட நினைவோடு வீட்டைவிட்டு
கடல்கடந்து இங்குவந்த கோழைதான் – நான்
ஊரைவிட்டு ஓடிவந்த பாவிதான்!

நிலமகளே, நல்லவளே! பொறுத்திடுக – உன்னைக்
காத்துவரும் நல்லவரைக் காத்திடுக
பாவியென்னை மன்னித்து விட்டிடுக – காறிக்
கண்டபடி என்முகத்தில் உமிழ்ந்திடுக!

தலைகுனிந்து நிலைகுலைந்து நிற்கின்றேன் – இன்று
அலைகடந்து அகதியாக வாழ்கின்றேன்
முலைதந்த மண்ணதனை நினைக்கின்றேன் – குற்றும்
முள்ளின்மீது வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்!

சொந்தமாக நாடு இல்லை இன்றெம்மிடம் – பெரும்
மந்தைபோல அலையுதெங்கள் தமிழினம்
பந்தபாசம் யாவுமிழந்த நம்மினம் – இலங்கையில்
அகதியாக வாழும்நிலை கேவலம்!

நாலு மணிக்கு ஊரடங்கிப் போகுது – வாயைப்
பொத்திக்கொண்டு சூரியனும் மறையுது
கொடியவிருள் ஆட்சியங்கு நடக்குது – வெறி
நாய்களின்று தெருக்களிலே திரியுது!

மானத்தோடு பெண்கள் வாழமுடியலை – சிறு
பிள்ளைகளும் பள்ளிபோக முடியலை
பசியோடு வாடுபவர் கணக்கில்லை – பெரும்
பட்டினியால் இறப்போர்க்கும் அளவில்லை!

கோவணமும் காய்வதில்லை கொடியினில் – அங்கு
பிள்ளைகளும் தூங்கவில்லை மடியினில்
நம்பிக்கையும் இழந்துபோச்சு அரசினில் – நாளை
வந்துசேருமோ சாந்தி விடியலில்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்வதற்குத் துண்டுநிலம் நமக்கில்லை - தமிழன்
செத்தாலும் புதைப்பதற்கு மண்ணில்லை
உரிமையுடன் வாழ்வதற்கு வழியில்லை - அதைக்
கேட்டாலோ அடியுதைக்கும் குறைவில்லை

சுற்றமெல்லாம் சிதறிப்போச்சு குண்டினால் - சின்னப்
பிஞ்சுகளும் அழிஞ்சுபோச்சு வெடிகளால்
பெற்றமண்ணில் புதைந்து போச்சு மானமே - இதைக்
கத்திக் கத்திக் காஞ்சுபோச்சு தொண்டையே!

இராமசாமிக் குருக்களுக்குக் கையில்லை - எங்கள்
இராசம்மா ரீச்சருக்கோ காலில்லை
இந்திராவின் மகளுக்கவள் கற்பில்லை - இந்த
இரக்கமற்ற கொடுமைக்கோ முடிவில்லை!

திட்டம்போட்டு கவருகின்றார் தமிழ்மண்ணை - இதைச்
சட்டம்கூடப் பார்ப்பதில்லை பெருமுண்மை
இன்றுமட்டும் நடக்கவில்லை இத்தொல்லை - அதைச்
சொல்லியழத் தெம்பு கூட எனக்கில்லை!

தமிழராகப் பிறப்பதெங்கள் குற்றமா - ஐயா
தமிழையின்று பேசுவதும் மட்டமா?
தமிழனாக வாழ்வதுமே குற்றமா - எங்கள்
சந்ததி மண்ணைக் கவருவதும் சட்டமா?

கேவலாமாய்ப் போயிற்றே நம்மினம் - இதைக்
கேட்பதற்கு யாருமில்லை இவ்விடம்
தேவையற்று அழிகிறதே தமிழினம் - அதைத்
தடுப்பதற்கு எவருமில்லை நம்மிடம்!

வந்தாரை வாழவைத்த நம்மினம் - வாழ
வழியற்று அலையுதே தமிழினம்
சந்ததிக்கு நாளை வேண்டும் சுதந்திரம் - அதைச்
சிந்தித்துப் பார்க்கவேண்டும் நம்மினம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவீட்டுச் சகோதரரே கேளுங்கள் - நாங்கள்
படுகின்ற துயரதனைப் பாருங்கள்
மனிதராக நாங்கள் வாழ வேண்டுமே - அதற்கு
தயவு செய்து உங்கள் கருணை தாருங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசியுண்டு இலவசமாய் ஆட்சியில் – கலைஞர்
எச்சமுண்டு தொடர்ந்து ஆளக்கட்சியில்
ரஜனியுண்டு இரசிகர்களின் பூசையில் – ஆட்டுப்
பலியுமுண்டு திரையரங்கு வாசலில்!

காமராஜர் பிறந்து வாழ்ந்த நாடது – ஐயா
பெரியாரும் புத்திசொன்ன மண்ணது
எம். ஜி ஆரும் தொண்டு செய்த நிலமது – மகாத்மா
காந்திகூட நடந்து சென்ற புவியது!

எங்களுக்கு எதுவுமில்லை நாட்டினில் – இலங்கையில்
துண்டுமண்ணும் சொந்தமில்லை உரிமையில்
தங்கத் தமிழ் பேசிடவும் வழியில்லை – தமிழன்
தமிழனாக வாழ்ந்திடவும் முடியலை!

பெரியோரே, தாய்மாரே கேளுங்கள் – நீங்கள்
கொடுத்துவைத்த தமிழரையா பாருங்கள்
அறிவீரோ, புரிவீரோ தெரியலை – நாங்கள்
மனிதராக வாழ்வதற்கே முடியலை!

கவலையுடன் கவிதையினைக் கூறினேன் – என்
நிலமகளின் நிலைமையினைப் புலம்பினேன்
தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள் – நாங்கள்
மானத்துடன் வாழ்வதற்கு உதவுங்கள்!

நிலமகளே! நல்லவளே! கேளம்மா – என்
இனத்தின் தலைவிதியைப் பாரம்மா
தமிழனாகப் பிறந்ததனால் தானம்மா – இலங்கையில்
உரிமைகளை இழந்தோமா கூறம்மா?

நிலமகளே! என்மண்ணே கேளம்மா – அங்கே
படுகின்ற துன்பங்களைப் பாரம்மா
பொத்திவைத்த பொறுமையின்னும் வேண்டுமா – அவர்கள்
கத்திக்கதறி அழுவதின்னும் நியாயமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதழுது கண்ணீர் வற்றிப் போயிற்று - தாயே
விம்மி விம்மி வயதுமோடிப் போயிற்று
கலங்கிக் கலங்கி தோல் கறுத்துப் போயிற்று - இதை
நினைத்து நினைத்து முடியும் கொட்டிப் போயிற்று

மனிதராக வாழவேண்டும் அன்பிலே - நாம்
உரிமையோடு வாழவேண்டும் உண்மையே
மானத்தோடு வாழவேண்டும் பண்பிலே - நாம்
தலைநிமிர்ந்து நடக்க வேண்டும் மண்ணிலே!

கோழி கூடக் கூவவேண்டும் தமிழினில் - நல்லூர்
கோபுரமும் சிலிர்க்க வேண்டும் மகிழ்ச்சியில்
கவிதை நானும் பாடவேண்டும் இணுவிலில் - பெட்னா
விழாவும் நாளை நடக்கவேண்டும் இலங்கையில்!

தம்பியரைத் தாங்குவதுன் மடியம்மா - தாயே
தங்கைகளும் தாங்குவதுன் நீயம்மா
மாற்றானே மனந்திருந்த எப்படியம்மா - என்றன்
தமிழ் மண்ணே நீயழிதல் தப்பம்மா!

வாடகைக்கு வீடெடுத்த வாழ்விது - அம்மா
மண்ணைவிட்டு வாழ்வது கொடியது அம்மா
பாடையிலே போகுமந்த நாளது - உன்றன்
மடியினிலே கிடைத்திடுமா கூறிடு

(வட அமெரிக்கப் பேரவை விழாவில் தமிழ்த்திரு இளங்குமரனார்
தலைமையில் நடைபெற்ற கவியரங்கு கவிதை
(2007 - புளோரிடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதை படு தமிழா உதைபடு!



**உதை** படு தமிழா உதைபடு
உலகில் நீ என்றும் வதைபடு
உலகை ஆண்டாய் புகழோடு
இன்று தாழ்ந்தாய் அடியோடு

பர்மா அகதிகள் பல பார்த்தாய்
பெங்களூரிலும் வதைபட்டாய்
பந்தாய் காலில் உதைபட்டாய்
அழுதிடு தமிழா அழுதிடு

பம்பாய் நகரிலும் நீ வாழ்ந்தாய்
பலரும் உதைக்க ஓடி வந்தாய்
பாரில் காக்க எவருண்டு
வதை படு தமிழா! வதை படு

சிதையுண்ட ஈழத்தைக் கண்டாலும்
சிந்திக்க மாட்டாய் நீ என்றும்
சேர்ந்திருந்தால் உனை வெல்வார் யார்?
ஒன்றாய் சேர்வது நீ என்று?

உன்றன் வீடு குடும்பமுண்டு
உனக்கு என்ன குறை இன்று
உலகெங்கிலும் நீ வாழ்கின்றாய்
இருந்தும் உதை ஏன் படுகின்றாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கென்றே ஒரு நாடுண்டா
தமிழன் ஆளும் நிலையுண்டா
உரிமையாவது உனக்குண்டா
உதைபடு தமிழா வதைபடு!

நன்றி ; உதவி

சிகாகோவில் வெளிவந்த முதலாவது தமிழ் மாதஇதழ்



ஊக்கம்.உழைப்பு.ஒற்றுமை.உயர்வு

உதவி

மாத இதழ். 29 வைகாசி 1992. 75 சதம்

உழைப்பால் உயர்ந்த உத்தமர்.
திரு. துக்காராம் அவர்கள்.
பக்கம் ...3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தின் கண்களும் திறக்கும்

**மதிப்புக்**குரிய மறத்தமிழர்களே – எங்கள்
மாண்பு மிகு மா வீரர்களே
எப்போதும் உமை மறவோம் – மூச்சை
விடும்போதும் உமை நினைப்போம்!

விதையாய் வீழ்ந்தவர்களே – மண்ணில்
வரலாறு படைத்தவர்களே
வெறும் கதையில்லாது – எண்ணில்
காவியம் படைத்தீர்களே!

கடல் கடந்து வாழ்ந்தாலும் – எங்கள்
கண்ணீரைக் காணிக்கை யாக்கி
சுடரேற்றிச் சிந்தையில் சுமையேற்றி – உங்களை
துதித்து வழி படுகின்றோம்!

நிலை தளர்ந்த தாம் தமிழை – அன்று
தலைநிமிர வைத்தீர்கள்
களை பிடுங்கித் தூறெடுத்து – அழகு
பூச்சூடி பொட்டு வைத்தீர்கள்!

ஊனம் தமிழர்கள் வாழ்வீது – இனிமேல்
வேணும் உரிமைகள் என்றீர்கள்
மானம் பெரிதென்று கொண்டீர்கள் – உயர்
வான் புகழ் புவியில் கண்டீர்கள்!

கட்டவிழ்ந்த இளம் பருவத்தில் – அழகு
மொட்டவிழ்ந்த பூவையர்கள்
தொட்டணைக்கும் சுகம் துறந்தீர்கள் – நஞ்சு
குப்பிதனை கழுத்தணிந்தீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாந்தரை வெளியில் – மேல்
அண்ணாந்து பார்த்தபடி
எண்ணற்ற கனவு கண்டீர் – நம்
மண்ணையும் காத்திருந்தீர்!

தூங்காத இரவுகளில் – பெரும்
துப்பாக்கித் துணையுடனே
நீங்காது விழித்திருந்தீர் – ஈழ
நினைவோடு தவம் புரிந்தீர்!

விடுதலைக்கு வித்திட்டு – பெரும்
விலையில்லா வீரத்தால்
வேங்கையாகப் பாய்ந்தீர்கள் – அழகு
ஈழத்தையே படைத்தீர்கள்!

கொடியவர்கள் ஆட்சியில் – இங்கு
நடப்பதெல்லாம் சூழ்ச்சிகளே
நாளை வரும் நல்லவர் காண – அங்கு
தேடி வரும் அவர் வீழ்ச்சியே!

(வேறு)

நீதியற்ற சமூகத்தின் செயலினால் – வெறும்
நேர்மையற்ற உலகத்தின் துணையினால்
பாதிகண்ட ஈழமழிந்து போச்சு – எங்கள்
வாழக்கையின்று சூனியமாச்சு!

ஆண்டு வாழ்ந்தது தமிழினம் – இன்று
தாழ்ந்து வீழ்ந்தது நம்மினம்
அழிந்து பதைத்தது தமிழினம் – அதற்கு
அழுது தொழுதது எம்மினம்!

ஓடி ஒளிவதற்கு இடமில்லை – இனி
ஒதுங்கிப் பதுங்குதற்கு வீடில்லை
அகதியென்று ஏற்பதற்கும் நாடில்லை – எம்மை
எரிப்பதற்கும் சொந்தமாய் சுடுகாடில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையோ உடைமைகயோ இன்றில்லை - நமக்கு
அதிகார பகிர்வுகூட இல்லை
தகுதியோ தலைமையோ இல்லை - தமிழர்க்கு
சாய்ந்திடத் திண்ணையும் இல்லை!

விண்ணிலும் ஈழத்தைக் கண்டிடவென்று - நீங்கள்
விரைந்தின்று விண்ணுக்குச் சென்றீரோ?
வையக வாழ்வீது பொய்யென்று - சொர்க்க
வாசலைத் தேடியே சென்றீரோ?

ஒற்றுமை இல்லாத் தமிழர்கள் - என்று
வேதனை மனதில் வாட்டிட
வேற்றுமை காட்டும் உலகிதை - வெறுத்து
மண்ணுக்குள் புதைந்து கொண்டீரோ?

விட்டுவந்த வீடெம்மை வெறுக்கும் - ஓடி
விளையாடிய தெருவின்று நகைக்கும்
கோழைகள் என்றெம்மை ஒதுக்கும் - கை
கொட்டியே மண்கூடச் சிரிக்கும்!

தொழுதிடத் தகுதியும் இல்லை - உங்களை
போற்றிட முடிவதும் இல்லை
பேசிடத் துணிச்சலும் இல்லை - நாங்கள்
கோழைகள் எமக்கு வெட்கமும் இல்லை!

நாளைய உலகம் விழிக்கும் - கைகளில்
நிச்சயம் வெற்றியும் கிடைக்கும்
வேளையும் வழிகாட்டி விடியும் - வேங்கை
சத்தியம் உரிமையோடங்கு உலவும்!

கனவுகள் மெய்ப் படலாகும் - ஈழக்
குறிக்கோளும் சாத்திய மாகும்
உலகத்தின் கண்களும் திறக்கும் - நாளை
உண்மை உணர்ந்திடும் காலம் பிறக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் என்பவன் தெய்வம் ஆகலாம்!

**அடுத்தவர்** கண்ணீரை எழுந்து நீ துடை
அதுவே மகிழ்ச்சிக்கு கிடைக்கின்ற விடை
உதவிக்குப் போகட்டும் இன்றே உன் நடை
அதுதான் உன் வாழ்விற்கு அளப்பெருங் கொடை !

தமிழனுக்கு இருக்கின்ற தீராத கனவை
தாகத்தோடு வாழ்கின்ற ஆறாத நினைவை
நீதிக்கு கிடைக்கின்ற நல்லதோர் பதிலை
போராடி வாங்குவாய் தமிழர்க்கு விடிவை !

கடவுளுக்கு கண்ணின்னும் திறந்திடவில்லை
கைகொடுக்க உலகிற்கும் அக்கறையில்லை
மனம் வைத்தால் நடக்காதது எதுவுமேயில்லை
இனம் வாழ ஆக்கிடுவாய் இறைவனாயுன்னை !

அழகான வளமான அமுதான மொழியாம்
ஆதிமொழி ஆஸ்கார் கண்ட செம்மொழியாம்
வரலாறு என்றும் போற்றிடும் மொழியாம்
தனக்கென்று நாடு இல்லாத மெழியாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் செழிக்க ஆர்த்தெழு நீ

மலைகடந்த தென்றலோடு குலவுகின்ற தமிழும்
கடைந்தெடுத்த பண்பினோடு தமிழர் நிறைந்து வாழும்
வளைகுடாவின் விழாக்காண வந்திருக்கின்றோரே
குழைத்தெடுத்த தமிழோடு கும்பிட்டுத் தொடர்கின்றேன்

கடல் கடந்தும் விடவில்லை உறவுகளின் நினைவு
கடன்பட்டார் நெஞ்சம்போல கலங்கியதே மனது
தடம்பட்ட காயமாக வலிக்கிறதெம் தவறு
உடனிருந்து உதவலையே ஏன் இந்த உறவு?

களம்கண்ட உறவுகளோ கண்வழிந்து வாழ
இனமழித்த பாவிகளோ மண்ணையின்று ஆள
உளமெல்லாம் துடிக்க உயிரது தவிக்க
உறவுகள் நிலை கண்டு வேகுதே நம் நெஞ்சம் !

கண்தொட்ட காட்சியும் காதிட்ட கதறலும்
மண்தொட்ட குருதியும் விண்தொட்ட குமுறலும்
மண்விட்டு வந்தாலும் மனம் விட்டுப் போகுமா?
சொல்லுங்கள் சொந்தங்களே கூறுங்கள் நண்பர்களே.

உறவுதனை உடைத்து உணர்வுகளைத் தகர்த்து
உடமைகளைப் பறித்து உண்மைகளை மறுத்து
உலகத்தையே தவிர்த்து உங்களையும் விடுத்து
தமிழர்களின் செழிப்பை சிதைத்தது முறையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதட்டின் ஒலியல்ல இவை என் உள்ளத்தின் வலிகள்
கவிதையின் கருவல்ல இவை கொடுமையின் குழிகள்
தமிழனின் விதியல்ல இவை நடந்திட்ட பலிகள்
தமிழுக்கு முடிவல்ல இது விடியலின் கதிர்கள்

ஓட்டைப் பாவாடையுடன் தெரு அலையும் தங்கை
பாட்டுப் பாடிக்கொண்டு பிச்சை எடுக்கிறான் தந்தை
கேட்டு அழுதுவிட்டு நோயில் படுத்துவிட்டாள் அன்னை
ஓட்டு வாங்கிவிட்டு ஓரம் கட்டிவிட்டான் தலைவன்

அரசியல் மாறின மடிந்தன சில ஆண்டுகள்
மாண்டவர் மண்ணதில் முளைத்தன புட்கள்
அரிசி கிடைக்கவில்லை அமைதி நிலவவில்லை
ஆண்டவர் கண்களோ இன்னமும் திறக்கவில்லை

தமிழினைப் போற்றினர் தமிழனை வாழ்த்தினர்
அமைதியைத் தந்திட எவருமே வந்திலர்
கண்களை மூடினர் யாருமே கண்டிலர்
உண்மையை நீதியை மண்ணிலே புதைத்தனர்

ஆழ்கடல் அலையும் பொங்கிட வில்லை
வேற்படை முருகனும் காத்திட வில்லை
சோறுடை தந்து அணைத்தவர் இல்லை
பணமுடை தவிர்க்க முயன்றவர் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூதது கவ்விய தர்மத்தைக் காக்க
நீதியை மூடிய புழுதியைத் துடைக்க
ஏதிலி என்போரை உலகினில் காக்க
தமிழனை அழிக்கும் கொடுமையை தொலைக்க
ஆர்த்தெழு தமிழா நீ ஆர்த்தெழுவாய்!

விதவைகள் வாழ்வு வளம்பெற வேண்டும்
சிதையுண்ட கனவுகள் சீர் படவேண்டும்
பாழ்பட்ட மனங்கள் பண்புற வேண்டும்
யாழ்மண்ணில் இன்பம் மீட்டிட வேண்டும்
ஆர்த்தெழு தமிழா நீ ஆர்த்தெழுவாய்!

புண்பட்ட நெஞ்சத்தில் பூப்பூக்க வைக்க
கண்பட்ட நம்மண்ணில் கொடியேற்றி வைக்க
பொன்னான தமிழுக்கு முடி சூட்டி வைக்க
இல்லாரை நம்மூரில் இல்லாது ஒழிக்க
ஆர்த்தெழு தமிழா நீ ஆர்த்தெழுவாய்!

சீரும் சிறப்பும் கொழிக்க நீ விழித்தெழு
பாரில் உண்மைகள் விழிக்க நீ கொதித்தெழு
இருளைக் கிழித்து ஒளி கொடுக்க நீ பாய்ந்தெழு
உறவுகள் வாழ்வில் இன்பமே செழிக்க நீ ஆர்த்தெழு.



கவியரங்கக் கவிதை – (5.10.2015)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழால் இணைந்தோம்

**வரலாறு** காணாத பெருவிழாவாம் – இன்று
வளமான தமிழுக்குத் திருவிழாவாம்
கடல் கடந்து வந்துள்ள உறவுகளே – இங்கு
உடன் வாழ்ந்து மொழி காக்கும் இனியவர்களே

செந்தமிழால் இங்கு சேர்ந்திணைவோம் – என்றும்
செயற்பட்டே தமிழ் இனம் காப்போம்
செம்மொழி தமிழின் சிறப்பெல்லாம் – இந்த
தேசங்கள் எங்கும் பொறித்து வைப்போம்

செந்தமிழின் வேர்கள் அங்கும் – பல
விழுதுகள் நாம் உலகெங்கும்
சிதறிப் பரவிக் கிடந்தாலும் – சீர்
தமிழ்ப் பண்பாலே இணைந்துள்ளோம்.

தமிழுக்கு விழாக்காணும் நாளில் – வையத்
தமிழர் கூடி மகிழும் இந்த வேளையில்
தமிழீழ உறவுகளை நினைக்கையில் – என்றென்
தேகமெல்லாம் ஐயோ துடிக்குதே!

செந்தமிழால் நாம் சேர்ந்திணைந்தோம் – ஆனால்
செயற்பட்டு இனம் அன்று காத்தோமா?
உறவுகள் கொன்றழிக்கப்பட்ட போது – இங்கு
செயற்பட்டு அதைத் தடுத்தோமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுங்குகுழி புதைகுழியாய் மாற – கொடும்
பட்டினியால் சிசுக்கள் துடித்துச் சாக
ஒதுங்க முடியாது அழிந்து ஒழிந்தார்களே – கேவலம்
என்ன செய்தோம் ஏது செய்தோம் ?

தமிழை செம்மொழி ஆக்கினோம் சரி – செந்
தமிழர்களை சாகடித்தது முறையா?
தமிழுக்கு ஒரு நாடில்லை என்று – ஈழத்
தமிழனுக்கு ஆறடி நிலமுண்டா சொல்லு?

பார் அது பங்கிட்டு பாதகம் செய்ய – அன்று
பார் என்று பாரதமும் தன் பங்குக்குதவ
ஏனென்று கேட்பதற்கு நாதியற்ற நாங்கள் – அடியோ
வேரறுந்து வெட்டுண்டு கிடக்கிறோம் !


இதயத்து நரம்புகள் பிய்த்தெம்மைப் பிடுங்க – ஓடும்
இரத்தத்து அணுக்கள் திசைகெட்டு ஒடுங்க
விழுதுகள் உலகெங்கும் விழிநீரைச் சுமந்து – நாம்
நீதிக்குக் கையேந்தி நிற்கிறோம் ஐயா!

புண்ணாக வலிக்கிறதே, நெஞ்செல்லாம் எரிந்து – தமிழ்ப்
பெண்ணாகப் பரிசளித்தார் படையினர்க்கு விருந்தாய்
கண்ணாகப் பிறந்த நம் குழந்தைகள் வளர்ந்து – ஐயோ
மண்ணோடு மண்ணாக மறைந்தனரே புதைந்து

கொன்று குவியுண்ட தமிழர்களோ ஏராளம் – இன்றும்
கேட்கிறதே மரண ஒலி காதோரம்
கொடை கொடுத்த நாடுகளோ தாராளம் – என்றும்
மறப்போமா மறுப்போமா "மே" மாதம்!

ஆண்டவர்கள் நாம், அடிமைப்பட்டவரானோம் – ஐயோ
அழிந்து போனவர், இழந்து போனவர்கள் நாம்
மண்டியிட்டு மானுடமே மன்றாடிக் கேட்கின்றேன் – ஐயா
ஒன்றிணைந்து இழந்ததை மீட்டுத் தாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளை மாளிகைக்கு ஒபாமா போனதனால் - அதுவும்
கறுப்பு மாளிகை ஆகுதல் கூடுமா?
முல்லைத் தீவைச் சிங்களவர் பிடித்தாலும் - அதுவும்
சிங்கள தேசம் ஆகமுடியுமா?

மௌனித்த ஆயுதத்தை மரணிக்க வைத்து - வெள்ளைக்
கொடியோடு வந்தவரை வேரோடு சாய்த்து
பௌத்தத்தின் போதனையை அடியோடு மறந்து - எமது
இனம் கொன்றவனைப் பார் தூற்ற வைப்போம்?

எம்மினத்தை வென்றவராய் மகாவம்சம் கூறும் - நாளை
சம்மதமாய் எட்டப்பர் எச்சங்கள் இசையும்
சிங்களவன் வரலாற்றை மாற்றவும் கூடும் - ஆனால்
எத்தர்களை கூண்டிலே நிறுத்திட மறக்கோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியோடு நேர்மையோடு போராடுகின்றோம் - ஓயோம்
உரிமைக்குக் குரல்கொடுத்து ஒன்றாயிணைவோம்
சதி காரக் கும்பலின் அதிகார வெறியை - இந்த
உலகத்தின் கண்களில் அரங்கேற்றி வைப்போம்!

தமிழா தமிழா நீ வெறும் கூலி இல்லை - என்றும்
உன் வீரத்திற்கு இங்குவேலியே இல்லை
தமிழுக்கு என்றென்றும் அழிவேயில்லை - வீரத்
தமிழா உனக்கென்றும் தோல்வியேயில்லை!

உலகெங்கும் வாழ்கிறாய் பரந்து சிறந்து - நாளை
உலக அரங்கில் தலைநிமிர்வாய் உயர்ந்து!
உரிமை யாவும் கிடைத்துவிடும் உனக்கு - அந்த
உண்மையை உணர்ந்து துணை வருமுலகு!

தளர்ந்த தமிழர் தலைகள் நிமிரட்டும்- அங்கே
உலர்ந்த உள்ளங்கள் உவகை காணட்டும்
புதைந்த தம்பிகள் கனவு பலிக்கட்டும்- மேலும்
நிறைந்த வாழ்வது மண்ணில் செழிக்கட்டும்

ஆனது ஆகட்டும் போனது போகட்டும் - இன்றே
அகிலத்துத் தமிழர்கள் ஒன்றாய் இணையட்டும்
நல்லது நினைத்து நல்லதையே செய்யட்டும் - தமிழன்
நாளைய சந்ததி நன்றாய் வாழட்டும்!

(கவியரங்கக் கவிதை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கர்

# நாளை விடியலிலே பொங்கும்

**து**யரென்னும் இருள்நீங்க, விடிவெள்ளியென நீதி தோன்ற
உண்மை எனும் கதிரவன் உலகெங்கும் ஒளியேற்ற
தூங்காத வானொலிகள் தூங்குவோரைத் துயிலெழுப்ப
ஆண்டவனும் அகம் மகிழ ஆலயங்கள் மணியடிக்க

உலகமெனும் அரங்கத்தில் ஐ.நா சபை கோலம் போட
அடுத்த வீட்டு இந்தியா நிறைகுடத்தோடு விளக்கேற்ற
உலகத்துத் தமிழர்கள் மனமகிழ்வோடு மலர்தூவ
சிங்களவர் பகை மறந்து ஒன்றாகச் சூழ்ந்து நிற்க

அமெரிக்காவும் தமிழ் வாழ்த்து இனி தங்கு பாட
ஈழமென்ற பானையிலே தமிழென்ற பாலோடு
அநீதி, வஞ்சனை, துரோகக் கற்களைக் களைந்து
விடுதலையெனும் அரிசி, மகிழ்ச்சியென்ற சர்க்கரை

அதிகாரப் பகிர்வெனும் நெய், சமஉரிமையெனும் பருப்பு
நிரந்தர நிம்மதியென்ற முந்திரி அனைத்தையும் இட்டு
நாளை நம் விடியலிலே பொங்கும் பொங்கலே
எம்பொங்கல் நம்பொங்கல் தமிழ்ப்பொங்கலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கு அடையாளம் கண்டாய்

பல்லாண்டு பல்லாண்டு வாழ்க - தம்பி
பலகோடி ஆண்டுகள் பார்போற்ற வாழ்க!
இவ்வாண்டு ஐம்பது கண்டாய் - இன்னும்
பல்லாண்டு தமிழ்போல வாழ்க நீ வாழ்க!

தமிழுக்கு அடையாளம் கண்டாய் - தம்பி
தரணிக்குத் தமிழனை அறிமுகம் செய்தாய்
தமிழனை நிமிர்ந்திட வைத்தாய் - நாளை
தமிழுக்கு நிலாவிலும் ஓரிடம் காண்பாய்!

புதுமைகள் முளைத்திட வைத்தாய் - நமது
மண்ணதில் புரட்சிகள் பூத்திடச் செய்தாய்
போருக்கும் முடிவொன்று கண்டாய் - நாளை
பாருக்கு ஈழம்தான் முடிவாகச் சொன்னாய்!

ஆவியைச் சிலிர்த்திடச் செய்தாய் - தமிழ்
வீரத்தை ஈழத்தில் துளிர்த்திட விதைத்தாய்
கோழைகள் நாமோட விட்டாய் - தம்பி
பாவிகள் எங்களை மன்னித்துக் கொள்வாய்!

அலைகடல் கடந்திங்கு வந்தோம் - இந்த
அமெரிக்க மண்ணிலும் தம்பிதானென்றோம்
உலகத்தின் தமிழரை இணைத்தோம் - நாம்
ஓரணியில் ஒன்றாய் ஈழம் தானென்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரையே பணயமாய்க் கொண்டு - தம்பி
உழைத்திட்டாய் உண்மையாய் நின்று
உரிமையைக் காப்பதெம் பங்கு - என்று
ஊதுவாய் நாளையே வெற்றியின் சங்கு!

பேச்சிலே கொட்டுவார் வாதம் - சிலர்
மூச்செல்லாம் தமிழென்று முழங்குவார் ஜாலம்
திரையிலும் காட்டுவார் வீரம் - தம்பி
தரையினில் தீர்த்தாயே எங்களின் தாகம்!

தமிழ்நாட்டில் செய்யாத புதுமை - தம்பி
தரணியில் பொறித்திட்ட திறமை
தமிழுக்கு முடிசூடும் அருமை - உன்றன்
காலத்தில் வாழ்வது எமக்குமோர் பெருமை!

உலகமே வியந்தங்கு போற்ற - முன்
மாதிரி நாடாக ஈழமே விளங்கும்
உயிர்தந்த தம்பிகள் மகிழ - நாளை
பரிசாக எங்களின் ஈழம் கிடைக்கும்!

உலகத்தின் தமிழர்கள் சிறக்க - எங்கள்
உயிருக்கும் மேலான தமிழது செழிக்க
ஐம்பது ஆண்டுகள் அல்ல - இன்னும்
ஐந்நூறு ஆண்டுகள் ஐயா நீ வாழ்க!

சொல்லாத நாடேதும் இல்லை - உன்றன்
ஈழத்தின் பெருமைக்கு ஈடேதும் இல்லை
இல்லாத சாதனை பொறித்து - இன்னும்
நூறாண்டு வாழ்த்துவோம் மதித்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப்பெண்

**பொட்டு** வைத்து நெஞ்சு தொட்டு - அன்பைக்
கொட்டி வைத்த பாவையே
சேலை கட்டி நெஞ்சுயர்த்தி - அழகை
அள்ளித் தந்த பூவையே

விழிகளோரம் விநியோகித்து நாளும்
களிப்பூட்டி நிற்கும் கவிதைகள்
சிலையைப் போன்று சிந்தையேங்க - அவை
சுமந்து நிற்கும் குன்றுகள்

மாலை நேரம் அந்த அருவி ஓரம் - அவள்
குனிந்து நின்ற வேளையில்,
கால மோட்டி அள்ளி வர்ணம் தீட்டி - வானம்
கதிரவன் ஒளியினால் சிவக்கையில்,

தொப்பி போட்டுத் துப்பாக்கி கொண்டு - அங்கு
துரோகி ஒருவனும் வந்திட்டான்
பாசை புரியாமல் பேச முடியாமல் - பாவை
பயந்து கதறிக் கும்பிட்டாள்.

தமிழர் குலத்திற்கு எங்கள் மண்ணுக்கு - பெரும்
நஞ்செனத் துரோகி நெருங்கினான்
பெண்ணவள் மார்பினில் கை வைத்து - அவன்
பெண்மையைச் சீற வைத்திட்டான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேங்கை யாம் பெண்ணவள் சீறிட்டாள் - அவன்
கத்தியை பாய்ந்து எடுத்திட்டாள்
பொங்கிய கோபத்தில் பாய்ச்சிட்டாள் - அந்த
துரோகியும் மண்ணிலே சாய்ந்திட்டான்!

தமிழுக்கோர் வீரனை அளித்திட - வீரம்
சுரந்திட மார்பினை வளர்த்தவள்
துரோகியின் காயம்பட்ட கொங்கையை - அந்த
கத்தியால் அறுத்து எறிந்திட்டாள்!

"கண்ணாக வளர்த்த கற்பினை - தமிழர்
மண்ணுக்குத் தாரையாய்த் தந்திட்டேன்
கற்போடு தமிழ்ப் பெண்கள் வாழ்ந்திட - எமது
கடவுளே பெண்களைக் காத்திடு!"

என்றவள் சுரந்திட்ட குருதியை - இரண்டு
கைகளால் அள்ளியே வணங்கினாள்
கண்ணிலே கண்ணீரும் வழிந்திட - அந்தப்
பூவையும் பூமியில் சாய்ந்திட்டாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னோடு நான் வாழவேண்டும்!

**நிமிர்ந்த** நடையும் நேரான பார்வையும்
சிறந்த குணமும் சீரான பழக்கமும்
பரந்த மனமும் பண்பான நடத்தையும்
உயர்ந்த நோக்கமும் உயரிய கொள்கையும்
குன்றாத பாசமும் குறையற்ற பக்தியும்
கொண்டு வென்றவரே! கொள்ளையடித்த வா!
இப்பிறவி என்ன? எப்பிறவி எடுத்தாலும்
உன்னோடு என்றும் நான் வாழவேண்டும்
மடியில் சாய்ந்து உலகை சுற்ற வேண்டும்
விடியும் வரை கவிதைகள் பல பாடவேண்டும்
முடியும் வரை ஈழம் கண்டு வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன வேண்டும் மனமே?

இதைவிட என்ன வேண்டும் மனமே?
நாலு முழவேட்டி
நாலு பொத்தானுடன் சட்டை
காலில் பாட்டா காலணி
கொட்டும் வியர்வையை
ஒற்றியெடுக்க தோளில் ஒரு துண்டு
இந்து என்று முந்திச் சொல்ல
நெற்றியில் திருநீறு
எளிமையான தோற்றம்,
வலிமையான எண்ணம்,
இலேசான தேக நலம்,
நடை அல்லது ஓட்டோ,
சந்திக் கடைத் தேநீர்,
வடை, கோயில் குழை சாதம்,
உறவுகள் அன்பு, மண்ணின் பண்பு,
அறிஞர் அறிவாளர், ஞானிகள்,
ஆலய தரிசனம், ஆத்ம ஞானம்!
இதைவிட என்ன வேண்டும் மனமே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம்!

**முதுமையில்** முத்தமிடும் இளமை நினைவுகள்
முதிர்ச்சியில் வந்திடும் முன்னைய ஏக்கங்கள்!
அதிர்ச்சியாய் இருந்திடும் முடிந்த பக்கங்கள்
ஆன்மாவைத் தழுவிடும் நினைவுதான் மிச்சங்கள்!
பாயினில் படுத்திடும் முடியாத காலங்கள்
காதினில் ஒலித்திடும் பட்டினத்தார் பாடல்கள்!
தீயினில் எரிந்திடும் பொசிங்கிடும் போதினில்
பார்ப்பவர் எண்ணத்தில் பிறந்திடும் ஞானங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாகோ பாஸ்கர்

## வாழ்வை நிறைவு செய்திடு!

சுவடுகள் பதித்து வாழ்வை நிறைவு செய்!
பலமுறை சிந்தித்தாலும்
ஒருமுறைதான் உன் வாழ்க்கை
திரும்பிப் போக முடியாது!
செய்ததை மாற்ற முடியாது!
நடந்தது நடந்ததுதான்!
முடிந்தது முடிந்ததுதான்!
முள்ளிவாய்க்கால் போனதுதான்!
கொட்டிய முடி கொட்டியதுதான்!
நல்லதை நினைத்திடு!
நல்லதை இன்றே செய்திடு!
சுவடுகள் பதித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராத கனவு!

விமானங்கள் போகின்ற வானத்திலே - நாம்
சிறகடித்து ஊர்வலம் போகவேண்டும்
தமிழுக்கு அரியணை தந்தவுடன் - பொற்
தாலி உன் கழுத்தில் நான் சூட வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாகோ பாஸ்கர்

சுந்தரமான உன் பொன் வதனம் - என்
சிந்தைக்கு ஊக்கத்தை ஊ ட்டவேண்டும்
சுந்தரியே உன் எழிற் புன்சிரிப்பால் - என்
சோர்வது சுத்தமாக நீங்க வேண்டும்!

கவிதைகள் வடிக்கின்ற சிறு விழிகள் - போர்க்
களத்தினில் காவியம் இசைக்க வேண்டும்
கவிஞர்கள் பலர் கண்ட கற்பனைகள் - போர்க்
களத்தினில் வெற்றியோடொலிக்க வேண்டும்

முதுகினில் நான் ஏந்திடும் துப்பாக்கியை - போர்
முடிந்திட மூலையில் வைக்கவேண்டும்
முழுமதியே, மணம் முடித்தவுடன் - உன்
வயிற்றினில் சுமையினைச் சுமக்க வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராத கனவு!

விமானங்கள் போகின்ற வானத்திலே - நாம்
சிறகடித்து ஊர்வலம் போகவேண்டும்
தமிழுக்கு அரியணை தந்தவுடன் - பொற்
தாலி உன் கழுத்தில் நான் சூட வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாகோ பாஸ்கர்

சுந்தரமான உன் பொன் வதனம் - என்
சிந்தைக்கு ஊக்கத்தை ஊ ட்டவேண்டும்
சுந்தரியே உன் எழிற் புன்சிரிப்பால் - என்
சோர்வது சுத்தமாக நீங்க வேண்டும்!

கவிதைகள் வடிக்கின்ற சிறு விழிகள் - போர்க்
களத்தினில் காவியம் இசைக்க வேண்டும்
கவிஞர்கள் பலர் கண்ட கற்பனைகள் - போர்க்
களத்தினில் வெற்றியோடொலிக்க வேண்டும்

முதுகினில் நான் ஏந்திடும் துப்பாக்கியை - போர்
முடிந்திட மூலையில் வைக்கவேண்டும்
முழுமதியே, மணம் முடித்தவுடன் - உன்
வயிற்றினில் சுமையினைச் சுமக்க வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்கில் உதித்த கதிரவன் கவிதைகள்

நாளது பார்த்துச் சோதிடர் குறித்த – தினம்
நிச்சயம் உன் கரம் பற்ற வேண்டும்
நாங்கள் குறி வைத்த நல்ல நாளில் – போர்க்
களத்தில் வெற்றி முழங்கவேண்டும்!

கட்டியே வைத்த உன் சின்ன மார்பு – என்
கற்பனைக் கோட்டைக் கலசமாகும்
பூட்டியே வைத்த உன் தூய கற்பு – என்
வீரத்திற்கே பெரும் கவசமாகும்!

ஏதேதோ ஆசைகள் என் நெஞ்சத்தில் – பல
எண்ணங்கள் ஏக்கங்கள் தீரவில்லை
போதாதா போரின்னும் ஓயவில்லை – நாம்
வென்றிடும் நாளின்னும் தூரமில்லை!

வாழ்வது ஒரு சில நாளெனிலும் – அந்த
குண்டும் மரர்பில்தான் துளைக்கவேண்டும்
வீரனாய் தமிழ் மண்ணில் சாயவேண்டும் – நீயும்
வேங்கையாய் தமிழ் மானம் காக்கவேண்டும்!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆயிரம் பிறவி நாம் எடுத்திடினும் - நாளை
ஆவினமாய் தான் பிறந்தாலும்
ஈழத்து மண்ணில் தான் பிறக்கவேண்டும் - தமிழ்த்
தாய் முலைப் பாலுண்டு தூங்க வேண்டும்!

வீசிடும் குண்டு இனி ஓய வேண்டும் - நாம்
மார்புறக் கட்டித் தழுவ வேண்டும்
பேசிடும் கட்டிற் கதைகளெல்லாம் - இராப்
பேய்களும் கேட்டங்கு நாண வேண்டும்!

பைந்தமிழ் பாடிடும் உன் குரலும் - என்
செவியினில் தேனாகப் பாயவேண்டும்
பாய்ந்திடும் குண்டென்னைக் கொன்றதென்றால் - உன்
ஒப்பாரி தமிழிலே கேட்கவேண்டும்!

தமிழர்க்கு நெஞ்சுரம் பொங்க வேண்டும் - நம்
போர்க்களம் வெற்றியே காணவேண்டும்
தமிழர்தம் பெருமை ஓங்க வேண்டும் - நாளை
தமிழ் மண்ணை தமிழனே ஆளவேண்டும்!

9. ("உதவி" தை 1993)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பகுதி–3

# வாழ்வின் வருடல்களும் வலிகளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாகோ பாஸ்கர்

# வாழ்வு இசைக்கும் யாழாய்

வாய்விட்டுச் சிரித்தாலே போதும் – உங்கள்
வலியெல்லாம் மனதைவிட்டு ஓடும்
கைநீட்டிக் கொடுத்தாலே போதும் – நாளை
வையகத்தின் வாழ்த்துக்கள் சேரும்

பட்டம், படிப்பு, பணம், புகழ், அந்தஸ்து
எதுவும் இருக்கலாம், ஆனால் குடும்பத்தில்
உனது சுக துக்கங்களில் பங்கு கொண்டு,
உனக்காக தனது சுக துக்கங்களை
அர்ப்பணித்து, விட்டுக்கொடுத்து,
வாழும் வாழ்க்கைத் துணையாள் இருப்பின்,
உன் வாழ்வதுவும் இசைக்கும் யாழாய்,
இல்லை வாழ்வே போகும் பாழாய்,
மனிதா இதனைக் கேளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை இரசித்தல்


உன்னை உணர்ந்து வாழ்ந்து
உணவை பசிக்க உண்டு
உடலைப் பேணி வளர்த்து
அன்பைப் பகிர்ந்து கொண்டு
அள்ளிக் கையில் கொடுத்து
எவரையும் வாழ்த்தி அணைத்து
பெரியோரை வணங்கி மதித்து
குறைகள் பேசுவதைத் தவிர்த்து
வாழ்வை இரசித்து வாழ்கில்
மனதில் இன்பம் பொங்கும்
முகத்தில் இன்பம் தங்கும்
புகழும் என்றும் ஓங்கும்
வாழ்வில் இன்பம் நிலைக்கும்
காலம் பொன்னாய் செழிக்கும்
ஆண்டவனின் அருளும் கிட்டும்
சொர்க்க வாசல் ஈற்றில் திறக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாகோ பாஸ்கர்

# ஈழத்தில் பொங்கல்!

உலகம் என்ற பானையில்
உறுதி என்ற நீரை நிரப்பி
உண்மை எனும் பாலைக்கலந்து
அடிமை எனும் கல்லைக் களைந்து
நீதி எனும் அரிசி தேடி இட்டு
ஒற்றுமை எனும் சர்க்கரை சேர்த்து
நியாயம் எனும் நெய்யைச் சொரிந்து
பொறுமை எனும் முந்திரிப் பருப்பிட்டு
உரிமை எனும் பொங்கலைப் பொங்கி
சிரிப்பெனும் வெடியைக் கொளுத்தி
ஏழையின் ஆனந்தக் கண்ணீரால்
படையலுக்குத் அள்ளித் தெளித்து
ஆதவனை மட்டுமல்ல ஆண்டவனையும்
அநியாயமாக இறந்தோரையும் வணங்கி
தாகத்தோடும் நற் தியாகத்தோடும்
புதைந்த தம்பிகளைப் போற்றி
உண்மைகள் மலர, உறவுகள் மகிழ
இன்றல்ல நாளை நிச்சயம்
ஈழத்தில் தமிழர் திருநாளை
கோலமிட்டுக் கொண்டாடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கில் உதித்த கதிரவன் கவிதைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோபுரம் போலு யர்ந்த மனதும்
ஆலயத்தின் அளப்பரிய அமைதியும்
ஆண்டவனின் அரவணைக்கு மன்பும்
அறத்தோடு பண்பும் கொண்டு
புன்னகை தவழும் முகத்தோடு
மனோகரத் தோற்றமும் பொலிய
அமைதியின் உறைவிடமாக வாழ்ந்த
மனிதனே எங்கள் மனோகரா!

பால் வெட்டப் பணம் கொட்டும்
மலேசியா திருநாட்டு மண்ணில்
குலம் விளங்க எம் குடி சிறக்க
இனம் இலங்கப் பிறந்து
கண் போன்ற நம் தமிழாண்ட
என் உயிராம் இலங்கையதில்
கலை வாழும் இணுவிலிலே
தலைமகனாய் வளர்ந்தவா!

வளம் கொழிக்கும் நிலம் செழிக்கும்
விஸ்கான்சின் பெரு மாநகரில்
தமிழ் விழிக்க நம் மொழி துலக்க
குலம் இலங்க என்றும் குடி சிறக்க
வேரினைத் தேடியே நமது
ஆழத்தை ஆராய்ந்து கண்டவா
ஊரினைத் துழாவியே எம்மை
உயர்ந்திட இன்று வைத்தவா!

சீரிய நூல்களால் தமிழன்
சரித்திரம் நீ பொறித்ததும்
சீரிய நோக்கத்தால் என்னை
சிறப்பாக்கி வைத்ததும்
வழிகாட்டி எனக்கு இந்த
வாழ்வு பொங்க வைத்த
நன்றிக்கு என்ன செய்வேன்?
அண்ணா நீ இன்றிலையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நீ வேண்டும்!

**இன்ப** வானிலே சிறகடித்து – என்
அன்பே, நாங்கள் பறக்க வேண்டும்
அன்புடன் உன்னை அரவணைத்து – உன்
ஆவியுடன் ஒன்று கலக்க வேண்டும்!

சுந்தரமான உன் வதனம் – என்
சிந்தையிலென்றும் நிலைக்க வேண்டும்,
சுந்தரியே, என் சிந்தையிலே நீ
சொந்தமா யென்றும் இருக்க வேண்டும்!

காவியம் வடிக்கும் சிறு விழிகள் – என்
கற்பனைத் தேரை ஓட்ட வேண்டும்
ஓவியம் போன்ற உன்னுருவம் – என்
இதயத்தில் சிலையாய்த் திகழ வேண்டும்!

பனிமலர் போன்ற உனதுருவம் – என்
பார்வையி லென்றும் பட வேண்டும்,
கனியிதழ் அள்ளிச் சுவைத்திருக்கும் – அக்
காலமும் கனிந்து நெருங்கி வரவேண்டும்!

மலரிதழ் போன்ற கரமதனை – நான்
மெள்ளவே அள்ளி அணைக்க வேண்டும்,
உலகத்தை உன்னுடன் வலம்வந்து – என்
உயிரே உன்னுடன் வாழ வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாகோ பாஸ்கர்

நாளது மெல்லக் குறிவைத்து – என்
நாயகி உன்னை மணக்க வேண்டும்,
வாழ்வது என்றும் வளம் காண – என்
வனிதையே, உந்தன் துணை வேண்டும்!

ஏதேதோ ஆசைகள் இதயத்தில் – என்
ஏக்கங்கள் யாவும் தீர வேண்டும்,
போதாத இன்பங்கள் இன்சுவைகள் – என்
சொர்க்கமே நீ தர வேண்டும்!

வாழ்வது ஒரு நாள் ஆனாலும் – என்
வசந்தமே உன்னுடன் வாழவேண்டும்,
தாழ்வது எனக்கினி வந்தாலும் – என்
தங்கமே, நீ தான் என்றும் வேண்டும்!

(இலங்கை வானொலி "ஆடவர் அரங்கு" நிகழ்ச்சியில்
2.6.1977 அன்று ஒலிபரப்பான கவிதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் கடந்த [க] விதை!

**முன்னொரு** கோடை காலத்தில்
அகவை நாற்பதற்கு முன்பு
பக்தியும் நற்பண்பும் பொதிந்து
செழிப்பான சிவப்பு மண்ணோடு
நற்கலை தவழும் கிராமம் விட்டு
பெற்றோர் உற்றோரைப் பிரிந்து
நண்பர்களை நல்லோரை விடுத்து
கலை கலாசாரங்களைத் துறந்து
தேனான தமிழ் மொழியைத் தள்ளி
கும்பிட்ட தெய்வங்களை ஒதுக்கி
கண்ணீருடன் அன்று விடைபெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கையில் ஐம்பது வெள்ளி கொண்டு
பையில் இளையராஜா ஒலி நாடா
கோப்பி மிளகாய்தூள் பணிகாரமென்று
அடுத்தவர் கொடுத்த பத்து கிலோவோடு
விசா வாங்கி விமானம் ஏறி
பலவிதக் கற்பனை சிந்தனையேந்த
அமெரிக்கா என்ற வல்லரசு நாட்டிற்கு
ஆவலுடன் அதுவும் பயபக்தியுடன்
பத்திரிகைப் படங்களில் பார்த்திருந்த
மது மங்கை கார் பெரியவீடுகளும்
அரைகுறை உடுப்பும் கடற் கரையும்
மனதைத் துளைக்க சிகாகோ வந்தேன்!

விசா மற்றும் சுங்கச் சோதனையை
வெற்றிகரமாக முடித்தபோது
விமான நிலையத்தில் ஒரே அதிர்ச்சி
அங்கும் இங்குமாகக் கறுப்பு இனத்தவர்
ஆப்பிரிக்காவிற்கு வந்துவிட்டோமா?
அங்கலாய்த்தேன் அரைகுறை ஆங்கிலத்தில்
ஒரு கறுப்பரிடம் விசாரித்தேன்
அது ஆங்கிலமா? வேறு ஏதாவதா?
அவர் சொன்னது எனக்குப் புரியவில்லை
நான் கேட்டதும் அவருக்குப் புரியவில்லை!
இது என்ன புது வர்ணம்? எந்த நாடோ?
என்னைப் பார்த்து அவருக்குச் சந்தேகம்
அவரது ஆழமான கண்களின் பார்வை
பயத்தால் நான்கு நாட்களுக்கு முன்பு
ஊரில் சாப்பிட்ட புளிபோட்ட குழம்பு
அடி வயிற்றைக் கலக்க ஆரம்பித்தது
நரம்புகள் கண்டபடி பின்னிக் கொள்ளவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"வெளியே" வாசல் பக்கம் வந்தேன்
கதவைத் திறந்ததும் மீண்டும் அதிர்ச்சி
விறைத்துப் போனேன் நான் குளிர் தாக்கி
தெரியாத் தனமாக வந்திட்டேனோ?
பல்லப்பரில் இருந்து முனியப்பர்
சாயிபாபா வரை கும்பிட்டிட்டேன்
பயத்தில் "கவசம்" மறந்து போயிற்று
அழலாமா? விடலாமா? யோசிக்க முன்
அங்கு தேடி என் சகோதரர் வந்தார்
அப்பாடா! கண்டேன் பெரிய நிம்மதி!
நரம்புகளில் சீராகக் குருதி பாய்ந்தது
அமெரிக்காதான்! அது மட்டுமல்ல
கறுப்பினத்தவரும் வாழ்கிறார்கள்
என்பதையும் அறிந்து கொண்டேன்!

எழுபதுகளில் ஓர் கார்த்திகை மாதம்
போட்டுக் கொள்ள கோர்ட்டும் தந்தார்
தொடர்ந்து தொப்பி, கையுறை வேறு
தேகத்தை முற்றாக மூடிக்கொண்டேன்!
ஊரில் கத்தரி வெருளி ஞாபகம் வந்தது!
வீட்டுக்குப் பயணம், மேலும் அதிர்ச்சி
வெளியே மரங்கள் நிர்வாணமாக,
இலையெல்லாம் உதிர்ந்து பரிதாபமாக!
ஒருநாள் என் தலைக்கும் இந்தக் கதிதான்
என்று மரங்கள் சொல்வது புரிந்திலேன்
அது வருடமுடிவின் இலையுதிர் காலம்
மரங்கள் பாரத்தை குறைத்திருந்தன.

அமெரிக்கா ஒரு மாதிரி வந்தாயிற்று
வாழத்தானே வேண்டும் ஆரம்பித்தேன்!
புதிய இடத்தில், புதிய பழக்கங்கள்
அடுத்த வாரமே வேலை ஆரம்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**சிகாகோ பாஸ்கர்**



உழைக்க வேண்டும் படிக்க வேண்டும்
தொழிற் சாலையிலே இரவு வேலை
மணிக்கு மூன்றரை வெள்ளி சம்பளம்
கூலி என்று கூடச் சொல்லலாம்
இலங்கைக் காசுக்குக் கூட்டிப் பெருக்கிப்
பலமுறை கணக்கிட்டுப் பார்த்தேன்!
மாற்றினால் கைநிறைய, சந்தோசந்தான்
இருந்தும் வேலை இலகு வானதல்ல,
அலுமினியம் உருக்கி உதிரிப் பாகங்கள்
உருவாக்குவதால் அதிக சூடு,
ஆங்கிலம் ஒருபுறம், அதட்டல் மறுபுறம்
அதி காலைக் கல்வி, சிறிது தூக்கம்

திடீரென்று ஒருநாள் பனியின் தூறல்
மெதுவாக ஆரம்பித்து புல்லின் தரையை
மூடி வெண் தரையாக மாற்றலானது
முதலாவது பனிகாலம் மிகவும் அழகு
வெளியில் பார்த்தால் வெய்யில் அடித்தது
ஓகோ, குளிர் சற்றுக் குறைந்திருக்கும்
காலை எட்டி வெளியே வைத்தேன்
அப்போதுதான் வெயிலுக்கும் பனிக்கும்
எந்த விதமான தொடர்பும் இல்லை
என்பதனையும் அறிந்தேன் உணர்ந்தேன்
அதுவரை காலம் குளிரென்றால் நான்
ஐஸ்கிரீமைத் தான் நினைத்திருந்தேன்
குளிர் கூடுதலாக இருக்கும் போது
காற்றும் சேர்ந்தால் பெரும் கொடுமை
ஒவ்வொரு நரம்பையும் தேடிப் பிடித்து,
தனியாக ஊசியால் மெல்ல குற்றும்
சிறுநீரும் ஐஸாக் குளிரும்!
அமெரிக்காவிற்கு வந்த பின்பு
பல நெருடல்களின் தாக்கம்! ஏக்கம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீட்டு நினைவு தூங்காத இரவுகள்
பல்லப்பர் கோயில் வழிபட இல்லை
கந்தனின் மணியோசை கேட்பதில்லை
அம்மா பால்விட்ட கோப்பி இல்லை
இலங்கை வானொலி செய்தி இல்லை
ராஜாவும் நேயர் விருப்பமும் இல்லை
வீரகேசரி, குமுதம் படிப்பதில்லை
வீதியில் தூஷணம் கேட்பதில்லை
தமிழில் பேச எவரும் இல்லை
பாவாடை தாவணி பார்ப்பதற்கில்லை
பனை மரம் இல்லை, பாயுமில்லை
கூல் பாரில்லை, குழையல் சோறில்லை
துரையண்ணர் கடையின் தோசையில்லை
கதிரவேலு கடை வாய்ப்பன் இல்லை
பூவில்லை, பொட்டில்லை கூந்தலில்லை
காலிங்கன் தியேட்டர் படமும் இல்லை
சின்னராசா தவில், ராதா வயலின்
விடுமுறையில் சதங்கை ஒலிப்பதில்லை
புலவர் சவுண்டில்லை பாட்டுமில்லை
ஒலிநாடாவில் அப்பப்போ தொலித்து
என்னைக் கொல்லாமலே கொல்லும்
மயக்கமா? "கலக்கமா பாட்டு வேறு"
வந்தாயிற்று வாழ வேண்டுமில்லையா?
கையில் காசோடு பியரும் வந்தாச்சு
ஒருநாள் கஞ்சா, இழுத்து விட்டேன்
மறுநாள் வாந்தி, அன்றே விட்டேன்

இரவல் வீடு, காரும் ஓட்டம்
விடுமுறை நாளில் கொண்டாட்டம்
கடன் அட்டையோடு போராட்டம்
மாத முடிவில் ஐயோ திண்டாட்டம்
இரவு பகலாக நான் உழைத்தேன்
இயன்றவரை பலதையும் கற்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்போடேதான் மணமும் செய்தேன்
பாக்கியமாக வந்த இலட்சுமியவள்!
கல்வி உயர்வு வேலையில் உயர்வு
வளமான வாழ்வு விருந்தாயீற்று
வீடுகள் பதவிகள் தேடி வந்தன
தலைவர் மேலாளர் இயக்குநர்
பதவி உயர்வுகள் பல, பல கிடைத்தன
கோல்ப், நிர்வாண நடனம், மதுக்கள்
பந்தாட்டம், என்று நெடுநேர விருந்து,
வாழ்வினிற்பல வேலையின் திணிப்புகள்
காலத்தின் கட்டாயத்தாலே சகிப்புகள்
முடிந்த அளவு வெறுப்போடு தவிப்புகள்
புதிய வேலை பெரிய நிறுவனங்கள்
பல வெளி நாட்டுப் பிரயாணம் வேறு
வேற்று மொழியினர் புது நண்பர்கள்
அன்று மணிக்கு, மூன்றரை வெள்ளி
பின் அள்ளியது எண்பது வெள்ளி
வாழ்க்கையில் புதிய அத்தியா யங்கள்
பேர் சொல்ல இரண்டு பையன்கள் பெற்றேன்
மகளில்லாக் குறைதீர்க்க மருமகள் வேறு
வாழ்க்கையின் அர்த்தத்திற்கு பேத்திப் பேறு
உறவுகள் சொந்தங்கள் மெல்லப் பெருகின
அருமன்பு நண்பர் பலரும் சேர்ந்தனர்

வள்ளுவன் வழியில் வாழ முயன்றேன்
கற்கக் கசடற! உலகத்தைக் கற்றேன்
நிற்க முயன்று வெற்றியும் கண்டேன்!
அனுபவங்கள் அடிப்படை நினைவுகள்
என்னை அடித்துத் துவட்டி மினுக்கின
உணர்ந்து வாழ்ந்து, பசிக்க உண்டு
அன்பைப் பகிர்ந்து அள்ளிக் கொடுத்து
பெரியோர்ப் பணிந்து பண்பாலுயர்ந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பால் அணைத்து என்றும் வாழ்த்தி
குறைகள் தவிர்த்து நிறைகள் போற்றி
துன்பத்தில் சிரித்து, சிலவேளை அழுது
வாழ்வை இரசிக்கக் கற்றுக் கொண்டேன்
வானொலி, திரைப்படம் பத்திரிகைகள்,
கவியரங்கு, பட்டிமன்றம், நாடகம்,
வில்லுப்பாட்டு, இசையரங்குகளால்
தமிழுக்காகப் பொழுதுகள் கழிந்தன.
இருபத்து நாலு புதிய கார்கள்
இருப்பை மெல்ல மெல்லக் குறைத்தன
இருந்தும் இந்த அமெரிக்க வாழ்க்கை
ஆட்டம் பாட்டம் கும்மாளம் விருந்தென
இனிமையாகப் பசுமையாய் பறந்தன.

ஈழத்தின் அவலத்தால் கலங்கினேன்
உறவுகள் அகதிகளாக... புலம்பினேன்
உலகெங்கும் சிதறுதல் உணர்ந்தேன்
சிலருக்கு கையும் தோளுங் கொடுத்தேன்
அவர்கள் உயர்ந்தது கண்டு களித்தேன்
அதனால் ஊக்கம் உற்சாகமடைந்தேன்
அறத்தோடு வாழ்வதே இன்பமென்று
அன்று வாழ்க்கையில் ஆழமாய் உணர்ந்தேன்
அதுவே பிறவித் தத்துவம் அறிந்தேன்
கொடுக்கக் கொடுக்க இன்பம் எனது
அனுபவம் மட்டுமல்ல கருத்தும் கூட
கொடுக்கிறேன், இன்னும் கொடுப்பேன்! ஆமாம்,
உதவும் எண்ணத்துடன் காலை விடியல்!
உதவிய மகிழ்வுடன் இரவு உறங்கல்!
இதுவே வாழ்வின் நல்ல சுவடுகள்,
இவையே என்றும் அனுபவப் பதிவுகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதம் மலரும்

**கட்டிலில்** விழுந்து பெட்டியில் படுத்ததும்
பெயர் போகும் புகழ் போகும்,
பட்டம் போகும் பதவி போகும்,
பசி போகும் பணம் போகும்,
அந்தஸ்து போகும், ஆணவம் போகும்,
பொருளும் போகும் சொந்தம் போகும்
காதல் போகும், காமம் போகும்,
மகிழ்ச்சி போகும் கவலை போகும்,
நோய்கள் போகும் அனைத்தும் போகும்
ஆனால் அதை எரிக்கத் தீ மட்டுமே வரும்
தொடர்ந்து ஒரு பிடி சாம்பல் கிடைக்கும்
அதன் விலை கூட வெற்றுச் சாம்பல்
அப்போது உன்பேரில் கோடி இருக்கலாம்
ஆனால் அது உன்னைத் தேடி வராது!
பிறந்த மண்ணாக இருக்கட்டும் இல்லை
புகுந்த மண்ணாக அது இருக்கட்டும்
அந்தக் கைபேசியும் வாராதுன்னோடு
இதை உணர்ந்தால் மனிதம் மலரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் நோக்கு

**இதுவே** உனது முதல் நோக்கு – தம்பி
இதையே என்றும் எதிர்நோக்கு
சந்தர்ப்பத்தை உருவாக்கு – நண்பா
சரித்திரத்தை நிலைநாட்டு
அதற்கின்றே புறப்படு – நாளை
உலகிற்கு நீ வழிகாட்டு
வாழ்வினை என்றும் வளமாக்கு – இனி
வரும் காலத்தை உனக்காக்கு
இதுவே உனது முதல் நோக்கு – தம்பி
இதையே என்றும் எதிர்நோக்கு
உறவுகள் உயரக் கரமோங்கு – தமிழுக்கு
என்றும் ஊக்கும் குரலோங்கு
அடுத்தவன் வலியை நீ தாங்கு – அதனால்
வாழ்க்கையில் மிகவும் நீ ஓங்கு!
கிடைப்பது சிறிதா யிருந்தாலும்
கொடுப்பது பெரிதாக இருக்கட்டும்
இல்லம் சிறிதாக இருக்கலாம்
உள்ளம் பெரிதாக இருக்கட்டும்!
வாழவை, உலகம் வாழ்த்தச் செய்
தேடி வை, அன்பைத் தேக்கி வை
சிரிக்க வை, ஏழை சிறக்க வை
பேணிவை, மண்ணைப் பெற்றுவை
போற்றி வை, தமிழைப் பொங்கவை!
அடுத்தவனுக்கும் பிரார்த்தனை செய்,
ஆண்டவனும் பெருமை கொள்ளவை!
எதிர்மறை எண்ணங்களை எடுத்தே எறி
நேர்மறைச் செயற்பாடு மனதிற் பொறி!
எண்ணங்கள் வானை எழுந்து முட்டட்டுமே!
எளிமை வாழ்வு பிறக்கு உதவட்டுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏங்கிருந்தாலும் வாழ்க!

**கண்களால்** கவ்வி, கருத்தில் பதித்து
கவிதை புனைந்து கடிதம் கொடுத்து
கனவிலும் கண்டு கட்டியணைத்து
மூச்சு முட்ட இழுத்து முத்தமிட்டு
கற்பனையில் யாவும் முடித்துவிட்டு
தயங்கி மெல்லப் பயந்துகொண்டு
காதலைச் சொல்லி ஏச்சும் வாங்கி
கெஞ்சி மன்றாடி கால்களில் வீழ்ந்து
அழுதும் புலம்பிக் கண்ணீர் சிந்தி
அடைந்தேன் காதல் தோல்வி!
தாடியும் வளர்த்து பசியும் துறந்து
துடியாய்த் துடித்துத் தவிக்கும் போது
எட்டாக் கனிக்கு ஏமாந்த நரிபோல்
சீ..சீ.. புளிக்கும் சிறுவர் கதை போல்
ஒருநாள் மனதில் ஞானம் பிறந்தது
எவனுக்கோ அவள் உரியவளென்று
எங்கிருந்தாலும் அவள் வாழ்க என
வாழ்த்தி விட்டு வாழ்கிறேன் இன்று!
இதுதான் பெடியன்கள் கதையுமின்று
கேட்டதை மட்டும் கொட்டினேனிங்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் போல் வாழ்க!

**கடல்**கடந்து கையோடு கொண்டுவந்த தமிழை
உடன்வந்த பண்பாடு, கலாச்சாரம், கலையை
படலைவிட்டு வந்தாலும் பக்குவமாய் இத்தரையில்
பதியம் வைத்துப் பேணிவளர்த்தும் பாதுகாத்து,

பொங்கும் தமிழ்பேசி பொழுதெல்லாம் புகழ்பாடி
சங்கம் பலவைத்துச் சங்கெடுத்துச் சபை முழங்கி
எங்கும் தமிழொலிக்க மாநிலங்கள் வாயடைக்க
தமிழால் இணைந்து நாம் செயலால் இனி வெல்ல,

கொஞ்சும் தமிழ் பேசியின்று, மக்களொன்று கூடி
நெஞ்சமது உவகை யுற்று நானிலமும் வியக்க
வெள்ளிவிழாக் கொண்டாடும் கூட்டுத்தமிழ்ச் சங்கம்
பல்லாண்டு பல்லாண்டு தமிழ் போல வாழியவே

மண்விட்டு வந்தாலும் என்றும் மறக்காது பண்பாய்
புண்பட்ட நினைவோடு, பரந்து வாழ் ஈழவர்க்கு
எண்ணற்ற உதவிகளை எந்நாளும் செய்துகாக்கும்
கூட்டுத் தமிழ்ச்சங்கம் என்றென்றும் வாழியவே

உற்றாரைப் பறிகொடுத்து, உரிமை களிழந்து
பெற்றோரை தவிக்கவிட்டு, தம் பேராயுமிழந்து
இனமழிக்கும் பாவிகளால் ஈழத்தினை இழந்த
அகதிகளை அணைக்கும் தமிழ்ச்சங்கம் வாழியவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலிசை நாடகமும், இனிய சுவையுணவும்
இயன்றிடத் தமிழ்க்கல்வி பள்ளிகள் அமைத்தும்
தாயகப் பெருமை, பாரில் இலங்கிடச் செய்யும்
மாநிலம் வாழும் தமிழ் சங்கங்கள் வாழியவே

வாழையடி வாழையாக வலம் வந்த பண்பும்
ஓலை வடிவில்வந்த இலக்கியச் சிறப்பும்
ஈழமதில் பொங்கிவந்த வீரர்களின் தெம்பும்
உலகெங்கும் பொறிக்கின்ற சங்கங்கள் வாழியவே

நாளைவரும் சந்ததிகள் நிமிர்ந்து உயர்ந்திடவும்
நம்மொழி செம்மொழி அரியணை ஏறிடவும்
ஐ.நா வில் என்றும் தமிழ்மொழி ஒலித்திடவும்
இணைந்தென்றும் செயலாற்றும் சங்கங்கள் வாழியவே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈகை தரும் உயர்வை
# வலிமை தரும் பொறுமை

**பாயில்** படுத்து இன்று
சிரிப்பவரும் உண்டு
பஞ்சு மெத்தையில் படுத்து
அழுபவரும் உண்டு.
அன்பை விதைத்து வருவோம்
இன்பத்தை அறுவடை செய்வோம்
எல்லோரையும் வாழவைப்போம்
இல்லாதோரை ஓங்க வைப்போம்
துன்பம் வரும் போகும்
இன்பம் வரும் போகும்
இதுதான் நியதி
உணர்ந்து புரிந்து கொள்வாய்
அதனைக் கல், அனைத்தும் வெல்
உயர்ந்து நில், உரக்கச் செல்
கணினியை எடுத்துத் தட்ட
கற்பனை கவிதையாய்க் கொட்டும்
தமிழோடு தமிழனும் வாழ்வான்
விடிவினி வருமே தமிழா
எளிமையே தரும் இனிமை
வலிமையே தரும் பொறுமை
ஈகை தரும் உயர்வை
வாழ்வு பெறும் மேன்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுக்கையில் பக்குவமாய் பேசி பல்லிளித்துக் கேட்கிறாள் மனைவி

**தீபாவளி** நெருங்கிட நெஞ்சமே பதறுது
தேதியைக் கிழித்திடத் தேகமே உதறுது
ஆவியே சோருது முகமெல்லாம் வாடுது
ஆண்டவா அவனியில் என்னையும் காத்திடு.

கொம்பனி ஒன்றினில் தொற்றியே புகுந்தே
கனகாலம் கடின வேலை செய்கிறேன்
சம்பள உயர்வினைக் கேட்கவே அன்று
“வெளியே போ” எனச் சொல்லியே விட்டான்

கும்பிட்டுக் காலினில் வீழ்ந்தங்கு எழுந்து
கொடுப்பதை மட்டும் வாங்கிறேன் இன்று
சம்பளம் போதாது, சம்சாரம் தாளாது
கும்பிட்டு வருகிறேன் கடவுளே காப்பாத்து.

(வேறு)
அடுத்த வீட்டு அன்னம்மா ஓடிப்போய் நேற்று
அழகான சேலையொன்றை அவசரமாய் வாங்க
படுக்கையில் கிடந்துகொண்டு பக்குவமாய்ப் பேசி
பல்லிளித்துக் காட்டி அதைக் கேட்கிறாள் என் மனைவி !

கொடுக்க மறுத்திடின் கொடுப்பாளா முத்தம்?
அடுத்த குழந்தையினை தடுப்பதவள் சித்தம்
விடுத்த வேண்டுகோள் விலையெனில் உச்சம்
எடுக்கும் சம்பளம் வேறு போதாதே நித்தம்?

வயதிப்போது ஏழேதான்! வடிவான கோட்டு சேர்ட்டு
வாங்கித் தரச்சொல்லி வதைக்கிறான் விமலன்
கையில் கிடந்ததெல்லாம் கரைஞ்சே போன நிலை!
பையில் பணமில்லை, கடன் ஏறிக் கலங்கும் நிலை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீத்தைப்பூ உடை போட்டால் சிரிப்பார்கள் பெண்கள்
"பற்றிக்தான் வேணும்" என்று புலம்புகிறான் பையன்
"சோறுண்ணவே மாட்டேன் போங்கள் வேண்டாமென்று
வேறேதோ கேட்டு வேண்டுகிறாள் மகள் விஜயா.

கால் முட்டக் காற்சட்டை கட்டாயம் தரவேணும்
மேல் முழுக்க பூப்போட்ட மேலங்கி அது காணும்
பால் வடியும் பாலனும் வாய்விட்டுக் கேட்கின்றான்
தேள் கடித்த திருடன் போல் தவிக்கிறேன் நான்நின்று!

அரக்கனன்று இறந்து போக வந்த தீபாவளியால்
வரும் துன்பம் யாரறிவார் வையகத்திலே இன்று
சீரழிந்த வாழ்க்கையிது சீர் பெறுவதும் என்று
சிறியேனைக் காத்திடுக கண்ணா நீ தான் வந்து!

தேவாதி தேவர்களைக் காத்திட்டாய் நீ அன்று
தீபாவளி நேரத்தில் காத்திடுவாய் இன்றென்னை
தேவாரம் பாடி உன்னைத் துதிக்கின்றேன் இன்று
தீபாவளி தினத்தை நிறுத்திடுவாய் கண்ணா!

"கலகலப்பு" தீபாவளிச் சிறப்பிதழ்
ஐப்பசி 1974




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாகோ பாஸ்கர்

# அடுத்தவர் வலியை நீ தாங்கு

**சந்தர்ப்பத்தை** உருவாக்கு – நண்பா
சரித்திரத்தை நிலை நாட்டு
அதற்கே இன்று புறப் பட்டு – நாளை
உலகிற்கே வழி காட்டு!

வாழ்வினை என்றும் வளமாக்கு – இனி
வருங்காலத்தை உனதாக்கு
இதுவே உனது முதல் நோக்கு – தம்பி
இதையே என்றும் எதிர் நோக்கு !

உறவுகள் உயரக் கரமோங்கு – தமிழுக்கு
என்றும் குரலொாங்கு
அடுத்தவர் வலியை நீ தாங்கு – அதனால்
வாழ்க்கையில் நீ ஓங்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலப் படைப்பாளி கமலாகரன்

**ஆங்கில** இலக்கியத்தின்
எல்லையைக் கண்டவர்
பொங்கிடும் நினைவுகள்
கவிதையாய்த் தொடுப்பவர்

ஆசிரியராக விருந்து
அரும்பணி பல புரிந்து
பெரும் சாயி பக்தனாக
பக்தியில் திழைப்பவர் பண்பினர்

அன்னையைப் பேணியும்
செந்தமிழைப் போற்றியும்
உலகெங்கும் தேடித் சென்று
சுற்றம் அணைப்பவர்


கமரா முடுக்கி
நிழல் படம் எடுப்பவர்
கமலாகரன் பெயர்
பரதனாய்ப் பிறந்தவர்

கவிதைகள் கட்டுரை
கதைகள் செய்திகள்
புவியினர் புகழ்ந்திட
எழுதியே குவிப்பவர்

மண்ணின் அவலங்கள்
மக்களின் ஏக்கங்கள்
எண்ணிலாத் துன்பங்கள்
எழுத்திலே தருபவர்

கலவரம் கண்டதும்
கடலினைக் கடந்ததும்
பலவித அனுபவம்
பேனாவில் வடிப்பவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(வேறு)
பிறந்த மண்ணில் இவர்
படைத்த ஆக்கங்களை
பல ஏடுகள் பதித்தன
படித்தோரைக் கவர்ந்தன

புலம் பெயர்ந்த போதும்
இலக்கியப் பணி விரிந்தது
ஆங்கிலப் படைப்புகள்
தொடர்ந்து வெளி வந்தன

படைப்புகளில் பதுங்கியிருந்த
அனுபவங்கள் பேனாவால்
எளிமை இனிமையாக
ஆழமாகப் தொனித்தன

அவற்றின் தொகுப்பாய்
பிரசவித்தது தான்
சிறுகதை நூல் பெயர்
"பிரதிபலிப்பு"

கனடாவில் வெளிவரும்
"மொன்சூன்" இதழில்
கனமான இவர் ஆக்கம்
இல்லாத பதிப்பில்லை

ஆங்கிலம் மிளிர
இலக்கியம் விளங்க
படைப்புகள் துலங்க
வாழ்க என வாழ்த்துவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்விட்டுப் பிரிந்தாயடா?

**இசைக்கொரு** மன்னா இணுவிலின் மைந்தா எங்கு போனாயடா - தம்பி
அனைவரும் துடிக்க, ஆவியும் கலங்க ஓடி மறைந்தாயடா
தனியொரு தம்பி இருக்கிறானென்று மகிழ்ந்து இருந்தேனடா - ஐயோ
இனியொரு தம்பி எனக்கினி இல்லை, ஏன்விட்டுப் பிரிந்தாயடா?

மேடையில் ஏறி, நீ பாடும் வேளையில் என் உச்சி குளிர்ந்ததடா - நீ
பாடையில் இன்று போவதை நினைக்கையில் என் இரத்தம் உறையுதாடா
ஆடம்பரமாய் மேடையில் வருவது அற்புதக் காட்சியடா - நீ
பாடிட ஒலிவாங்கியை கைகளில் எடுத்திட கரகோஷம் ஒலிக்குமடா!

பொன்குரல் கொண்டு நீ பாடிடும் போதினில் இன்பமே பொங்குமடா - என்
எண்ணத்தில் நிறைந்த உன் நினைவுகள் இனிமேல் எப்படிப் போகுமடா!
உன் பாடல் கேட்டதும் பரவசமடைவது எங்களின் மகிழ்ச்சியடா - அந்த
ஆண்டவன் இரசித்திட்டு உன்னையே கவர்வது எப்படி நீதியடா?

கோணங்கள் பல கண்டு, கருவியில் நீ சுட்ட எத்தனை படங்களாடா - உன்
கைவண்ணம் நீ கொண்டு வடித்திட்ட காணொளி நெஞ்சத்தை அள்ளுமடா
முத்திரை பதித்திட மேடையில் முழங்கிடும் ஈழத்துப் பாடலடா - அன்று
சங்கரா படித்ததும், சபையே எழுந்ததும் சங்கங்கள் கூறுமடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்திட வைத்திட, சிந்தையில் தைத்திட நகைச்சுவை தந்தாயடா – ஐங்கு
அறிந்தவர், தெரிந்தவர் அத்தனை மனிதரும் உனக்கென்றும் நண்பரடா
குறையது தெரிந்திடின், நேர்த்தி தவறிடின், கோபம் பொங்குமடா – நிகழ்ச்சி
தாளங்கள் தவறினால், மேளங்கள் குழம்பினால் மேடையே நடுங்குமடா!

உன் பாடலைக் கேட்கவே தோழர்கள் வந்துள்ளார் எழுந்து நீ வந்திடடா – நீ
கண்ணெனப் பார்த்திட்ட துணைவியும் வந்துள்ளார் கண்ணைத் திறந்திடடா
அன்புடன் மகளும் மகனும் இருக்கிறார் துள்ளி எழுந்திடடா – என்றன்
கவிதையைக் கேட்டிட, கண்ணீர் துடைத்திட தம்பி எழுந்து வாடா!

கை பட்டு, நீ தொட்ட கீ போர்ட்டும் இன்று கண்ணீர் வடிக்குதடா – ஐயோ
இசையது கூட உன் தமிழதும் இன்றிக் கலங்கித் தவிக்குதடா – அந்த
ஒலிவாங்கி கூட உன்குரலின்றி இன்று குளறிக் குமுறுதடா – உன்
விரல்பட்டு முடுக்கி வைத்த கமராவும் குலுங்கி அழுகுதடா!

இசையின் நுட்பத்தைக் குடைந்து பார்த்தவர் எவரும் இல்லையடா–இசைக்
கருவிகள் கூட உன்னைப் பார்த்தால் தானாய் இயங்குமடா
திசைகள் எட்டுமே உனது ஓசை தேனாய் ஒலித்ததடா – தம்பி
திகைத்து நிற்க, தெய்வம் மறக்க இன்று மறைந்தாயடா!

சிரிக்கவே நண்பர்கள் வைத்திட்ட, நீ இன்று எப்படிப் போனாயடா – உன்றன்
உறவுகள் விம்மிட, ஊனது உறைந்திட ஏனின்று மறைந்தாயடா
சிந்தையும் கலங்கிட, நண்பர்கள் துடித்திட, தூரமே சென்றாயடா – இன்று
உலகெங்கும் வாழ்கின்ற சொந்தங்கள் பதறிட ஏன்தான் பிரிந்தாயடா?

அம்மா மடியினை அப்பா துணையினை தேடியோசென்றாயடா – "ஐங்கு"
அண்ணா அணைப்பில், ஆண்டவன் அழைப்பில் அகிலம் துறந்தாயடா
ஆசை மனைவியை அன்புத் துணையினை எப்படி மறந்தாயடா – ஐங்கு
பிள்ளைகள் இருவரும் கதறி அழுதிட எப்படிப் பிரிந்தாயடா?

"நீல வான ஓடைப்" பாடலை, இனி என்று நாம் கேட்போமடா – அந்த
நீல வானம் கூட நீ இல்லையே என்று கண்ணீர் வடிக்குதடா
கோலம் போடும் கண்ணீர் எங்கள் விழிகளில் காலம் தந்ததடா – இனி
வாழும் வரையும் எங்கள் நினைவில் நீயே தான் தெய்வமடா!

(என் தம்பி ஐங்கரன் பிரிந்தபோது உதிர்ந்த கவிதை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பக்தன்-கடவுள்!

**நான்** குழந்தையாக, ஒரு சிறுவனாக,
வாலிபனாக, மாணவனாக வளர்ந்தேன்
காதகனாக, காமுகனாக, காவாலியாக,
வேண்டாதவனாகப் பாரில் சீரழிந்தேன்
தோல்வியடைந்து, வெறுக்கப்பட்டு,
ஒதுக்கப்பட்டுப் பின் சிதைந்தேன்

அறிவிலியாக, கேவலம் முட்டாளாக,
வேலையில்லாதவனாக அலைந்தேன்
பக்தனாக, பகல் வேசக் காரனாக,
பரதேசியாக, பாவியாகத், திரிந்தேன்

பொய் பேசி பித்தலாட்டம் செய்து
களவெடுத்துக் குற்றவாளியானேன்
புகை குடித்து கடன் பட்டு அழிந்தேன்
பகை வளர்த்து படுநோயில் படுத்தேன்

கோபக்காரனாக, பிடிவாதக்காரனாக,
புறஞ்சொல்பவனாகக், சிரிக்க மறந்தேன்
கோபக்காரனாக எதிரியாக, எத்தனாக
ஏமாற்றுக்காரனாக அன்று தவித்தேன்

நகைச்சுவை மன்னனாக, நடிகனாக
குறும்புக்காரனாக உருவெடுத்தேன்
துரோகியாக, இராவணனாக, சகுனியாக
குகனாக இராமனாகவும் வேடமிட்டேன்

கதாசிரியனாக, கவிஞனாக கலைஞனாக
இரசிகனாகக் கற்பனையில் மிதந்தேன்
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசி
குறை கூறி அங்குமிங்கும் திரிந்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொடுப்பவனாகவும், எடுப்பவனாகவும்
தடுப்பவனாகவும் மேலும் இருந்தேன்,
காதலனாக, கணவனாக, தகப்பனாக,
கர்ணனாக நல்லவனாக மிளிர்ந்தேன்

மேலாளனாகவும், தலைவனாகவும்,
நல்லவனாகவும் தொழில் புரிந்தேன்
இது என் வாழ்க்கை அல்ல
எல்லோருடைய வாழ்வின் சுருக்கம்

இதைச் சொல்லப் பலருக்குத் தயக்கம்
பொதுவாக இதுவே வாழ்வின் விளக்கம்
இப்படி எல்லா மனிதப் பிறப்புகளும்
ஆன்மாக்களின் விதிப்படி ஏதேதோ
பாத்திரங்களை ஏற்றுக் கொண்டு
வாழ்ந்திளைத்தோம் எம்பெருமானே!

வயது எல்லைக்குள் வந்ததும் இந்த
வாழ்க்கையின் இரகசியம் புரிகிறது
கடவுள் முன்பாகக் கையெடுத்துக்
கும்பிடும்போது நான் ஒரு பக்தனாக
மட்டுமே இருப்பேன் - ஆனால்
ஏழையின் முன்பு கையெடுத்துக்
கொடுக்கும் போது நானும் ஒரு
கடவுளாக இருப்பேன் என்பது
இப்பதானே தெரிய வந்தது

இனி, நான் நானாக இருக்கப் போகிறேன்!
மனிதனாக மட்டுமல்ல,
அதற்கு மேலே...
என்னோடு சாதாரண வாழக்கை வாழாமல்,
அர்த்தமான வாழ்வை வாழ்வதற்கு
தயாராக இருக்கிறீர்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒன்று சேருவோம் தமிழா

**ஒன்று** சேருவோம் தமிழா - நாம்
இன்று கூடுவோம் தமிழா
உயர்ந்து நிற்கவும் உலகம் போற்றவும்
உண்மையோடு கற்போம் என்றும்
உறுதியோடு நிற்போம்!

கல்வியோடு பல கலைகள் கற்று - நல்
அறிஞராக வருவோம் எதிலும்
முதன்மையாகத் திகழ்வோம்
நாடு வாழவும் ஏடு போற்றவும்
மாற்றம் கண்டு வைப்போம் - மண்ணில்
ஏற்றம் கொண்டு சேர்ப்போம்!

வங்கம் கடந்தாலும் வாழ்வு சிறந்தாலும்
எங்கள் மண்ணை மறவோம் - என்றும்
தங்கத் தமிழைப் பிரியோம்
சங்கத் தமிழ் பேசும் மண்ணின் உறவுகள்
பொங்கும் வளங்கள் காண்போம் - மண்ணில்
சங்கு முழங்க வைப்போம்!

மண்ணில் விதைத்தவரை மானம் காத்தவரை
மனதில் அகற்ற மாட்டோம் - முள்ளு
வேலி மறக்க மாட்டோம்
வாழ்வு செழிக்கவும் வளங்கள் கொழிக்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விடியல் நோக்கிச் செல்வோம் - உறவுகள்
சிரித்து வாழச் செய்வோம்!

நீதியோடு நல்ல நேர்மையோடு என்றும்
வீதி தோறும் வருவோம் - நாங்கள்
நியாயம் கேட்டுத் திரிவோம்
ஓதி உணர்ந்தவரும், போதி மதத்தவரும்
நாணிக் குனியாகி செய்வோம் - தமிழர்
தலைகள் நிமிர வைப்போம்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வான்கோழி விடுமுறை!

**விண்ணுக்கு** வான்கோழி பல கொன்று அனுப்பியே – நாம்
நன்றிகள் கூறிடும் நல்லதோர் விடுமுறை
உறவுகள் இணைந்தின்று ஒன்றாகக் கூடியே – நல்ல
ஊனுண்டு குடித்தின்று வாழ்ந்திடும் ஒருமுறை!

வந்தாரை வாழவைத்து வாழ்ந்தது தலைமுறை – ஆனால்
வாழ்ந்தவரும் தாழ்ந்துவிட்டார் அமெரிக்காவில் இம்முறை
பூகோள வர்த்தகம் நன்கு பூப்படைந்த வேளையில் – இங்கு
புஸ்வாணம் ஆகிப்போச்சு அமெரிக்காவின் முதல் வளம்.

யாருக்கு நாமின்று நமது நன்றியினைக் கூறுவோம் – இந்த
ஊருக்கு வந்தகேட்டை இன்று எவரிடம் பேசுவோம்
இருப்பதெல்லாம் வீட்டினிலே சீனாவின் கைவண்ணம் – நாம்
இன்றைக்கு சமைக்கின்ற கோழியுமா இவர் நல்லெண்ணம்?

வந்தாரை வரவேற்று வாழவைத்தது ஒரு காலம் – ஆனால்
சுவர்போட்டு தடையிட்டு மறுப்பது இக்காலம்
பங்குச் சந்தை பாய்வது பலவருடத்தின் பிற்பாடு – அதையும்
ஏற்றி இறக்கி காட்டுவது சீனாவின் விளையாட்டு

செவ்விந்தியரை ஒருபக்கம் தள்ளியது அக்காலம் – நம்
இந்தியரையும் தடை செய்ய பார்ப்பது இக் காலம்
குடியேறி வந்தவரால் உயர்ந்தது பொற்காலம் – நாளை
சீரழிந்து போகுமோ ட்ரம்பட் ஊதும் நற்காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளிக் கலம்

**கனவினை** விதைத்து - இளைஞர்
நினைவினில் புகுந்து
காலத்தை வென்று - தமிழ்
கவிதையும் புனைந்து
எண்ணத்தை வளர்த்து - பெரும்
ஏற்றங்கள் அடைந்து
விண் கலம் கண்டு - இன்று
வான்புகழ் கலாம் ஆனார்

அரும் சாதனையால் - என்றும்
அப்துல் கலாம் வாழ்வார்!
திட்டங்கள் பல தீட்டி - பல
பட்டங்கள் தான் பெற்றார்
பொன்மனம் தான் கொண்டு - இந்திய
மண்ணதின் வித்தானார்
எண்ணற்ற சாதனையால் - உலகில்
பாரதப் புகழ் கண்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினிச் சிறகதனை – எழுதி
அகிலத்தை ஆட்கொண்டார்
வல்லரசாகும் என்று – இந்திய
வளர்ச்சியைப் பகுத்துணர்ந்தார்
இளைஞரை ஊக்குவித்து – நாளை
நம்பிக்கை தான் வளர்த்தார்
வேற்றுமை கள் களைந்து – நாட்டின்
தேசியத் தலைவரானார்

விஞ்ஞானம் வளர்ச்சி யுற – நமது
மெய் ஞானம்துணை கொண்டார்
திருக்குறள் வழி நடந்து – புகழ்
தமிழர்கள் பெறவைத்தார்
மேடையில் பேசியதை – இன்று
வானவர் கேட்டனரோ
மேதையின் அறிவு கண்டு – அங்கு
பேசிடக் கவர்ந்தனரோ?

விண்வெளிப் புகழ் காண – இன்று
விண்ணகம் அழைத்தனரோ
வான்வெளிக் குடியரசின் – பெரும்
தலைவராய்த் தேர்ந்தனரோ?
கலாமுடன் வாழ்ந்திட்ட – பொற்
காலமும் இதுவன்றோ
வளமுடன் அவர் தந்த – நற்
பயன்களும் பலவன்றோ
இளைஞர்கள் வளம்பெறவே – அவர்
வழிகளைப் பொறித்ததனால்
வல்லரசாய்ப் பாரதமும் – நாளை
மிளிர்ந்திடும் கண்டிடுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு படைக்கும் உளுந்து வடையே!

**உலகெங்கும்** கம கமத்து உற்சாகம் தான் தந்து
உன்னத வரலாறு படைக்கும் உளுந்து வடையே
வட்டமான உருவத்தோடு குழிவிழுந்த தோற்றத்தோடு
பண்டைத் தமிழர் கண்டு பிடித்த புராதன வடையே!

குளி ரடித்தாலும் வெண்பனி கொட்டித் தீர்த்தாலும்
மழை பெய்தாலும் எங்கள் மனம் சோர்ந்தாலும்
துயர் சூழ்ந்தாலும் என்னதான் துன்பம் துளைத்தாலும்
உயர்வாக உற்சாகம் தந்து உயிரூட்டும் வடையே!

வீட்டை விட்டு வந்தாலும், நாட்டை விட்டுப் பறந்தாலும்
ஓட்டை போட்டு, பாட்டி சுட்டு, சொன்ன கதை மறந்தாலும்
மனமெங்கும் நிறைந்திருக்கும், சுவை விட்டுப் போகாத
உலகெங்கும் கம கமக்க புகழ் கண்ட உளுந்து வடையே!


பல்லில்லாப் பழையோர்க்கும் சொல்லில்லாச் சிறியோர்க்கும்
“பைக்கில்” செல்லும் புதுசுக்கும் படித்தோர்க்கும் பாமரர்க்கும்
சுடச் சுடத் தேநீர் தொட்டுத் தின்னச் சம்பலோடும்
சுவையூட்டும் மெதுவடையே உன்னை நாம் மறப்போமா?

செல்லடித்தும் சாகாமல், குண்டடித்தும் மடியாமல்
ரீக்கடையில் அழகாக, வீற்றிருக்கும் மெது வடையே,
உப்பியிருந்தாலும் இன்று ஊசிப்போய் தெரிந்தாலும்
பரந்தின்று தமிழனின் புகழ் பரப்பும் மெது வடையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரோரா கோயிலிலும் அந்த ஆண்டவன் வாசலிலும்
வரவேற்கும் வாசத்திலும் வரிசையாக நிற்கையிலும்
பிரார்த்தனை நேரத்தில் பகவானை வணங்கும்போதும்
பசியோடு உன் நினைவு வந்திடுமே என் வடையே!

திருமணப் பந்தியிலும் திருவண்ணாமலை தனிலும்
சிங்கள நாட்டினிலும் தமிழகத்துத் தெருக்களிலும்
சிறப்பாகச் சூடாக சிந்தையள்ளும் மெது வடையே,
சிறக்காது சபை என்றும் நீயின்றி எம் வடையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழி தமிழில் கூவாதா?

**மண்** தொட்ட குருதியும் விண் தொட்ட குமுறலும்
மாதங்கள் சென்றாலும் மனம்விட்டுப் போகுமா?
வேதனை விம்மல்கள் என்றாவது இனி நீங்குமா
நீதி புலம்பிட நேர்மை கலங்கிட நியாயம் வராதா
துயரங்கள் தொடர்வதே என்றும் எங்கள் நிலையா
உலக அரங்கினில் உண்மை தெரிய போராட்டமா
உரிமைகள் உடைமைகள் கிடைப்பது பகற் கனவா
உலகத்தின் கரங்கள் எங்களை உயர்த்தி உதவாதா
நாளைய பொழுது அங்கு மலர்ந்து எமக்கு விடியாதா
எங்கள் மண்ணில் ஈழம் பிறக்க சங்கே முழங்காதா
கொக்கோ எனக் கோழி நாளை தமிழில் கூவாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கென்ன? உனக்கென்ன?

**நிலம்** இழந்து உடல் நலம் இழந்து
மனை இழந்து எங்கள் மானம் இழந்து
உரிமை இழந்து உடமை யாவுமிழந்து
இன்று நீதிக்கு உலகெங்கும் கையேந்தி
சொந்த மண்ணிலே இன்று அகதிகளாகி
ஊரெங்கும் பிச்சை எடுத்துத் திரிகிறோம்

எங்கள் இனம் கொஞ்சமாக அழியுது
காணிகள் கோயில் காணாமல் போகுது
உறவுகள் சாப்பாடு இல்லாமல் தவிக்குது
பல்லாயிரக் கணக்கான விதவைகள்
முடமானவர் முகவரி இல்லாதவர்கள்
சீதனமின்றி குசினிக்குள் பல குமரிகள்
வீடு வாசல் இல்லாது அலைபவர்கள்
அடிப்படை வசதியின்றி துடிப்பவர்கள்
தமிழன் இல்லாத ஊரே இல்லையாம்
தமிழனுக்கு ஆனால் ஒரு நாடில்லை
அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை!

ஆடுவோம்! பாடுவோம்! பேசுவோம்!
கூட்டம் கூடுவோம் கதறுவோம்
ஒலிவாங்கியில் பலமாய்க் கத்துவோம்
முகநூலில் எழுதிக் கவி பாடுவோம்!
உண்போம் உழைப்போம் உறங்குவோம்
நாளைக்கு மண்டையைப் போடுவோம்!
அதனால் எனக்கென்ன? உனக்கென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தான் தப்பி ஓடி வாழ்கிறேனே!
வெளிநாட்டில் வசதியாக இருக்கிறேனே
வீடு வாசல் விருந்து ஆட்டம்
மது கொண்டாட்டம் களியாட்டம்
எனக்கென்ன..
யார் உண்டாலென்ன..?
யார் சீரழிந்தாலென்ன..?

நானுண்டு என் குடும்பமுண்டு
ஓ..! எனக்குத்தான் சூடு சொரணை
மருந்துக்கும் என்றும் இல்லையே!
ஏனென்றால் நானும் ஒரு தமிழன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளத்தால் உயர்ந்த வள்ளல்!

**வள்ளுவன்** வழியில் தவறாது வாழ்ந்து,
வழிகாட்டியாகத் திகழ்ந்த ஒப்பற்ற மனிதர்
உள்ளத்தால் உயர்ந்து ஊருக்கு உழைத்து
பைபிள் வடிவில் திருக்குறள் தந்த வள்ளல்!

வள்ளுவன் காட்டிய ராம் மோகன் பாதை
வாழுமவர் வாழ்க்கை சொல்லிடு மீதை
கரம் பற்றிய மீனா ராம் மோகனின் சீதை
மோகனுக்கு வாசுகியாய் வாய்த்த நற்பாவை!

தமிழது என்றும் இராம் சுவாசிக்கும் மூச்சு
தமிழீழம் வேண்டுவதே என்றுமிவர் பேச்சு
தமிழரின் உரிமை விரைவினில் கிடைக்கும்
தமிழாய் வாழ்ந்த இவர் கனவும் பலிக்கும்!

கடலைக் கடந்து கல்வி கற்று உயர்ந்தார்
விடலை தமிழ்பண்பைப் பேணி வளர்த்தார்
அறிவை வளர்த்து ஆராய்ச்சிகள் செய்தார்
அகிலம் செழிக்க பல நூல்கள் படைத்தார்!

நீதியும் நேர்மையும் தவறாது வாழ்ந்தார்
குறிக்கோள் கொள்கையும் வேண்டும் என்பார்
சாதியற்ற சமுதாயம் ஈழத்தில் அமைத்து
சாதித்த தலைவனையும் நன்கு புகழ்ந்தார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகை பூத்த முகத்தில் பூரிப்புத் தெரியும்
எண்ணில டங்காச் சாதனை பொங்கியே வழியும்
இவர் செய்த பணிகளை அறக்கட்டளை கூறும்
எப்படிச் செய்தார் என்பதை நூல்கள் பல பாடும்!

புத்தகங்களில் இருந்த இவரின் ஆழமான பற்று
பத்தாயிரம் நூல்களை வாழ் நாளில் சேர்த்து
நூல்நிலையம் ஊரில் அமைக்கின்ற பணியும்
வாழ்நாளின் சாதனைக்கு மைல் கல்லாகும்!

புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் புகழோடு
குலம் வாழ, தமிழ்வாழ அறத்தோடு வாழ்ந்தார்
குறளோடு தமிழ் வளர்க்க மறுலோக மழைக்க
பணியென்று எம்மை விட்டின்று பிரிந்தார்!

உரிமை காணவேண்டும், ஈழம் போகவேண்டும்
வறுமை நீங்க வேண்டும் வாழ்க்கை உயர வேண்டும்
அறங்கள் பேணவேண்டும், சாதி நீக்க வேண்டும்
அதற்கு ராம்மோகன் மீண்டும் பிறக்க வேண்டும்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெய்வத்தின் பிரதிநிதியாய் வாழும் ஞானி

**மக்கள்** சேவையே மகேசன் சேவையென்று
மனதிற் கொண்டு, தனது கடமையுமென்று
நல்லற மயமாக வாழ்ந்து கொண்டு,
இணையற்ற சேவை செய்யும் இனிய மகன்!

மானுட வாழ்க்கையின் அர்த்தம் உணர்ந்து
மனித நேயத்துடன் தாய் மண்ணை நினைந்து
அரிய பணிகளையும் அன்றாடம் உணர்ந்து
அனைவர்க்கும் உதவுகின்ற அரிய மனிதர்

போரின் எச்சம் தந்த பொல்லாத துயருளின்று
போராடும் உறவுகளுக்கு தன் கரம்கொடுத்து
பசி போக்கி, பிணி போக்கி, இன்னல்கள் நீக்கி
பலரையும் காக்கின்ற இணையற்ற பண்பாளர்

உற்றாரைப் பறிகொடுத்து, உடமைகளுமிழந்து
பெற்றோரைத் தவிக்கவிட்டு, ஆதரவில்லாது
அன்றாடம் அலைந்து அல்லலுற்று வாழ்கின்ற
உறவுகளுக்கு உதவும் அன்பான நண்பனிவர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயோதிபர், பல வழியில் வலிமை குன்றியோர்
ஆதரவற்றோர் நோய் வாய்ப்பட்டுள்ளோர்
அனைவருக்கும் கலங்கரை விளக்கமாய் நீங்காத்
துணையாக நின்று வழிகாட்டும் சொல்வேந்தன்

பிறந்த பிறவியும் பெற்ற மண்ணும் சிறக்க
பேசும் தமிழும் பெரியோர்களும் போற்ற
தேசமெங்கும் ஆன்ம உபதேசத்தைப் பரப்பி
தெய்வத்தின் பிரதிநிதியாய்த் திகழும் ஞானி!

இரவு பகல் பாராது ஊனுறக்கம் போற்றாது
ஓடி யாடித் தினம் உறவுகளுக்கு உதவ
ஊர் ஊராகச் சென்று சொற்பொழிவு பல செய்து
ஓயாமல் உழைக்கின்ற ஐயனிவன் ஒரு தேனீ

சிவ பூமி என்ற நிலையத்தை உருவாக்கி
சிவபூமியாக நமது மண்ணினையும் மாற்றி
அவதார மனிதராய் ஏழை மக்களையும் பேணி
சிவன் எமக்குத் தந்த மாபெரும் மாபெரும் சொத்து

அறத்தோடு வாழ்வதே பெரும் இன்பமென்று
சிரமத்தைப் பாராது சிந்தையில் அருள் கொண்டு
உறவுகள் வாழ்வு செழித்திடவே செய்கின்ற
ஊர் போற்ற வாழும் ஊர் தந்த உத்தமக் கோன்!

வாழையடி வாழையாக வளர்ந்து வந்த பண்பும்
ஈழமதில் பொங்கிவந்த அரவணைக்கும் பேரன்பும்
உலகெங்கும் சென்று உறவுகளைக் காக்கின்ற
மனம்கொண்ட மனிதரைப் போற்றி வணங்கிடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

**துன்பம்** வரும்
தொலைந்து போகும்

இன்பம் வரும்
பறந்து போகும்

இன்னல் இருக்கும்
இனிமை தொடரும்

இலைகள் உதிரும்
மீண்டும் வளரும்

சூரியன் உதிக்கும்
சாயலில் சாயும்

மலர்கள் பூக்கும்
மாலையில் வாடும்

இருளும் சூழும்
இரவும் விடியும்

இளமை துள்ளும்
கவிதை கிள்ளும்

கடிதம் பொருத்தும்
தடைகள் பிரிக்கும்

கண்ணீர் வடியும்
காதல் உடையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாய் பிறக்கும்
புதுப்பெண் கிடைக்கும்

வாழ்க்கை தொடங்கும்
வாலிபம் முடங்கும்

காமம் சுரக்கும்
கைகளில் தவழும்

இரண்டோ மூன்றோ
அடுத்துப் பிறக்கும்

வேலை அழுத்தும்
தேவைகள் வருத்தும்

பொருட்கள் சேரும்
கடனும் கூடும்

இரத்தம் பாயும்
இனிப்புத் தேயும்

நோயும் தேடும்
மருந்தும் நாடும்

வாலிபம் சோரும்
வயோதிபம் சேரும்

வயோதிபம் வெருட்டும்
விடுதிகள் அழைக்கும்

மூட்டுக்குள் வலிக்கும்
மூதேவி சிரிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவோலை பிரியும்
குருத்தோலை சிரிக்கும்

முடியது கொட்டும்
முடிவதும் கிட்டும்

காலனும் வருவான்
கயிறதும் எறிவான்

பேரது நீங்கும்
பிணமென்று ஆகும்

பிள்ளைகள் கூடும்
பாசத்தால் வாடும்

துணையது துடிக்கும்
துன்பத்தால் வெடிக்கும்

ஒப்பாரி ஓலம்
அப்பாடல் சுண்ணம்

குருக்கள் தம் பூசை
அவரவர்க்குள் ஆசை

கட்டிலில் இருந்தது
பெட்டிக்குள் மாறும்

பெயரும் போகும்
புகழும் போகும்

பட்டம் போகும்
பதவி போகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(வேறு)
அந்தஸ்து போகும்
ஆணவம் போகும்

பணம் போகும்
பொருள் போகும்

சொந்தம் போகும்
சுற்றம் போகும்

காதல் போகும்
காமம் போகும்

மகிழ்ச்சி போகும்
மனைவி போகும்

நோய்கள் போகும்
நேரம் போகும்

நாலுபேர் வருவர்
தூக்கியே சுமப்பர்

உடலைக் காவிகள்
சுடலை போகும்

பதிகம் படிக்கும்
பறையும் முழங்கும்

தோள்களில் பெட்டி
சுற்றும் சிதையை

பானை உடையும்
நெருப்பும் நெருங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளி வைக்க
உடலும் பொசுங்கும்

உறையும் அழியும்
எலும்பும் உருகும்

சாம்பல் கிடைக்கும்
உறவுகள் துடிக்கும்

மறதி மாற்றும்
மற்றவை தொடங்கும்

ஆன்மா பிறந்து
அகிலம் மீளும்

உணர்ந்து கொள்க
புரிந்து கொள்க

நடப்பது என்றும்
நடந்தே தீரும்

வருவது நிச்சயம்
வந்தே சேரும்

போவது என்றோ
போயே ஆகும்

இதுவே நியதி
அதுவே பிறவி

அதனைக் கற்பாய்
அனைத்தும் வெல்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்து நிற்பாய்
உரக்கச் சொல்வாய்.

மனிதா சிந்தி
நேரம் போகுது

நல்லதை நினைப்பாய்
நல்லதைச் செய்வாய்

அன்பை விதைப்பாய்
ஆசையை உதைப்பாய்

அள்ளிக் கொடுப்பாய்
இறையைத் தொடுவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடத்தின் கவிதை

**மண்ணில்** விளைந்த
மானுடத்தின் கவிதை
மண் விட்டுக் வந்துவிட்டு
புண் பட்டுக் நிற்கின்றோம்!
பாசத்தைத் தொலைத்துவிட்டு
கண் கலங்க ஏங்குகின்றோம்.

கடல் கடந்து வந்தாலும்,
விடேன் என்று தொற்றி,
உடன் வந்து நினைவைக்
கிளறும் பாசத்தை
மறக்க முடியுமா?

நேசத்தை நீக்க முடியுமா?
"மச்சான், எப்பிடிச் சுகம்?"
"சித்தப்பா, சாப்பிடுங்கோவன்"
"வெயிலுக்குள்ளாலை வாறீங்கள்"
சொல்லியிருந்தால் வந்திருப்பன்,

தலையிலை துண்டையாவது
போட்டுக் கொண்டு வரலாம்
சொன்னாலும் கேட்கமாட்டியள்
"அண்ணை, களைச்சுப் போனியள்
சோடா வாங்கித் தரட்டே"
"சின்ராசா, தூரத்திலை இருந்து
உழக்கிக் கொண்டு வந்திட்டியள்
ஒரு வாய் சாப்பிட்டிட்டுப் போங்களன்"

"சிவத்த மாடு கன்று போட்டுட்டுதே?
கொம்மாக்கு அந்த மாட்டிலை உசிர்"
"பிள்ளை சரியா இருமிக் கொண்டு வாறாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடுதண்ணி வைச்சுத் தாறதே"
"தம்பி கவனமாய்ப் படிக்கிறியோ?
உன்ரை அப்பன் உன்னைத்தான் ராசா
நம்பி இருக்கிறான்,

படிச்சு ஒரு நல்ல வேலையிலை
சேர்ந்திட்டியெண்டால் உங்கடை
உங்கடை இட்டு மூட்டுகள்
தீர்ந்து போகும்.
உனக்குப் பின்னாலை மூண்டு
சிறுசுகள் இருக்கிதுகள்.

கொம்மாவும் படுத்த படுக்கையா
இரண்டு மாதம் கிடக்கிறாள்
கிணற்றடி வயிரவர்தான் துணை "
இவை போன்ற ஆழமான
அன்பில் குழைத்தெடுத்த,
வடிகட்டிய, கள்ளம் கபடம்
இல்லாத வார்த்தைகள்,
நாம் பிறந்த மண்ணில்தான்
ஊற்றெடுக்க முடியும்.

அந்த மண்ணில் பிறந்ததற்காக
நான் பெருமைப்படுகிறேன்!
பிறந்த மண்ணில் விளைந்த
அந்தப் பாசத்திற்கும்,
புகுந்த மண்ணில் விளைந்த
இங்குள்ள பாசத்திற்கும்
இடையே பெரும் வித்தியாசம்
இருப்பது உண்மைதானே.

ஊரில் காய்த்த மாம்பழத்திற்கும்
வெளிநாட்டில் இறக்குமதி செய்யப்படட
மாம்பழத்திற்கும் இருப்பது போல..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மண்ணுக்குரிய பண்பும், சமூகத்தின்
பாரம்பரியத்தில் வடிகட்டி
வந்த பண்பாடும்
வெளிநாட்டு மோகத்தில்
நாம் மறந்து போனவற்றில் சில.
இழந்து போனவற்றில் பல.

வீதியில் நடக்கும் போது
எதிரே வருபவரின் புன்னகையும்,
சுகமா இருக்கிறீர்களா?
என்பதற்கு ஒரு விதமான
தலை அசைப்பும்,
நல்லாக இருக்கிறேன்
என்பதற்கு இன்னொரு
விதமான தலை அசைப்பும்,
எல்லாம் சரியாக இருக்கிறது
என்பதற்கு ஒரு தலையசைப்பும்
எமது மண்ணில் விளைந்த
மானுடத்தின் புதுக் கவிதைகள்.

ஆத்ம இராகத்தின்
பிரதிபலிப்பல்லவா?
இவை போல நாம்
மண்ணைவிட்டு வந்த தாலே
பலவற்றை இழந்து போய்
நிற்கின்றோம்.

சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.
ஆம்! பிறந்த மண்ணுக்கே
போய்விடலாம் என்ற
அடிமனத்தில் சின்ன ஆசை
முகிழ்க்கத்தான் செய்கிறது!
போவோமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## சுவடுகள்

**என்** வாழ்க்கையிலன்று
நான் பதித்த சுவடுகளை
திரும்பிப் பார்க்கிறேன்
காலம் கடந்த சிந்தனை!

என்னை நானே உணர்தல்
எனக்குள்ளே ஒரு புரிதல்
இந்தச் சுய தரிசனத்தை
அப்பப்போது என் வாழ்வில்
அலசிப் பார்த்திருந்தால்
சிறப்பாக உயர்வாக என்
பிறப்பு இருந்திருக்குமோ?


இருக்கலாம் ஆனால்
அன்று முடிந்திலையே..?
எல்லாம் முடிந்து போயிற்று

கறந்த பால் என்றாவது
மறுபடி முலை ஏறுமோ?
பல பிழைகள், தவறுகள்
நல்லவை, தரமானவை
வெட்கப்பட வேண்டியவை
வேதனைப்படக் கூடியவை
தலை குனிய வைப்பவை
தலை நிமிரச் செய்பவை
எல்லாம் முடிந்து போனவை
எதையும் மாற்ற முடியாது

என்னிடம் எழுதப்படாத
ஒரு குறிப்பேடு இருந்தது
என் வாழ்க்கையைப் பற்றி
மற்றவர்களுக்காக நான்
எழுதி வைக்க வேண்டியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிகாகோ பாஸ்கர்**



எனது வாழ்க்கை நாளை
ஒருவருக்காவது நல்ல
பாடமாக இருக்க வேண்டும்
என்பதற்காக ஒரு அமைப்பு

ஆனால் அதில் சில பக்கம்
மறைந்து போய் விட்டன
என் முதுகிலும் ஊத்தை
அகற்றவேண்டும் முடியாது
எரித்து அழிக்க வேண்டும்
அவன் எழுத்து என்னவோ

மனச்சாட்சிக்குப் பயந்து
சில பக்கங்களை கிழித்து
தூர வீசி எறிந்துவிட்டேன்
கடவுளுக்குப் பயந்து போய்
மேலும் சிற்சில பகுதிகளை
சமூகத்திற்கு சில பகுதிகள்
என சுவடுகள் என்னுள்ளே
தெரியாது அழிக்கப்பட்டன.
அழித்தது அதை எவருமல்ல
அழுததும் பின்பு நானேதான்
சிலேற்றுப் பலகை என்றால்
அழித்துச் சரியாக எழுதலாம்
மறுபடியும் மீள முடியாது

முடிந்தால் எப்படி இருக்கும்
முடியாத நப்பாசைதான்!
இருந்தும் சிந்தனைதானே
நினைத்துத்தான் பார்ப்போமே
அதையாவது அழிக்கலாம்
ஆகா.. இன்னும் நாலைந்து
பெண்களுக்குக் காதல் கடிதம்
கொடுத்திருக்கலாமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறுபடியும் வேதாளம் மரத்தில்?

இல்லை நாலைந்து பிள்ளைகள்
பெற்றுப் போட்டிருக்கலாம்
தமிழ்குடி குறைந்து போகுதாம்
சனத்தைக் கூட்டியிருக்கலாம்
ஆனால் கண் கெட்ட பின்!

கவலைப்பட்டு என்ன செய்வது
பெண்ணாய் பிறந்திருந்தால்
சீதனம் கண்டபடி கேட்பாரரே
கூடப் படித்திருக்கலாமோ?
டாக்டராக மட்டும் இல்லை
கடைசி தாதியாக வாவது
ஊசி போடணு மே வேண்டாம்

சாமியாராக வந்திருக்கலாமோ
இல்லை அது வேறு பிரச்சினை
நடிகராக வந்திருக்கலாமோ
மொத்தமான கதாநாயகியை
தூக்கிக் கொண்டு டுயட் டும்
பாடிக்கொண்டு ஓட வேண்டும்
என்னால் அது முடியாதே

தேர்தலில் நீண்டிருக்கலாமோ
அதுக்கு தமிழ் நாடுதான் சரி
சுரண்டலாம் பதுக்கலாம்
வாத்தியாராக வந்திருக்கலாம்
பெடியங்கள் திட்டுவாங்கள்
பெண்ணாகப் பிறந்திருக்கலாமோ
இன்னும் பாது காப்பில்லையே
கற்பழிச்சுக் கொண்டிருப்பாங்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முதுமையை சற்று நினைக்க
இப்ப பயமாக இருக்கிறது
ஆம்புலன்ஸ். போகும்போது
இதயம் பலமாக அடிக்கிறது
மருந்து மாத்திரை மேசையில்
மரண அறிவித்தல் பத்திரிகையில்

ஆமா இப்ப என்னதான் குறை
நான் ஏன் பயப்பட வேண்டும்
பூரணமான வாழ்க்கைதான்
வாழ்ந்து கொண்டிருக்கிறேன்
நல்ல குடும்பத்தில் பிறந்தேன்
எனது குடும்பத்தை வளர்த்தேன்
குடும்பங்களை வாழவைத்தேன்
நல்ல மனைவி பிள்ளைகள்
உடன் வந்த மகள், உயிர் பேத்தி
சொந்த பந்தங்கள் நண்பர்கள்
சிரிக்கிறேன் சிரிக்க வைக்கிறேன்

கொடுக்கிறேன் மகிழ்கிறேன்
செய்ய நினைத்ததெல்லாம்
செய்து முடிக்கிறேன் முடிப்பேன்
சோகத்தையும் இரசிக்கிறேன்
சந்தோசத்தை கொண்டாடுகிறேன்
ஒவ்வொரு நாளையும் என்றும்
இன்பமாய்க் களிழ்கிக்கிறேன்!
நிம்மதியான சுகமான தூக்கம்
வாழ்த்துகிறேன், போற்றுகிறேன்
எவரையும் தாழ்த்துவதில்லை
எதையும் எதிர்பார்ப்ப தில்லை
எவரிடமும் கையேந்துவதில்லை
பலரைக் கைதூக்கி விட்டுள்ளேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சுவடுகள் ஆங்காங்கே
மிக ஆழமாகப் பதிந்துள்ளன
அவை நான் செய்த நல்லவை
மானுடனாக வாழ்ந்ததற்கான
மிகவும் அழுத்தமான சுவடுகள்
பிறவிக்கு அர்த்தம் தந்துள்ள
நான் பதித்த நல்ல சுவடுகள்

எனக்குள் இருக்கும் கடவுள்
இறுதிவரை என் மனைவி
கண்ணீருக்கு இரு பிள்ளைகள்
யாத்திரைக்கு சொந்த, பந்தம்
நண்பர்கள் செய்த தர்மங்கள்
சரி, கூட்டிக் கழித்து பெருக்கிப்
பொறுக்கிப் பார்த்தால் தெரியுது
நானும் நல்லதொரு வாழ்வை
மிகவும் அர்த்தமுள்ளதான
நாலு பேர் மதிக்கக் கூடியதாக
பிறப்பை வாழ்ந்திருக்கிறேன்

எனக்குள்ளே மனச் சாட்சியோடு
இரண்டறக் கலந்துள்ள ஆண்டவா!
நான் மீண்டும் பிறக்க வேண்டும்
என் மக்களுக்கு இப்பிறப்பை விட
மேலும் சேவைகள் செய்வதற்கு
வல்லமையை எனக்குத் தருக
இல்லாதோரை இல்லாமற் செய்ய
இறைவா வலிமையை அருள்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலை கடல் கடந்தாலும் அடையாளம் வேண்டும்!

**அலை** கடல் கடந்தாலும் எமக்கு
அடையாளம் வேண்டும்
ஆங்கிலம் கதைத்தாலும்
எமக் கென்றும்
செந்தமிழ் நாவில் வேண்டும்
ஆண்டவன் இருந்தாலும்
உனக்கு
அயராத முயற்சி வேண்டும்
பானையிற் குறைந்தாலும்
பசிதீர்க்க மனம் வேண்டும்
காதலில் வீழ்ந்தாலும்
அவளைக் காக்கும் திறன்வேண்டும்
துன்பம் வந்தாலும்
தாங்கும் பலம் வேண்டும்
பாயிற் படுத்தாலும்
நிம்மதியாய்த் தூங்க வேண்டும்
நோயில் வீழ்ந்தாலும்
மனதில் தெம்பு வேண்டும்
மனைவி அடித்தாலும்
அழாது சிரிக்க வேண்டும்
ஒரு முறை விழுந்தாலும்
மறு முறை எழ வேண்டும்
தோல்வியே வந்தாலும்
துவளாத மனம் வேண்டும்
குறிக்கோளை முன் வைத்து
முன்னேறிக் காட்ட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நன்றி இவர்களுக்கும்

**கடல்** கடந்து சென்று பொருளீட்டி எமக்கு
வளமான நல்வாழ்வு தந்த எங்கள் தந்தை,
உடல் நலம் பேணிக் காத்து, பாசத்தோடும்
பாலோடும் தமிழோடு பண்பாடு தந்த தாய்
அன்னையாய் விளங்கும் அன்புசால் அக்கா
அன்பால் அரவணைக்கும் எனதன்புத் தங்கை
ஆலமரமாய் அன்பைப் பேணும் சின்னண்ணர்
கவசமாக என்னைக் காக்கும் என் மனைவி
படிக்காத மேதையாகப் புகழ் கண்ட மாமியார்
ஆண்டவன் பெரும் கொடையாம் புதல்வர்கள்
மகளில்லாக் குறை தீர்க்கும் எமது மருமகள்
வாழ்க்கையில் ஊன்று கோலாக என் பேர்த்தி,

வழிகாட்டிய எமது மூத்த அண்ணர் மனோகரன்
ஒளியூட்டிய தொழிலதிபர் பெரியவர் துர்க்காராம்
இசையாகவே வாழ்ந்து மறைந்த தம்பி ஐங்கரன்
அன்பு அண்ணிமார், மைத்துனர்கள் மைத்துனிகள்
பெறாமக்கள் மருமக்கள் என் சொந்த பந்தங்கள்

ஆதி நட்போடு ஆதரித்த ரோசா விமலா தம்பதியர்
முதல் நட்பாக நாம் கண்ட உறவுகள் ஜோர்ஜு சூசன்
தவப்பேறாகப் பெற்ற பாலா மாலினி, சாந்தாராம் சசி
ரவி அருணா, மது நந்தா, புவனா பாஸ்கர்,
தமிழ் பள்ளியோடு அருள் பாலு தம்பதிகள்
புலம் பெயர்ந்து, பண்பால் என் மனம் புகுந்து
சிகாகோ வாழ்கின்ற இலங்கை நண்பர்கள்
நினைவு மரத்தால் அடையாளம் பொறித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்போடு நண்பர், டாக்டர் ஸ்கந்த குமார்
அன்போடும் பண்போடும் சிவராஜன் சகோதர்கள்

உதவி செய்யக் காத்திருக்கும் லிங்கேஸ் குழுவினர்
உறவுகளுக்கு உதவும் டாக்டர் ஜெயேந்திரன்
கைவண்ணத்தால் உதவும் நண்பர் பார்த்திபன்
சுவையாகக் கவி பாடும் அவர் மனைவி சுகந்தி
கடல் கடந்த சொந்தமாக தம்பதிகள் வரன் சுஜி
எப்போதும் உதவுகின்ற உறவுகள் சிவா குமுதினி
சிகாகோ தமிழ்ச் சங்கம் இடைமேற்குத் தமிழ்ச் சங்கம்
இலங்கைத் தமிழ்ச் சங்கம் (சிகாகோ), அமெரிக்கா
உலகெங்கும் தமிழ், பண்பாடு, சமயம் பேணும்
தமிழ் சங்கங்கள், ஒன்றியங்கள், குழுக்கள்
ஆட்கொண்ட வள்ளல் ஆறு திருமுருகன்
இல்லார்க்கு ஈயும் என்னினிய உள்ளங்கள்
தமிழக வைத்தியர் வையாபுரி வெங்கடேசன்
மதுரை வாழ் நண்பர் இளங்கோ குடும்பம்,

தமிழ்நாடு வரும்போதெல்லாம்
தங்க வைத்துத், தாங்கும் ரவி ரஜீவி குடும்பம்
ஊர் விட்டு உலகெங்கும் பரந்துவாழ் தமிழர்கள்
எமது மண்ணை இலங்கவைக்கும் அறிஞர்கள்,
கலைஞர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள்
தாய்மண் சொந்தங்கள், பந்தங்கள், தொண்டர்கள்
கடல் கடந்தும் இலங்கும் திரு. நந்தகுமார்
பால்ய நினைவுகளோடு மருமகன் சிறீ ரங்கன்
திருமணச் சாட்சியாகக் கொழும்பு குகமூர்த்தி
ஜேர்மனியிலிருந்து நலம் கேட்கும் கேதீஸ்
ஊக்கம் உற்சாகம் தரும் உறவு நோர்வே பிரபு
உழைப்பால் உயர்ந்து உள்ளத்தால் பரந்து
அன்பால் அணைத்த சம்பந்தி போல் பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் கடந்த வாலிபத்து நட்போடு சச்சி, டிக்சன்,
அவுஸ்திரேலியா நண்பர்கள் ஆனந்தன் சபேசன்
இழந்த உடுவில் மணி, இணுவை திருச்செந்தி
பிரிந்த நண்பர் பேராசிரியர் சௌந்தர பாண்டியன்,
மேடிசன் சிவாகுமார், ஜெர்மனி செந்தில், வள்ளி
மருமகன் இலண்டன் இரவீந்திரன், நித்தியானந்தன்,
சிரிக்க வைத்துப் பிரிந்த நவாலி யூர் இன்பராசா
சிரிக்க வைக்கும் நகைச்சுவை நடிகர் வடிவேலு
சிந்திக்க வைத்த எழுத்தாளர் பாலமுருகன்
வியக்க வைக்கும் எமது ஊரான் சிவருஷி
மெய் சிலிர்க்க வைத்த நடிகர் திலகம் சிவாஜி
கவியரசு கண்ணதாசன், இசையரசி சுசிலா
எழுத்தால் கவர்ந்த தமிழ்நாட்டு ஜெயகாந்தன்
எழுத வைத்த இணுவையூர் கலகலப்பு தீசன்
கவிபாட வைத்து, புவிபுகழ வைத்து, கவிதை
நூலாக்க வைத்த ஆசான் கவிஞர் ச.வே
தொழிற் துறையில் பணியாற்றிய நண்பர்கள்

கவர்ந்திழுத்த இசையும் என் செந்தமிழும்
வணங்கும் கடவுளும் அவரின் பிரதிநிதிகளும்
உரிமையோடு வாழ விரும்பும் எனது மண்
வாழ்வு விக்கும் போது கைகொடுக்கும் விக்கி,
அன்பும் பண்பும் உருவான மைத்துனர் கண்ணன்
வளமான வாழ்விற்கு வித்திடும் இளைஞர்கள்
பெறாத மகன் நண்பர் கிரிதரன் பரமநாதன்
என்னோடு உடன் பிறவாத் தம்பி உதய குமார்
ஆலோசகர் நண்பர் சட்டத்தரணி ஜெகநாதன்
குறள்வழி வாழ்ந்தின்று மறைந்த ராம் மோகன்
தமிழ் ஆர்வலர் இனிய நண்பர் விஸ்வநாதன்
தமிழையே சுவாசிக்கும் தமிழன்பர் வ.ச.பாபு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தவனாக இனியவர் மருத்துவர் இளங்கோ
முத்தரசன் என்ற பெயரில் தமிழ் கவிதைகளால்
முழக்கமிட்ட பேரறிஞர் முனைவர் சவரிமுத்து
தங்கள் மண் உரிமைக்காகப் போராடியவர்கள்
மண்ணுக்காக உயிரை அர்ப்பணித்த மாவீரர்கள்
பெற்ற பெருமையோடு தவிக்கும் பெற்றோர்கள்

அகம் நிறைந்து மனம் பதிந்த முகநூல் நண்பர்கள்
கடல் கடந்து வந்த என் வாழ்க்கையில் என்றும்
உடனிருந்தும், உள்ளத்தில் வாழ்ந்தும் வாழ்த்தியும்
எனது வாழ்வை வளமாக்கி மேலும் உயர வைத்து
வழிகாட்டிகளாகவும் எனக்கு முன்னோடிகளாகவும்
இன்ப துன்பங்களில் எப்போதும் பங்குகொண்டு
என்னிதயத்தில் என்றென்றும் நீங்காது வாழும்
அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறிந்து வாழ்
அறிஞனாவாய்–எதையும்
உணர்ந்து வாழ்
உயர்ந்து வாழ்வாய்
பகிர்ந்து வாழ்
போற்ற வாழ்வாய் –நிலை
பணிந்து வாழ்
புகழுடன் வாழ்வாய்
கொடுத்து வாழ்
கோயிலாவாய்– என்றும்
சிரித்து வாழ்
சிறந்து வாழ்வாய்
வணங்கி வாழ்
வளமுடன் வாழ்வாய் – உன்
தாயைத் தாங்கி வாழ்
ஓங்கி வாழ்வாய்...

இணுவிலான்
சிகாகோ பாஸ்கர்

பூவரசிவெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org